ஓம் பரப்பிரம்மணேநம :

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

COPY RIGHT] [REGISTERED.

கமலம்-4. Vol. 4. | சென்னை: சுக்கிலஸ்ரீ ஆவணிமீ 1உ 1929-ம்ஸ்ரீ ஆகஸ்டுமீ 16உ | இதழ்-41. No. 41.




ஆநந்த மாநந்த மாநந்தம் பிரம்
மாநந்த மாநந்தமாநந்தம்

குறியன்று குணமன்று குறைவன்று நிறை — வன்று
கூறுமகமன்று புறமன்று வா — னன்று
அறியுமுருவமன்று அறிவென்பதுவு — மன்று
ஆரணமறைக்கு மதீதமான — தோன்று (ஆநந்த)

ஆணன்று பெண்ணன்று அலியன்று அது — வன்று
அந்தகாரவிரு ளன்று ஒளி — யன்று
காணும்பொருளன்று காட்சியானது — மன்று
கருத்தளவாயாயுங் கருணையான — தோன்று (ஆநந்த)

சிற்றின்பமெல்லாம் சிதறிமன — மாழ்க
தேவனைச்சிந்திக்க தேவிட்டாவின்பஞ் — சூழ்க
முற்றின்பவெள்ளநல் வாரியிலே — மூழ்க
மோட்சமெனும்பே ரின்பத்திலே — வாழ்க (ஆநந்த)

பத்து பத்திரிகைகளுக்கு நடுவில் ஒரு "அமிர்த குணபோதினி" யிருப்பதானது, பத்து நக்ஷத்திரங்களுக்கு இடையே ஒரு சந்திரன் பிரகாசிப்பது போலாம். "அமிர்த குணபோதினி"யின் ஒவ்வொரு பக்கமும் அமிர்தமே—அநுபவமே.



K. V. NATARAJAMANI,
VELLANGANI-ILLAM
O. PILLAI KADU
SANYASEE GUNDU
SALEM-636 008.

**"உண்மையான சமயமென்பது எது?"** சர்வ வியாபக அன்பையே யதார்த்த சமயமென்பர். பிறரை நீ எப்படிப் பகைக்கலாம்? அவர்களைப் பகையோடே எப்படி நடப்பிக்கலாம்? சமயமென்கிற பெயரினால் அவர்களிலிருந்தும் நீ எப்படிப் பிரியலாம்? சமயத்தின் முக்கிய உண்மை யென்னவென்றால், கடவுளைத் தந்தையாகவும், மனிதனை உன் ஸகோதரனாகவும் நேசிப்பதல்லவா? உண்மையாகவே சமயத்தின் நோக்கம் ஐக்கியமாக்கி ஒன்றாகச் சேர்ப்பதற்கேயாம்; பிரிப்பதற்கல்ல. மனித ஜாதிக் கூட்டத்தை யெல்லாம் ஒன்றாய்க் கூட்டி வைப்பதற்கே யன்றி, கணக்கற்ற பிரிவுகளாய்ப் பேதப்படுத்துவதற்கல்ல. பிரிவு—பேதம் இல்லாமற் செய்வதற்கேயன்றி பகையாளி யாக்குவதற்கல்ல, ஸர்வ வியாபக அன்புடன் கூடிய மதுரமான சமயத்தின் நோக்கம் இதுதான். அன்பு, ஐக்கியம், சமாதானம் என்பதே மதத்தின் குறிகள்.

***

**"ஸகோதரத்வ அன்பின் மாதுர்யம்"** பகவத் பக்தியிலீடுபட்டவனொருவனுக்கு எதிர்படும் யாவும் ஸகோதரத்வ சாயலாய் விளங்கும். எல்லா மனிதர்களையும் கடவுளுக்குச் சம்மந்தப்பட்டவர்களாய்ப் பார்க்கிறான். எவ்வுருவினிடத்தும் பகவத்ஸ்வரூபம் அவனுக்குத் தோன்றுகின்றது. ஒருவரையும் அசட்டை பண்ணுகிறதில்லை. அவனுடைய ஆத்மாவில் அன்பு பூரணமாக நிறைந்திருக்கின்றது. அவன் எல்லா மனிதரையும் கூப்பிடுகிறான்; யாவரையும் கட்டித் தழுவுகிறான். கட்சி, ஆவேசம் முதலியவற்றிலே அவன் மனது பந்தப்பட்டிராமல் அவைகளுக்கு மேற்பட்டிருக்கின்றான். உலகம் அவனுடைய வீடா யிருக்கிறது. மானுட குலமோ அவனுடைய குடும்பமா யிருக்கின்றது. கடவுளோ அவனுடைய தந்தையா யிருக்கிறார்! ஸகோதரத்வ அன்பு எவ்வளவு மதுரமாயிருக்கின்றது! எவ்வளவு மேன்மைப்படுத்துகின்றதா யிருக்கின்றது! அதன் செல்வாக்குகளை எவ்வளவு உயர்த்துகின்றது! பேத சிந்தனைகளை யெல்லாம் சின்னபின்னமாக வெட்டி யெறிந்து, மனிதனுடைய சுபாவ உயர்குணங்களைப் பிரகாஸப்படுத்தி, அவனுடைய பரம பிதாவுக்கும் ஸகோதரர்களுக்கும் எந்தபடி நடந்துகொள்ளவேண்டுமோ அந்தக் கடமைகளைப் பட்சத்தோடும் செலுத்த ஸகோதரத்வ அன்பானது அவனுக்குக் கற்பிக்கின்றது. அந்தப் பரிசுத்தமான கருத்துக்குமுன் எப்படிப்பட்ட தாழ்வும், இழிய மனமும், சிற்றின்பமும் காலைப்பொழுதில் சூரியன் முன் மூடுபனி போல் பறக்கின்றன. உயிர் வாழ்க்கையைக் கசப்பாக்கி மனிதரைப் பிரிக்கச் செய்கிற குரோதம், பகை, மனவெறுப்பு மற்ற எல்லாக் கெட்ட குணங்களும் ஸகோதரத்வ அன்புக்குமுன் ஒருமிக்கக் காணாமற் பறக்கும். மோட்ச மண்டல மகிழ்ச்சி ஆத்மாவிற் பெருகும்; கடமை இதமானதா யிருக்கும்; ஒழுக்கத்தில் ஆநந்த முண்டாகும். எவர்களுடைய ஹிருதயங்கள் பகவத் சாயையோடுங் கூடிய மதுரமான ஸகோதரத்துவ அன்பினால் நிறைந்திருக்கின்றதோ, அவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்களா யிருக்கிறார்கள். மெய்யாகவே பகவத் பக்தியி லீடுபட்டு ஸகோதரத்துவ நிலையில் வாழ்வோமாகில், நமக்குப் பூமியின் கண்ணேயே மோட்ச மண்டல மிருக்கிறதென்று எண்ணவேண்டும்.

---

உண்மையான யோக்கியர்கள் அதிக கடிதங்கள் எழுதமாட்டார். மயக்குகிறவர்களும், ஏமாற்ற நினைப்போரும், காரியவாதிகளுமே பல கடிதங்களை ஓயாது வரைவர். இவர்களின் பல கடிதங்கட்கு ஒரே பதில் தந்து ஒதுங்குக,

"அந்தநாள் எந்தநாள் என்று ஏங்குதே நெஞ்சமே." ஆ! எப்பொழுது ஸமஸ்த பரிபூரண சமாதானமும் மகிழ்ச்சியுமுடைய அந்நாள் வருமோ! எப்பொழுது எல்லா மனிதனும் அவனுடைய ஆழ்ந்த ஹிருதயத்திலிருந்து "கடவுள் எனது தந்தை—மனிதன் எனது ஸகோதரன்" என்று கூப்பிடுவானோ! அவ்வண்ணமாக ஆர்வத்துடன் அழைப்போன் ஒரு கிறிஸ்துவனுமல்ல, ஒரு ஹிந்துவுமல்ல, ஒரு இஸ்லாமியனுமல்ல, அவனே நம்முடைய ஸகோதரனுயிருப்பான். அவன் ஆப்பிரிக்கா தேசத்தானு யிருக்கட்டும், அல்லது ஆசியா தேசத்தானு யிருக்கட்டும், அல்லது ஐரோப்பா தேசத்தானுயிருக்கட்டும், அல்லது அமெரிக்கா தேசத்தானு யிருக்கட்டும், அவன் கடவுளாகிய நமது ஒரே தந்தைக்குப் பிறந்தவனல்லவா? கடவுள் செல்வமுடையவனுக்கும் எளியவனுக்கும் அறிஞனுக்கும் அறிவில்லாதவனுக்கும் தந்தையல்லவா? வெள்ளைக்காரரும் கருப்பு மனித ஜாதிகளும் அவருடைய கைவேலைகளல்லவா? அவர் என்னுடைய தந்தையல்லவா? உம்முடைய தந்தையல்லவா? மற்ற எல்லா மனிதருக்கும் தந்தையல்லவா? ஆகையால், பூமியின்கண் ஒவ்வொரு மதத்தையும் கடவுளைக் காணும் வழியிலே ஒவ்வொரு பாதைபோலக் கருதி அவரவர்களின் முன்னோர் காட்டிய வழியில் அவரவர்கள் சென்று உய்யக்கடவாராக. மத சச்சரவுகள் வேண்டாம். மனித ஜாதியில் மதபேதிகளுக்கு மத்தியில் உண்டாயிருக்கிற ஒவ்வாமையையும், சண்டையையும், வாக்குவாதத்தையும் ஒழிக்கக் கடவோமாக. கடவுளினது பரிசுத்த மகத்துவ குடும்பத்தை வேறுபடுத்தி விரோதமாக்கும் மத தூஷணைகளை அகற்றுவோமாக. எல்லோரையும் வாரீர் என்று அன்புள்ள இதயத்தோடும் அழைப்போமாக. ஓ! ஸகோதரத்வ அன்பே! நீ மோட்ச மண்டல இன்பமயமா யிருக்கிறாய்! உன்னுடைய அன்பும் சமாதானமுமுடைய விருதுக்கொடியை விரிக்கக்கடவாய்! எல்லா தேசங்களையும், எல்லா தேசத்து ஜனங்களையும் ஸகோதர பட்சமாகிய திவ்ய பரிசுத்தக் கட்டுகளால் அல்லது தளைகளால் பந்தத்துவப்படுத்தக்கடவாய். ஸகோதரத்துவ மாதுர்யமே! உன்னுடைய ராஜ்ஜியத்தை நாளுக்கு நாள் உலக முழுதும் பரவச் செய்வாயாக. எல்லா தேசத்து ஜனங்களுடனும் பரிசுத்த ஸகோதரத்வ ஸமரஸஞான பாடகர்களின் கூட்டத்திற் சேர்ந்து ஸந்தோஷத்தோடும் மதுரமான ஞானகீர்த்தனம் பாடுவோமாக. கடவுளுடைய குழந்தைகளே! பிரியமான ஸகோதரர்களே! நமது பொதுவான பரம பிதாவினுடைய துவசத்தின் கீழ் அதைச் சுற்றிலும் கூடி நின்று அவருடைய திருநாமத்தை மகிமைப்படுத்துவோமாக.

***

"ஒன்று—அதற்கோப்பில்லை என்பதுவே திடம்" "ஒன்றைப்" பலவாக எண்ணுவதே அஞ்ஞானம். என்றும் "ஒன்றை" நாடித் தொழுவதே விவேகம். அண்டகோடிகளை அந்தரத்தில் வைத்தும், அவை தமது கதிகளிற் பிறழாமற் செல்ல வுய்த்தும், இவ்வண்ணம் எவற்றையும் அந்த "ஒன்றே" நடாத்துவது அதன் மஹா மாய நடனமாம். ஆதிபரஞ்சோதியாகி எங்கும் திகழ்வதாய், அறிஞரின் இதய கமலத்தில் வாசமாகி மகிழ்வதாய், ஒருவரும் அறியாத

---

சாதாரணமாய் யோக்கியமாக உள்ளவர்களும் சில சமயங்களில் தங்களை அறியாமலே திடீரென்று ஏற்படும் தூண்டுதலுக்கு உட்பட்டுச் செய்யத்தகாத காரியங்களைச் செய்துவிட்டுப் பிறகு அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார்கள்.

ஒரு தனிச்சித்து அது. உலகமதில் பலபல பேதா பேதமாய் நடித்துக் காட்டுவதும் அதுவே. தம்மைக் கருதும் அடியார்க்குக் கருணை யளிப்பதுவும் அதுவே. கவிஞர் அறிஞரது கவி துதிகளுக்கு ஒத்து நிற்பதுவும் அதுவே. நிபுணர் மனமதில் நிறைந்த ஆநந்த வெள்ளமும் அதுவே. வேதாந்தம் காட்டுகின்ற மெய்ஞ்ஞான விளக்கின் ஒளியும் அதுவே. மேலோர் விளக்கிய மெய்ப் பொருளான வழியும் அதுவே. நீதியாய் எங்கும் நிறைந்ததோர் தூய வெளியும் அதுவே. நினைக்க நினைக்க ஆநந்த மழை துளிக்கும் நல்ல தேன் துளியும் அதுவே.

பலநதியொருகடல் பாய்வதுபோ னித்தியம்
பலசமயமுமீற்றிற் சேர்வதொன்னிற் சத்தியம்
கலைபலவுமொன்றை யோதுவ பத்தியம்
கடவுளர்பலரென்று சொல்வது பைத்தியம்

* * *

“பரந்தாமனை பஜனை செய்” ஸர்வேசுவரனாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் திவ்ய சரணாரவிந்தங்களில் மனதை நாட்டி பஜிப்பவர் பரமாநந்தத்தைத் தரும் பிரம்ம ஞானத்தை யடைவர். குசேலரின் அன்புக்காக மனமுவந்து அஷ்டைசுவரியங்களையும் அளித்த கருணாநிதியின் மகிமையை மனிதர்களாகிய நாம் உரைக்கத் தகுமோ? கீதாசாரியான ஸ்ரீ கிருஷ்ணன் திருவவதாரம் செய்திராவிட்டால் உலகத்தில் தர்மமார்க்கம் நிலைத்திராது. துஷ்டர்கள் ஹதமாயிரார். எல்லோரும் விவேக சூன்யர்களாய் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் அழுந்திக் கிடப்பர். கீதோபதேசம் செய்த கண்ணனுடைய அவதாரம் ஸர்வ ஜனங்களாலும் ஸமஸ்த தேவதைகளாலும் கொண்டாடத்தக்கது. இந்த ஆவணிமாதம் ஸ்ரீ கிருஷ்ணபகவானின் அவதார மாதம். விராட் ஸ்வரூபராகிய பகவான் நமக்குக் கிருபை செய்யும்படி அவருடைய பாதகமலத்தை ஹிருதயத்தி லிருத்தக் கடவோம்.

* * *

“பகவத் தரிசனானுபவம்” ஜகத்திலுள்ள ஸகல பொருள்களின் உபயோகத்தையும் மகிமையையும் அறிந்து ஆநந்தப்படுவதற்கு புருஷாயுஸ் போதாது. ஒரு தென்னை மரத்தின் உபயோகமும், அது பிள்ளையா யிருந்தபோது உண்ட உப்பு ஜலத்தை மரமானபின் இளநீராக்கித் தரும் விதமும் யோசித்துப் பார்த்தால் எத்தனை ஆச்சரியமுண்டாகிறது? இப்படியே விருக்ஷ ராசிகளையும் பல பக்ஷிகளையும் ஸூர்ய சந்திரர்களையும் ஒரு மனிதன் ஆராய்ந்து பார்த்து ஸந்தோஷிக்க நினைத்தால் எத்தனை யுகங்கள் செல்லும்? அற்ப ஆயுளையுடைய மனிதன் தனக்கென்று பகவானால் படைக்கப்பட்ட ஸகல வஸ்துக்களின் உபயோகத்தையும் அறிந்து அனுபவித்து ஆநந்தமடைவதைவிட அவைகளை சிருஷ்டித்த பகவானை யறிவது பரம சிலாக்கியமான காரியம். எந்த ஒன்றை அறிந்தால் ஸகலத்தையும் அறிந்ததுபோலாகுமோ அந்த ஒன்றாகிய ஆத்மாவை யறிவது சிறந்த காரியம். ஆதலின் ஒவ்வொருவரும் ஆத்ம ஞானத்தை யடைய முயல்வது அத்யாவசியம். அதை அறிய முயலாதவரை மனுஷ்ய ஜன்மம் வியர்த்தமேயாம்.

* * *

"உற்ற ஸஞ்சீவினியை யுண்ணுதொழியும் மதியற்றவர்போல்." கையிற் கிடைத்த உயிர்தரும் மருந்தாகிய ஸஞ்சீவியைப் புசிக்காமல் விட்டுவிடும் புத்தியில்லாதவர்கள்போல, நமக்குத் தாயாகவும் தந்தையாகவும், உயிருக்குயிராகவும், உறவினராகவும், வாழ்வாகவும், துணையாகவும் நம்மிடத்தில் வீற்றிருக்கும் கடவுளைத் துதிசெய்து, நமக்குள்ள குறைகளை யெல்லாம் அவருக்கு அறிவித்து, நமக்குவேண்டிய பல வரங்களையும் பூரணமாகக் கொடாவிடில் விடமாட்டேனென்று பலமுறை அவருடைய பாதத்தில் விழுந்து ஒவ்வொரு நிமிஷமும் அவரை வாழ்த்தாவிடில்—நெஞ்சமே! நீயே சொல்; இனி நமக்கு உதவி செய்பவர்கள் வேறே யார்? இக்கருத்தைப் பின்வரும் பாடலிற் காண்க.

"உற்றசஞ் சீவினியை யுண்ணு தொழியுமதி
யற்றவர் போன் மாதாவா யப்பனு யாருயிராய்ச்
சுற்றமாய் வாழ்வாய்த் துணையாய்நம் பாலுறையுங்
கோற்றவனைப் போற்றிக் குறையிரந்து பல்வரமு
முற்றநல் காயாயின் விடேனென்று முறைகால் பூண்டேவ்
வற்றமு மேத்தோ மினிவேருருதவி சோன்மனமே."

---

## அனுதாபக் கடிதங்கள் :—

"அமிர்ததுணபோதினி" வகையில் நமக்குப் பெருந் துணையாய் நின்ற ஸ்ரீமான் P. E. பாஷியம் நாயுடு கடவுளின் திருவடி நீழலை யடைந்ததின் பொருட்டு அவரது பிரிவுக்காக வருந்தியும், அவர் வரைந்த விஷயங்களைப் பாராட்டியும் நமது சந்தாதாரர்களான அன்பர்கள் பல்லோரிடமிருந்து அனுதாபக் கடிதங்கள் அநேகம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர்களனைவருக்கும் இப்பத்திரிகையின் மூலம் நமது கண்ணீரைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பத்திராசிரியர்.

---

### பிறகு சிந்தித்து ஆவதென்ன?

ஒருவரது விருப்பத்தை அவரது பிராணனுள்ளபோது நிறைவேற்றி வைக்காமல், அவர் உலகு துறந்துவிட்டபின், தாங்கள் அவரைத் திருப்திபடுத்தத் தவறிப்போனதைக் குறித்து வாணுள் முற்றும் வருந்தி யாவதென்ன? அவர் அப்படி மறைவாரென்று எண்ணுது பிறகு செய்யலாமென்று நினைத்த எண்ணத்தில் பிழை இல்லையேனும், ஒருவர் கேட்டதை அத்தருணமே செய்துகொடுத்து விடுவதிலுள்ள திருப்தி —"பிறகு" என்பதில் ஏற்படாது. கேட்ட அளவு செய்யச் சக்தி யில்லாவிடினும், அதில் ஒரு பாதிக்கேனும் கையிலுள்ள காசுக்குத் தக்கபடி ஒரு சிறிதாவது செய்து திருப்தி கூட்டுக. இது பின்னுக்கு எவ்வளவோ மனோசாந்தி தரும்.

அமிர்தகுணபோதினி

சுக்கிலஹு ஆவணிமீ 1௳

# சொத்துக்களின் சுவாதீனம் ஆதியில் எவ்வாறு உண்டானது?

ஆதியில் இந்தப் பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கும்போதே ஸர்வ தயாபரரான கடவுள் ஸகல ஜீவன்களும் சுகமாய் வாழ்வதற்கு அநுகூலமாய் முதலில் மிகவும் விஸ்தீரணமான ஆகாயம், வாயு, நீர், நெருப்பு, நிலமாகிய இப்பஞ்ச பூதங்களையும் உண்டாக்கிப் பின்பு அவற்றில் மனிதர், பசு, பட்சி, மிருகம், ஊர்வன, நீர்வாழ்வன முதலாகிய பல ஜீவன்களையும் படைத்தார். அவ்வளவேயொழிய இந்தப் பொருள் இன்னாருடையதென்று உரிமை யேற்படுத்தி ஒன்றையும் படைக்கவில்லை. அவற்றுள் மனிதர் விசேஷ புத்தியும் விவேகமு முடையவர்களாதலால், அவர்கள் மற்ற ஜீவன்களை யெல்லாம் தமது சுகத்துக்கு உபயோகமாக வைத்துக்கொள்ளும்படி யாயிற்று; இவ்வளவுதான் ஆதியில் ஏற்பட்டது. யார் எவ்வளவு தூரம் தத்துவவிசாரம் பண்ணிப் பார்த்தாலும் இதற்குமேல் வேறொன்றும் சொல்வதற்கில்லை; ஆதலால் இப்பூமியும் அதிலுள்ள பலவிதமான பொருள்களும் ஸகல மனிதர்களுக்கும் பொதுவான சொத்து. முதலில் இப்பூமியில் குடிகள் விசேஷமா யில்லாமலிருந்தபோது எல்லாம் பொதுவாகத் தானிருந்தன; அந்தப் பொதுவான சொத்திலிருந்து தமக்கு வேண்டியமட்டும் கைப்பற்றி அவரவர் அநுபவிக்கத் தொடங்கினார்கள்.

அக்காலத்திலிருந்த மனிதருடைய நிலைமைக்கு இவ்வளவே போதுமானதா யிருந்தது. இப்போதும் மனிதர்கள் பூர்வகாலத்து நிலைமையிலேயே இருப்பார்களானால் அப்படியே தான் எல்லாப் பொருள்களையும் பொதுவாக வைத்துக்கொண்டு அநுபவித்து வருவார்கள். ஐரோப்பியர் முதலில் அமெரிக்கா தேசத்தைக் கண்டு

---

பணம் இல்லை என்று தன் மனைவிக்கோ தன் மக்களுக்கோ கடிதம் எழுதிவிடலாம். அவர்களும் அதை நம்பிவிடுவர். பந்துக்களுக்கு அவ்விதம் வரைந்திடினோ நம்பார், பழிப்பார். எழுதுவதினும் எழுதாமையே மேல்.

பிடித்தபோது அத்தேசத்தில் அநேகர் பூர்வகாலத்து மாதிரியாய் எல்லாப் பொருள்களையும் சமுதாயமாகவே அதாவது யாவருக்கும் பொதுவான சொத்தாகவே வைத்துக்கொண்டு ஜீவித்து வந்தார்க ளென்று பிரத்தியக்ஷமாகக் காணப்பட்டது. மற்ற தேசங்களிலும் ஆதியில் எல்லாம் அதேவிதமாகப் பொதுவா யிருந்ததாகவே சரித்திரங்களாலும் குறிப்புகளாலும் தெரிய வருகின்றது. அவனவன் கைப்பற்றி அனுபவித்துக் கொண்டிருக்குமளவும் அதது அவனவனுக்குத் தற்கால சுவாதீனமே யொழிய மற்றப்படி யொன்றுமில்லை.

இப்படியாக, இப்பூமி முழுவதும் முதலில் யாவர்க்கும் பொதுவாயிருந்தது; எவனுக்கு எந்தப் பாகமும் பூரண சுவாதீனமாயிருக்கவில்லை. ஒருவன் ஓரிடத்தில் வந்தடைந் திருக்கும்போது அவனைப் பலவந்தமாய் அடித்துத் திரத்துவது உலக நீதிக்கு விரோதமாதலால், தற்காலத்திற்கு மட்டும் அது அவனுக்குச் சுவாதீனமென்று சொல்லும்படியா யிருந்தது. அவன் அவ்விடத்தை விட்டு அப்புறம் போவானானால் உடனே மற்றொருவன் அதைக் கைப்பற்றிக் கொள்ளலாம். அதில் சிறிதும் அநியாயமில்லை. அப்படியே ஸகல விருக்ஷவர்க்கங்களும் யாவருக்கும் பொதுதான். அவற்றின் பலன்களை யாவரும் சமமாகவே அனுபவிக்கலாம். ஆயினும் எவனெவன் எங்கெந்தப் பழத்தைப் பறித்துக் கொள்ளுகிறானோ அது அவனுடையது தான். இந்த நியாயத்தை ஒத்து ஒருவர் இப்பூமி ஒரு பெரிய நாடகசாலை யென்றும், அங்கே நின்றாடுகிற வரையில் அவ்விடம் அவரவர்க்குச் சொந்தந்தானென்றும் உவமைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்.

பின்பு வரவர இப்பூமியில் குடிகளின் தொகையும் அதிகரித்து அவர்களுக்கு ஆசையும் யுக்தியும் அதிகமாகவே, முன்னிருந்தது போல் அனைவரும் கண்டபடியெல்லாம் இருக்கிறதென் றில்லாமல் அவரவர் அந்தந்த இடத்திலே கொஞ்சம் நிலையாக நிற்கும்படியாயிற்று. அப்படியில்லா விட்டால் ஒருவருக் கொருவர் பலவிதமாய்க் கலகமுண்டாகி இவ்வுலகமே சீரழிந்து போயிருக்கும். ஒவ்வோரிடத்தைத் தாமே முதலில் கைப்பற்ற வேண்டுமென்று அநேகர் மேல் விழுந்து தமக்குத் தகுந்த வசதி தேடிக்கொண்டார்கள். இவ்வளவுக்கு விருத்தியடைந்த காலத்திற்குப் பிறகு, மனிதர்களுக்குள் சீர்திருத்தமும் கொஞ்சம் கொஞ்சமாய் உண்டாகவே நிலையாய் வசிப்பதற்கேற்ற இடங்களும், அரைக்குக்கட்ட ஆடைகளும் இவை முதலிய சவுக்கியத்திற்கும் பத்திரத்திற்கும் அழகிற்கும் வேண்டிய உபா

---

உலக அநுபவம் உத்தமர்களிடமிருந்து பெற முடியாது. துஷ்டர்களின் கூட்டத்திலிருந்து தான் கண்டுகொள்ள முடியும். குடும்ப ஒற்றுமை யில்லாத கலக வீடானது பிரபஞ்ச அநுபவங்களுக்கு ஒரு நல்ல ஊற்றுக்கேணியாம்.

யங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆயினும் வேண்டியபோது இஷ்டமான இடத்திலிருந்து காலங்கழிப்பதைவிட்டுத் தமக்கென்று வீடும் வாயிலும் சொந்தமாய்த் தேடிக்கொள்ள ஒருவர்க்கும் விருப்பமில்லை. யதேச்சையா யிருப்பவர்களுக்கு எல்லாம் சொந்தந்தான். ஒருவன் தான் யிருந்த இடத்தை விட்டு அப்புறம் போவானுனல் உடனே மற்றொருவன் வந்து அவ்விடத்தைப் பிடித்துக் கொள்ளாலாம். ஒருவன் தன் உடையை அவிழ்த்துப் போட்டுப் போய் விடுவானுனல் அதை மற்றொரு புதுமனிதன் எடுத்துத் தரித்துக்கொள்ளலாம். இவையெல்லாம் அந்த நாளில் நியாயமாகவே யிருந்தன.

*
* *

ஆனுலொன்று—இருப்பிடத்தைப்பற்றி யோசிக்குங்கால் எல்லாப் பொருள்களையும் பொதுவாகவே வைத்துக்கொண்டு வாழ்கின்ற மிருகங்கள்கூட, முக்கியமாய்த் தங்கள் குட்டிகளைப் போஷிப்பதற்காகவாவது, தந்தமக்குச் சொந்தமாய் வசதிகளேற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆகாயத்திற் பறக்கும் பறவைகளுக்குக் கூடுகளிருக்கின்றன; காட்டில் திரியும் கொடிய மிருகங்களுக்கும் குகைகளிருக்கின்றன. அவ்விடங்களை நாம் எதிர்ப்போமானுல் அவை அது மிகவும் அநியாய மென்றெண்ணி, அவற்றைக் காப்பதற்காகத் தம் உயிரைக்கூட மாய்த்துக் கொள்ளும். வாசஸ்தலமாகிய இடத்தின் மீதுள்ள சுதந்திரப் பிரியம் இத்துணை வலிமை கொண்டிருந்ததால், இந்த இருப்பிடத்தின் அபேக்ஷயானது பின்பு மனிதர்களிடத்தும் தாவி, அவர்களும் தங்களுக்கு வீடென்றும் வாயிலென்றும் ஏற்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டார்கள். ஆயினும் அப்போதே நிலையும் பதியுமாய் ஒரே இடத்தில் நிலை பெற்றிருக்கவில்லை. முதலில் அவ்வீடுகளெல்லாம் தற்காலத்துக்கு உபயோகமான சிறு குடிசைகளும், போகுமிடத்துக் கெல்லாம் கையோடு தூக்கிக்கொண்டு போகும்படியான கூடாரங்களுமாகவே இருந்தனவென்று தெரிய வருகின்றது. அந்தப் பழய மாதிரியாகவே போகிற விடத்திற்கெல்லாம் குடிசையையும் தூக்கிக்கொண்டு திரிகிற எளிய ஜனங்கள் இப்போதும் அநேகர் காணப்படுகிறுர்களன்றே? அசையாப் பொருளான பூமியைப் பார்க்கிலும் அசையும் பொருள்களே முதலில் மனிதர்களுக்கும் சுவாதீனமாகி யிருக்குமென்பது நிச்சயம். ஏனெனில், கூடவே தூக்கிக்கொண்டு அவற்றை நெடுங்காலம் அனுபவிப்பதனுல் அனுபவமே சுவாதீனத்துக்கு ஆதாரமாகின்றது. மேலும், யாவர்க்கும் பொதுவாயிருந்தாலுங்கூட எந்தப் பொருளும் அடிக்கடி செப்ப

---

சிலர் தங்களின் அதிகப்பிரசங்கமான பிசகுகளை நினைப்பதுமில்லை. அதற்காக வருந்துவதுமில்லை. எடுத்துக்காட்டினும் ஏற்றுக்கொள்வதில்லை. என்னவோ தாங்கள் இமயகிரி பர்வதத்தில் இருப்பதாகக் கர்வித்துக்கொள்ளுகின்றனர். கடைசியில் இவர்களும் ஒருநாளில் முடிந்து போகவேண்டியதே.

னிட்டுக்கொண்டு வராவிடில் உபயோகப்படா தாகையால், எவன் எந்தப் பொருளைத் தன் சொந்த உழைப்பினாலேயே செம்மைப்படுத் திக் கொள்கிறானோ அது அவனுடைய சொத்தாகி விடுகின்றது. இது தான் நியாயம்.

இந்த நியாயமும் அநேக சமயங்களில் தலைகீழானது. "பலத் தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு" என்றபடி தேகபலமுள்ளவர் கட்கு மாத்திரமே எதுவும் கைவசமான வழியாயும், பலவீனர்கள் வேறு விதியில்லாமல் பலவான்களுக்கு அடங்கி உடன்பட்டு அடிமை மைகளாகி வீட்டுத் தட்டுமுட்டுப்போல் இருக்கவேண்டியதாயும் இருந்தது. ஒரு பலஹீனனின் கூடாரத்தைத் திடகாத்திர முள்ள தேகி யொருவன் அபகரித்துக் கொண்டால் கேட்பாரில்லை. மிரு கத் தன்மையான பூர்வ காலத்து மனிதர்கள் எவ்வகையிலும் பெருங்கள்ளரா யிருந்தனரென்று அவர்களைக் கண்ட அக்காலத்து யாத்திரா சரித்திரம் எழுதினவர்கள் சொல்லுகின்றனர். அவர்கள் செய்யும் பொல்லாங்குகள் திருட்டென்று சொல்வதற்கும் தகுந்த வைகளல்ல. சொத்துக்களைப் பற்றிய பாத்தியதை இப்படிப்பட்ட தென்ற நியாயமே அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் புத்திக் குத் தோன்றியபடி எதையும் அபகரிப்பார்கள். செய்த திருட்டு வெளிப்பட்டாலும் அவர்கட்கு வெட்கம் கிடையாது. அந்தத் திருட் டை ஒளிப்பதற்காகச் செய்யும் முயற்சி சிறிதும் பயன்படாமல் வெளிப்பட்டுப் போமாயின், கடைசியாய்த் திருடின சொத்தைக் கொடுத்துவிடுவார்கள். ஆதிகாலத்து நிலை இத்தன்மையதாயிருந்தது.

* * *

எல்லாப் பொருள்களுள்ளும் உணவுப் பொருள் முக்கியமாத லால் முதலில் அதை விசாரிக்க வேண்டியது அவசியம். தற்செய லாய் பூமியில் உற்பத்தியாகிற பொருளையே எதிர்பார்த்திருந்து, ஆதி யிலிருந்தபடி அதனாலேயே திருப்தி யடைந்துவிட முடியாமல், மனி தர்கள் பின்பு வேட்டையாடிப் பிழைக்கத் தலைப்பட்டார்கள். வேட் டையாடுவ தென்றால் நமக்கு வேண்டும்போது மிருகங்கள் தம்முயி ரைக் கொடுக்கவும், தாமே வலிய வந்து அகப்பட்டுக் கொள்ளவும் காத்திருக்கின்றனவா? அதனால் அந்தப் பிழைப்பும் செம்மையாய் நடவாமல், காட்டு மிருகங்களுள் மிகவும் சாதுவாயும் எளிதில் பழக் கக்கூடியவையாயு மிருக்கின்ற ஆடு மாடு முதலியவைகளைச் சொந் தமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு அவற்றைக் காப்பாற்றி அவற் றின் பால் முதலியவைகளைக் கொண்டு ஜீவிக்கத் தொடங்கினார்கள்.

---

ஒரு பெண் களங்கமற்ற மனதுடன் சாதாரணமாய்த் தனது பந்துவிடம் பேசுகிறாள். அவனோ மெதுவாக அவளது வனப்பையும், அங்க லக்ஷண சிருங் காரங்களையும், யௌவன பக்குவத்தையும் கவனித்துக் கண் போடுகிறான்,

அவ்வளவு காலத்திலேகூடப் பயிரிடும் நிலம் மேய்ச்சற்றரை முதலிய பலவிதமான பூமிகளும் பல பேர்க்கும் பொதுவாகவே யிருந்தன. ஆனால், பிரசித்தமாய் ஏற்பட்ட பட்டணங்களின் அருகே மாத்திரம் அப்படியில்லை. பட்டணம் மிகக் குடியேற்றமுள்ள இடமாதலால் அவர்களுக்குத் தனித்தனியே பயிரிடு நிலங்களும் மேய்ச்சற்றரைகளும் அவசியமாயிருந்தன. ஒரு தேசத்தில் குடிகள் விசேஷமாய் அதிகரித்தால் அவர்களுக் கெல்லாம் அங்கே ஜீவிப்ப தற்காக சௌகரியங்க ளில்லாதபோது வேறு தேசம் சென்று அங்கு தகுந்த வசதிகள் தேடிக்கொள்ள முயன்றார்கள். ஐரோப்பா தேசம் மிகவும் நெருங்கியதாகையால் அத்தேசத்தார் பல நாடுகட்கும் சென்று ஆங்காங்கு தங்கி ஜீவிப்பதானார்கள். ஒரு தேசம் ஒருவராலும் கைப்பற்றப் படாதிருக்குமட்டும் அது யாவர்க்கும் பொதுதான்.

வரவரப் பூமியில் குடியடர்த்தி அதிகமாகவே, மேல் விழுந்து பழய குடிகளை அடித்துத் துரத்தாமல் புதிதாய்ப் பூமி சம்பாதிப்பது வரவரக் கடினமாயிற்று. மேலும், ஒரே இடத்தில் நிலையாயிருந்து ஒரு நிலத்திலேயே பலனை உற்பத்தியாக்கி எப்போதும் புசிக்கத்தொடங்கவே, தானே பலன் தருகிற பூமியின் செழிப்பு குறைவுபட ஆரம்பித்தது. குறைவு படவே எப்போதும் ஓயாமல் விளைவுண்டாகும்படிப் பூமியைச் செழுப்பிக்க வேண்டிய வழிகளைத் தேடவேண்டிய தாயிற்று. அதனால் பயிர்த் தொழில் சாஸ்திரத்தை மேன்மேலும் விருத்தி செய்யவேண்டிய தாயிற்று. பின்பு பூமியைச் செம்மையாய்த் திருத்திப் பயிர் செய்யாவிட்டால் அது போதுமானவளவு பலன் கொடாதென்பது தெளிவாயிற்று. அதன்படி ஒருவன் ஒரு பூமியை வருந்திப் பயிர் செய்ய, அதன் விளைவைப் பலசாலியான மற்றொருவன் தருணம் பார்த்திருந்து கைப்பற்றி அனுபவிக்கிறதென்றிருந்தால், அந்தப் பயிர் செய்யும் வருத்தத்திற்கு எவன் உட்படுவான்? ஜங்கமப் பொருள்களைப் போல ஸ்தாவரப் பொருள்களிலும் இிது இன்னாருடைய தென்று பிரிவு ஏற்பட்டிராமல் போனால், ஒருவனும் ஒரு இடத்தையும் பயிர்செய்ய உடன்படானாகையால் இப்பூமியெல்லாம் காடாகவே போயிருக்க வேண்டும். அதுமட்டுமல்ல ; மனிதர்களெல்லாம் ஒன்றை யொன்று பிடுங்கித்தின்கிற மிருகம்போலவே மாறியுமிருப்பார்கள். உலகத்தின் ஆதி நிலை அதுதானென்று அநேகருடைய அபிப்பிராயம்.

***

---

புருஷனுக்கும் மனைவிக்கும் கடிதங்களிலே சச்சரவு கிடையாது. அவள் கேட்ட பணத்தை உடனே கடன் வாங்கியாவது அனுப்பிவிடுவான். ஆனால் ஒரு தாசிக்கும் ஒரு காமிக்கும் நடக்கும் கடிதமோ ஸதா மனஸ்தாபமாகவேயிருக்கும். அவன் பணம் அனுப்பாது ஏமாற்றுவான்.

அவ்விதம் இருந்த சீர்கேடான நிலைமை பின்பு மாறி சவுக்கியமும் செய்தொழிலுமாகிய இரண்டும் பாதுகாக்கப் படுவதற்கு முயற்சிகள் தோன்றலாயின. அது காரணமாக மனிதர்களுடைய இயற்கையறிவு—செய்கையறிவாகிய இரண்டும் மேன்மேலும் விருத்தி செய்யப்பட்டு, அவர்களும் நாளடைவில் கனப்படும்படியாயிற்று. பின்பு அவரவருடைய தேவைகளுக்காகச் சொத்துக்கள் சம்பாதிக்க வேண்டியதாகி, அப்படிச் சம்பாதித்த பொருளைக் காக்கவும் அதைப் பின்னும் விருத்தி பண்ணவும் பலபேர் ஒரு சங்கமாகக் கூடும்படியாயிற்று. பின்பு அந்த சங்கம் செம்மையாய் நிலைநிற்கும் பொருட்டு அரசனென்றும், அரசாட்சி யென்றும், சட்டமென்றும், தண்டனை யென்றும் இப்படி இவை முதலியவை யெல்லாம் உண்டாகும்படியாயிற்று. பிறகு யாவர்க்கும் கல்விப் பயிற்சி செய்விக்கவும், அவசியமான யுக்தி சாதனங்களைக் கண்டு பிடிக்கவும், சாஸ்திர சித்தாந்தங்களை ஸ்தாபிக்கவும் இவை முதலியவைகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

***

ஆயினும், இன்னும் ஒரு கேள்வி மிகுந்திருக்கின்றது. ஆதியில் அனைவருக்கும் பொதுவில் சொந்தமாயிருந்த பொருள் ஒருவன் பணம் கொடுத்துக் கொள்ளும்படியான நிலைக்கு எப்படி வந்தது? மேலும், முதலில் யாவர்க்கும் பொதுவான பாத்தியமாகி ஒருவர்க்கும் சுதந்திர மில்லாமலிருந்த பொருள் ஒருவன்தானே சுதந்திரமாகச் சாச்வதமாய் அனுபவிக்கும்படியான நிலைக்கு எப்படி வந்தது? அந்தந்த நிலத்தைத் தற்காலத்தில் கைப்பற்றி யிருந்தது அவரவர்க்குத் தற்கால அனுபவித்திற்குச் சுவாதீனமா யிருந்தது போலவே, பிற்காலத்தில் எந்தெந்த நிலம், யாருடைய அனுபவத்தி லிருக்கிறதோ அவரே அந்த நிலத்தைச் சாச்வதமாய் அனுபவித்து வரவேண்டும்; அதைப்பற்றிப் பாத்தியதை அவர்க்கே யொழிய மற்றெவர்க்கும் கிடையா தென்பதாய் ஏற்பாடாகி யிருக்கலாம். ஆயினும், அனுபவத்தினலே மாத்திரம் ஒருவனுக்கு சுவாதீனம் வந்து விடுமா வென்று அதைப்பற்றி உலக நீதியை விசாரிப்பவர்களுக்குள் வெவ்வேறு அபிப்பிராயமுண்டா யிருக்கின்றது. முதலில் எதெது எவனெவனுடைய அனுபவத்திலிருக்கிறதோ அதது அவனுக்கே உரியதென்று யாவருள்ளும் ஏற்பாடுண்டாகி, அதனல் சுதந்திர பாத்தியதை உண்டாயிருக்கலா மென்று ஒரு மேதாவி சொல்லி யிருக்கிருர். அப்படியில்லை; அப்படிக் கூட்டத்தாருடைய சம்மதி யிருக்கவேண்டு மென்பது அவசியமில்லை; ஏனெனில், முதலில் ஒருவன் ஒன்றைக் கைப்

---

அக்காள் தங்கைகள் ஒற்றுமைதான். அவர்களின் புருஷர்களோ ஒருவருக்கொருவர் விரோதிகளும் சந்தேகிப்போருமா யுள்ளார். சந்தேகிக்கக் காரணங்களும் நேரமவில்லை. காமத்துக்குக் கண் இல்லை யன்ரே?

பற்றி அனுபவிப்ப தென்றால், அதற்கே அவன் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்க வேண்டுமாதலால், அவனுக்கு அதனுடைய உரிமையை ஸ்தாபிக்க அந்தக் கஷ்டமே போதுமானது. அதற்கு அயலாருடைய சிபாரிசும் அனுமதியும் ஏனென்று இன்னொரு சாரார் சொல்லுகிறார்கள். எப்படியாவது ஆகட்டும்; யாவருடைய அபிப்பிராயமும் பூர்வானுபவத்தாலேயே ஸ்வதந்திர பாத்தியதை உண்டாயிற்றென்பதே. முதலில் ஒருவர் அனுபவத்திலும் இல்லாததாய்த் தமக்குத் தகுந்ததாகத் தோன்றின ஓரிடத்தைக் கைப்பற்றி அதைத் தாமே வெகுகாலம் அனுபவித்து வந்து, பிறகு அவரவர் அவ்விடத்துக்கு எஜமானர்களானார்கள் என்பதாக முடிவுபடுத்தலாம்.

***

இவ்விதம் அவரவர் எஜமானர்களான பின்பு சீர்திருத்தத்திற்கு முதற்படியான **"எனது—உனது"** என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொள்ளத் தொடங்கினார்கள். நான் பலசாலியாயும், அடித்துப் பிடுங்கிவைத்துக் கொள்ள வல்லமை யுடையோனாயும் இருப்பதனாலேயே ஒரு பொருள் எனது ஆகமாட்டாது; எவரும் பறித்துக் கொள்ளாதபடி நீ பத்திரமாய்க் காப்பாற்றுவதனாலேயே ஒரு பொருள் (சொந்தமல்லாத பொருள்) உனது ஆகமாட்டாது. பின் என்னவெனின், அவை தமக்குள்ளாகவே ஒவ்வொருவருக்கும் உரியவையான பாத்தியமுள்ள சொந்தப் பொருளா யிருத்தல் வேண்டும். மேலும், நாம் அனுபவிக்கவாயினும், விற்கவாயினும், பிறர்க்குக் கொடுக்கவாயினும் அப்பொருள் உரிய தென்பதாகவும், நம்முடையதென்று நாம் எண்ணுபவை எப்போதும் நம்முடையதே என்பதாகவும் நம்மைச் சுற்றியுள்ள அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுமிருத்தல் வேண்டும். நியாயமான வியாபாரத்தில் ஒரு பண்டத்துக்கு மற்றொரு பண்டத்தை மாற்றுகையில் **மாற்றப்படும் பொருள் அவனுக்கு சொந்தமானதாகவே யிருத்தல் வேண்டும்.** அவ்வண்ணமே அவன் மாற்றிக் கொள்ளுகிற மற்றொரு பண்டமும் **அதைக் கொடுப்பவனுக்கு** நியாயமாய் உரிய பொருளாய் **இருத்தல் வேண்டும்.** இவை போன்ற மூலாதாரமான சீர்திருத்தங்க ளெல்லாம் பின்னர் படிப்படியாய் உண்டாகி, சொத்துக்களின் சுவாதீனமும் பரம்பரைப் பாத்தியதையுடன் தொடரலானது. இதற்குப் பிறகு தான் கடன் கொடுத்தல், கடன் பெறுதல் முதலியனவும் தோன்றியிருக்க வேண்டும். இவ்விதமே படிப்படியாய் உயர்ந்திருக்கக்கூடும். இதுபோன்ற பூர்வ வரலாறுகளைத் தெரிந்துவைப்பது அறிவு வளர்ச்சிக்கு ஏதுகரமாகும்.

---

☞ "அமிர்த குணபோதினி"யின் அடிக்குறிப்புகளை எழுதுவதற்கு வீட்டில் கேவலப்பட்டும், குட்டுப்பட்டும், திட்டுகள் பூசைகள் வாங்கியும், சண்டை கலகங்களில் நோவெடுத்துக் கண்ணீர் சிந்தியும் இருந்தால்தான் முடியுமாம். இது புஸ்தக ஞானமல்ல, பட்டுணர்ந்த பெரிய அநுபவ ஞானம்.

# ஆரோருட் மாவு

## அல்லது கூவப்போடி

கூவப் பொடியானது மிக உபயோகமுள்ள பொருளாகவும், கூவச் செடியைப் பயிர்செய்வது சாமானியமாகவும் இருந்தபோதிலும், தற்காலத்தில் இதை எங்கும் பயிர்செய்கிறதில்லை. எனினும் தென்கன்னடம், மலையாளம் முதலிய ஜில்லாக்களில் மழை காலத்தில், மலைச்சரிவுகளிலும், வெளிகளிலும் கூவச்செடி தானுகவே விளைகிறது. மே, ஜூன் மாதங்களின் மழைக்குப் பிறகு முந்திய வருஷத்தில் எடுக்கத் தவறிப்போன கிழங்குகளிலிருந்து முளைகள் கிளம்பி செடிகள் விர்த்தியாகின்றன. இச்செடிகள் அடுத்த ஜனவரி, பிப்ரவரி மாதத்துக்குள் நன்ருய் வளர்ந்து, கிழங்குகள் விட்டு அவை முதிர்ந்தபிறகு காய்ந்து போய் விடுகின்றன. அக்காலத்தில் ஏழை ஜனங்கள் இச்செடிகளின் கால்களில் தோண்டி அவற்றின் கிழங்கை எடுக்கிருர்கள். பூர்ணமாய் முதிர்ந்த கிழங்கு ஒன்றை எடுத்து ஒடித்து, ஒடிந்த விடத்தில் பார்த்தால் மூன்று வட்டங்கள் காணப்படுகின்றன. மையத்தில் நீல நிறமாகவும், விளிம்பில் வெண்மையாகவும், நடுவில் மங்கலான நீல நிறமாகவும் இருக்கும். நீலமான வட்டத்தில் மாவு பூர்த்தியாய் உண்டாய் விட்டதென்றும், மையத்தில் கொஞ்சம் உண்டாயிருக்கிறதென்றும், விளிம்பில் ஆகவில்லையென்றும் அறியவேண்டும்.

***

கிழங்குகளிலிருந்தும் மாவு எடுக்கும் வகையாவது :—காய்ந்து போன செடிகளின்கீழ் காணப்படும் முதிர்ந்த கிழங்குகளை எடுத்து அவற்றின்மேல் தோலைக் கத்தியால் சரிந்து நீக்கி விடுகிருர்கள். பிறகு கிழங்குகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி கல் உரலில் போட்டு நன்ருய் தோசை மாவு போல் ஆட்டிவிடுகிருர்கள். ஒரு வாய் அகன்ற பித்தளைப் பாத்திரத்தின் நிரம்ப சுத்தமான ஜலத்தைவிட்டு, அப்பாத்திரத்தின் வாய்க்கு ஒரு மெல்லிய துணியை வடிகட்டுவதுபோல் கட்டி, அத்துணி பாத்திரத்தில் உள்ள தண்ணீர் மட்டத்துக்குக் கீழ் அர்த்த கோள வடிவாய்த் தொங்கிக் கொண்டிருக்கும்படி விடுவார்கள். தண்ணீர் மட்டத்திற்குக் கீழ் இருக்கும் இந்தத் துணியின்மேல் அரைத்த கூவைக் கிழங்குக் கூழை வைத்து சுமார் ஒரு மணி காலம் மெதுவாய்க் கையால் கலக்கிக்கொண்டிருப்பார்கள். இப்படிச் செய்வதில் மாவு துணியின் வழியே பாத்திரத்தின் அடியில் சென்றுவிட, கிழங்கில் இருந்த மற்ற குப்பையும், கரடும் துணிக்குமேலே நின்று எளிதில் நீக்கிவிடப்படுகின்றன. பிறகு 3, 4, மணிகாலம் பாத்திரத்தை அப்படியே வைத்திருக்க, மாவு அடியில்

---

சிலருக்கு உபநாயகிகள் வெகு சுலபத்தில் ஜதை ஜதையாகக் கிடைக்கிருர்கள். அவர்கள் என்ன சொக்குபொடி போட்டுக் கொண்டுவருகிருர்களோ தெரியவில்லை. சில ஆடவர்கள் பெண்களை மயக்குவதில் அத்தனை சமர்த்தர்கள்.

நிலைக்கு வந்துவிட, மேலே ஜலம் தெளிந்துவிடுகிறது. தெளிந்த ஜலத்தைக் கீழே வடித்துவிட்டு அடியில் இருக்கும் மாவை மறுபடியும் சுத்தி செய்யும் பொருட்டு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு மாவைக் கலக்கிவிட்டு பாத்திரத்தைத் தனியே வைத்திருந்தால்மாவு தண்ணீரில் கழுவப்பட்டுப் பிறகு பாத்திரத்தின் அடிக்குப் போய் விடுகிறது. தண்ணீரை அப்போது மறுபடியும் வடித்துவிடுகிறார்கள். இம் மாதிரி இரண்டு மூன்று முறை கழுவியபிறகு மாவிலுள்ள ஈரம் நீங்கும் வரை அதை வெயிலில் காயவைக்கிறார்கள். ஒரு பெண் ஆள் சுமக்கக் கூடிய ஒரு கூடைக் கிழங்கிலிருந்து நாலு அணு மதிப்புள்ள ஒரு படி மாவு எடுக்கப்படுகிறது. சாதாரணமாய் நாளுக்கொரு கூடைக் கிழங்கு ஒரு பெண் ஆள் எடுக்கக்கூடும்.

***

கள்ளிக்கோட்டையிலும், அதற்கு சுற்றுப் பக்கத்துக் கிராமங்ளிலும் கூவக்கிழங்கிலிருந்து மாவு எடுக்க கிழங்கைக் கல்லில் வைத்து அரைப்பதற்குப்பதிலாக, "கூவக்கோல்" என்னும் அரம்போன்ற ஒருவித இரும்புக் கோலில் தேய்க்க கிழங்கு மசிந்து கூழாய் விடுகிறது.

***

கூவக்கிழங்கைப் பயிர் செய்வதும், கிழங்கிலிருந்து மாவு எடுப்பதும் மிக எளிதாகவும் லாபகரமாகவும் இருந்தபோதிலும், தற்காலம் நம் மாகாணத்தில் இது பயிர் செய்யப்படுகிறதில்லை. மலையாளம் ஜில்லாவில் தானுக முளைக்கும் கிழங்கையும் கூட பூர்த்தியாய்த் தேடி எடுத்து மாவு எடுக்கிறதில்லை. தென் கன்னடம் ஜில்லாவில் சில ஜாதியார் இக் கிழங்குகளை வெகு ஜாக்கிரதையாய்த் தேடிப் பொறுக்கி குடும்ப உபயோகத்திற்காக மாவு எடுக்கிறார்கள்.

***

முன் ஒரு முறை சைதாப்பேட்டை விவசாய கலாசாலையைச் சேர்ந்த பூந்தோட்டத்தில் கொஞ்சம் விஸ்தீரணத்தில் கூவக்கிழங்கு பயிர் செய்து பார்த்ததில், இக்கிழங்கு செங்கற்பட்டு ஜில்லாவைப்போன்ற இடங்களில் விர்த்தியாகி மாவு தரும் என்றும் தெரியவந்தது.

***

கூவப்பொடி மிக மெல்லியதும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதுமான ஆகாரம். ஆகையால், இதன் கஞ்சி நோயாளிகளுக்குப் பத்தியமாக வைக்கப்படுகிறது. இப்பொடியினல் தோசை, உப்புமாவு முதலியவைகளும் செய்யப்படுகின்றன. மலையாளம் ஜில்லாவில் ஏகாதசி முதலிய உபவாச தினங்களில் கூவப்பொடியால் செய்த பலகாரங்களையே சாதாரணமாய் உணவாக உபயோகிக்கிறார்கள்.

ஜெ. சுந்தர ரங்கராஜு.

---

உலகத்தைச் சுற்றிவந்தால்தான் உலக விஷயங்களை அறியலாமென்பதில்லை. வஞ்சகர், சோரம் போவோர், பிரிப்போர், கலகக்காரர், மோசம் செய்வோர், கௌரவத் திருடர்கள், தாயாதிகள், சந்தேகக்காரர்கள், பெண்கள்—இவர்களிடம் பழகினல் உலகியல்பு வெகு சுலபமாகத் தெரிந்துபோம்.

---

ஒருவன் ஊருக்குக் குல்லா போட்டு சகல சொத்துக்களையும் தனக்கே ஆக்கிக்கொண்டு வாழப்பார்க்க, ஐயோ! அவனுக்குப் பின் அவன் சேர்த்த சொத்துக்கள் அவன் மோசம் செய்தவர்களிடமே திரும்பவும் போய்விடுகிறது!

# தன்முயற்சியுடைமை.



"செய் கருமத்தில் முயற்சியுடையோர்க்குத் தெய்வம் உதவும்." இது கை கண்ட நீதி. கடுகிற் பெரிய கடல் புகுவதுபோல் இச்சிறு வாக்கியத்தில் எண்ணித் தொலையாத மனுஷருடைய அனுபவசித்தி அடங்கியிருக்கின்றது. தன் முயற்சியுடைமையே அவரவரிடத்தில் முளைத்து வளரும் ஊக்கம் அனைத்திற்கும் முதற் காரணமாம். ஒரு தேசத்தில் இம்முயற்சி பலரிடத்தில் விளங்குமானால், இதுவே அத்தேசத்திற்கு வீரமும் வலிமையும் சுரக்கும் மெய்யூற்றாகும். புறத்தினின்று வரப்பெறும் உதவி பெரும்பாலும் பலத்தை ஒடுக்கும். அகத்தினின்று உண்டாம் உதவியோ தப்பாமல் பலஞ்செய்யும். **அவனவன் தன் கருமத்தைத் தானே செய்யவேண்டும்.** பிறர் செய்யச் சம்பவித்தால், தனக்கு அதில் முயற்சியும் அக்கறையும் ஒருவாறு இல்லாமற் போம். பெரும்பாலும் தாமே வழி பிடித்துப் போகாமல் பிறர் பின் செல்வோரும், தம்மைத் தாம் அடக்கி ஆளாது பிறர் அதிகார வசப்படுவோரும் எதற்கும் இயல்பற்று அகதிகள் ஆவார்கள்.

***

ஒருவன் செய்யவேண்டிய கருமத்தை, அவனுக்கு மற்றவன் செய்து உதவுவதாயின், எந்தச் சிறந்த ஏற்பாடுகளாலும் அது முடியாது. அந்த ஏற்பாடுகளெல்லாம் சிறைபட்டுத் தன் உரு மறைந்திருக்கும் அவனை வெளிக்குத் தோன்றி வளர்ந்து திருந்தும்படி சிறை நீக்கிவிடும். அவைகளால் அவனுக்கு ஆகத்தக்க சகாயம் எல்லாம் கூடி இம்மாத்திரந்தான். பிறகு அவன் தன் முயற்சியாலேயே தானே மேலோங்க முயற்சிக்கவேண்டும்.

***

எவ்வளவு நிர்ப்பந்தமான சட்டமும், வற்புறுத்துகையும், தூண்டுதலும், மற்ற சகாயங்கள் யாவுமே சோம்பரை முயற்சியுடையோர் ஆக்கமாட்டாது. சொத்தை அழிப்பவர்களுக்கு நாளைக்கு உதவுமென்று சேர்த்து வைக்க முன்புத்தி உண்டாகாது. வெறிக்கக் குடித்து வழக்கப்பட்டவர்களை அவ்வழக்கம் தவிர்க்கும்படி பிறரால் செய்யமுடியாது. இவ்வாறு சீர்திருத்துவது மற்றொருவரால் ஆகாமற்போயினும், அவரவர் முயற்சியினாலும், சிக்கனத்தினாலும், தம்மை ஒழுங்குபடுத்திக்கொள்வதனாலும் சுலபத்தில் உண்டாக்கிக்கொள்ளலாம். பெரிய சுதந்தரங்களாலல்ல, உத்தமமான சிறிய சாதனங்களாலேயே பெரு நன்மையைத் தேடிக்கொள்ளலாம். ஆனதுபற்றியே திருவள்ளுவ நாயனாரும்,

"தெய்வத்தா லாகா தெனினு முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று **தன்முயற்சியின் பெருமையை** விளக்கிக் காட்டினார். தன் முயற்சியுடையோன் என்றும் வலிமை குன்றான். உத்ஸாகம் அவன் முகத்தில் தவழ்ந்து விளையாடும்.

---

மொத்தத்தில் ஆடவர்களைப் பெண்களுக்கு அருகில் வைக்க நம்பிக்கையே யில்லை யென்று மோசம்போனவர்கள் வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். ஆடவர்கள் திருட்டுக் குள்ளநரிகள்; காமிகள், எங்கோ இருவர் உத்தமர்.

# கொக்கிப்புழு நோய்.

கொக்கிப் புழு நோய் என்னும் வியாதி சிறிய புழுக்களால் உண்டாகிறது. இது நமது குடலை இருப்பிடமாயும் நமது இரத்தத்திலுள்ள சிவந்த அணுக்களை ஆகாரமாகவும் கொண்டு தேகத்தில் வியாபித்து நமது இரத்தத்தைக் கெடுத்து நம்மை சக்தியற்றவர்களாக்கி விடுகின்றது. இந்த நோயால் உயிர் துறப்பவர்கள் நம் நாட்டில் கோடிக் கணக்காவர். ஆகையால் இந்த வியாதியைத் தடுக்க முயலவேண்டும்.

கொக்கிப் புழுக்கள் அரை அங்குலம் நீளமுள்ளவை. இவைகட்கு கொக்கிப்போன்ற கூர்மையான பற்களுண்டு. இக்காரணம் பற்றியே இவைகள் கொக்கிப் புழுக்களென அழைக்கப்படுகின்றன. இவைகள் தங்கள் கொக்கியின் உதவியால்தான் நம் உடலில் பிரவேசிக்கின்றன. பெண் புழுக்கள் கோடிக் கணக்கான முட்டை இடுகின்றன. இவைகள் மிகச் சிறியவை. பூதக் கண்ணாடியால் பார்த்தால்தான் தெரியும்.

**பரவும் விதம்:**—இந்த நோய் கண்டவர்கள் கழிக்கும் மலத்துடன் முட்டைகள் வெளி வருகின்றன. பிறகு முட்டைகள் வெடித்துப் புழுக்களாகின்றன.

நாம் செருப்பின்றி அவ்விடங்களில் நடந்தால் அச்சிறு புழுக்கள் காலில் ஒட்டிக்கொண்டு தங்கள் கொக்கிப்போன்ற பற்களின் உதவியால் தோலை துளைத்து உடலின் உள் புகுகின்றன. உட்சென்ற புழுக்கள் இருதயம், சுவாசக்குழாய், குடல் இவைகளில் தங்கி தீங்கிழைக்கின்றன. பிறகு பெண் புழுக்கள் முட்டையிட்டு மலத்தின் மூலம் வெளிவந்து பலருக்கும் பரவுகின்றன.

இந்த வியாதி உள்ளவர்கட்கு மயக்கம், தலைவலி, வயிற்று வீக்கம், கை கால் வீக்கம் காணும்.

**சிகிச்சை:**—ஒவ்வொருவரும் அவரவர்களின் மலத்தை (இதற்கு என ஏற்படுத்தி இருக்கும் Hookworm Doctor) டாக்டரிடம் காட்டி சோதனை செய்து கொக்கிப் புழு இருக்கின்றதா இல்லையா எனத் தெளியவேண்டும்.

இருந்தால் உடனே மருந்து சாப்பிடவேண்டும். இதற்கு தைமால், சினொபோடியம் தைலம் முதலியவைகள் கொடுக்கப்படுகின்றன. இவைகளை ஆஸ்பத்திரிகளில் இலவசமாகப் பெறலாம்.

**கவனிப்பு:**—மருந்து சாப்பிட்டால் மட்டும் போதாது. மறுபடியும் வராதிருக்க சில வழிகளையும் அனுசரிக்கவேண்டும்.

1. கண்டவிடங்களில் மலஜலம் கழிப்பது கூடாது. 2. காலுக்குச் செருப்பின்றி எங்கும் உலாவுதல் கூடாது.

K. S. மணவாள ஐயங்கார்.

---

அன்பற்றவரை அன்புள்ளவரென்று மயங்கி ஏமாறினால் அங்கு சண்டை மனஸ்தாபமும், கடிதங்களில் கூர்மையான சுடு சொற்களும் புறப்படும். இருவர் மனமும் ஒரே அன்பாயின் அங்கு சண்டைக்குப் பதில் சர்க்கரை யிருக்கும்.

# லைப் இன்ஷியூரன்ஸ்.

## (LIFE INSURANCE.)

### இன்ஷியூரன்ஸ் என்பது கூட்டுறவினாலுண்டாகும் பாதுகாப்பு என்று சொல்லலாம்.

சாதாரணமாகத் தபாலாபீஸ் மூலம் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பார்ஸல் செய்தனுப்புகிற விலைபெற்ற சாமான்களும் கரன்ஸி நோட்டுகளும் ஸர்வ ஜாக்கிரதையுடன் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகின்றன. எவ்விதத்திலும் கெட்டுப் போவதற்கு மார்க்கமேயில்லை. இருந்தாலும் எதிர்பாராத காரணங்களால் ஒரு வேளை கெட்டுப் போனாலும் அதனால் ஜனங்கள் நஷ்டமடையா திருக்கும் பொருட்டு ஒரு சிறு கட்டணம் பெற்றுக் கொண்டு தபாலாபீசில் இன்ஷியூரன்ஸ் செய்கிறார்கள். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், சாமான் கெட்டுப் போனாலும் அதற்கு உடையவர் நஷ்டமடையாமல் தபால் இலாகாதார் இன்ஷியூர் செய்திருக்கிற அளவுக்கு நஷ்டஈடு கொடுக்க உத்தரவாதம் செய்கிறார்கள். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

இதே மாதிரியாக, பலவகையான இன்ஷியூரன்ஸ் தொழில் நடத்தும் கம்பெனிகளும் பல இருக்கின்றன. அவைகளுள் லைப் இன்ஷியூரன்ஸ் என்பது ஆயுளை இன்ஷியூர் செய்வது. பொதுவாக மனிதர்கள் 100-வயது வரை வாழ்ந்திருக்கக் கூடுமானாலும், தற்காலத்தில் நகரங்களிலும் கிராமாந்தரங்களிலும் இருக்கிற சீர்கேடான சுகாதாரத்தாலும் பல கொடிய தொத்து வியாதிகளாலும் நாளுக்கு நாள் மரண விகிதம் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். அகால மரணத்தால் எத்தனையோ குடும்பங்கள் நிலைகுலைந்து தவிக்கும்படி நேரிடுகிறது. உயிருக்குயிரான மனைவியையும் அருமையான குழந்தைகளையும் அலைய விடாமல் பாதுகாக்க வேண்டியது ஒரு குடும்பத் தலைவனுடைய முக்கியமான கடமையல்லவா. அக்கடமையைச் செய்ய ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் லைப் இன்ஷியூரன்ஸ், ஆயுளை இன்ஷியூர் செய்தல்.

இன்ஷியூரன்ஸ் செய்திருப்பவர் ஒருக்கால் அகால மாணத்துக்குள்ளானால் அவர் செலுத்தியிருக்கும் தொகை எவ்வளவு அற்பமாக இருந்தபோதிலும் அதைக் கவனியாமல் இன்

---

தாங்கள் செய்திருக்கும் பஞ்ச மகா பாதகங்களைப் பணத்தின் மகிமையால் மறைத்துவிட்டு, யோக்கியர்களான உத்தமர்களின் சொற்ப தவறுதல்களுக்குக் கண்டித்து அடக்க முயலும்போது, இவர்களின் பூர்வ யோக்கியதையைத் தெரிந்த அவர்கள் இவர்களைச் சற்றேனும் மதிப்பதேயில்லை.

ஷியூர் செய்திருக்கிற பூராத்தொகை யும் கொடுக்கப்படுகிறது. பெருத்த ஆஸ்தியைச் சேர்த்து வைக்க முடியா விட்டாலும் ஒரு குறைந்த தொகைக் காவது லைப் இன்ஷியூரன்ஸ் செய் திருந்தால் தக்க பாதுகாப்பு ஏற்பட்டு விடுகிறது. இதைப்போன்ற ஜனோ பகாரமான காரியம் வேறே இல்லை. உலகத்தில் எவ்வளவோ ஜனங்கள் இன்ஷியூர் செய்து வருகிறார்கள். அதனால் எவ்வளவோ குடும்பங்கள் காப்பாற்றப் பட்டிருக்கின்றன. இன் னும் எத்தனையோ பேர்கள் இன்ஷி யூரன்ஸ் செய்திருந்ததினாலுண்டான லாபத்தின் நிமித்தம் பிழைத்து வருகி றார்கள். எத்தனையோ குடும்பங் ளுக்கு இன்ஷியூரென்ஸ் செய்திருந் ததினால் கிடைத்த பணமே ஆஸ்தி. இந்தப்பணம் கிடைத்திராவிட்டால் அநேகம் பேர்கள் சோற்றிற்குத் திண்டாட வேண்டியதாக இருந்தி ருக்கும்.

மேலும், இன்ஷியூரென்ஸ் செய் தால் அதன் பிரயோஜனம் தனக்குப் பிற்காலந்தான் என்று யோசிக்க வேண்டியதில்லை. ஒருவன் எந்த வய தில் வேண்டுமானாலும் அதன் பலனை அடையலாம். எல்லா வேலையிலும் பென்ஷன் கிடைப்பதில்லை. எல்லா வியாபாரத்திலும் எப்பொழுதுமே லாபம் கிடைப்பதுமில்லை. ஆகையால் தனவந்தானாலும் ஏழையானாலும் உயிரோடு மாத்திரம்இருந்தால் வேலை செய்ய முடியாத காலத்தில் தனக் கும் தன்னுடைய குடும்பத்துக்கும் தகுந்த பாதுகாப்பைத் தேடி வைப்ப தற்கு லைப் இன்ஷியூரென்ஸ் தான் உத்தமமான மார்க்கம். ஆனதால் உட னே முந்துங்கள். ரூல் புஸ்தகத்துக்கு இன்றே எழுதிக் கேளுங்கள்.

## தன்னை எவரும் அறியாதது ஒரு பெரிய உதவி.

உண்மைக்கல்வி நிறைந்த பெரியோர்கள் எங்கோ ஒரு ஒதுக்கிடம் தேடி அங்குபோய் உட்கார்ந்துவிடுகிறார் கள். அதுவே அவர்களுக்கு நிம்மதியான இடம். தங்களை எவரும் அறியாததைப்பற்றி அவர்களுக்கு அதிக ஆநந்தம். அன்றியும், தம்மைத் தெரிந்தவர் எவரும் இல்லாமல், அத னால் எவ்வித சம்பாஷணைத் தொல்லையுமின்றி யிருப்பது இன்னும் அவர்கட்கு அதிகமான ஓய்வைத் தருவதால் அந்த சுகத்தில் அவர்கள் அதிகப்பிரீதி கொள்கின்றனர். இத் தகையோரை மற்றவர்கள் மூடர்கள்என்றும், ஏதும்தெரியாக் கபோதிகள் என்றும் எண்ணுகிறார்கள். அவ்விதம்கருதித் தங் களைத் தொந்தரை செய்யாது விலகிவிட்டதுதான் கல்வி மான்களுக்கு அதிக ஆநந்தமாக இருக்கிறது. கல்லாதா ருடன் வீண்பேச்சு பேச மனது ஒப்புவதில்லை.

காபி நன்றாயில்லாவிடில் மடமடவென்று குடித்துவிட்டால் சரியாய்ப் போய்விடுமாம். ருசி பார்ப்பதில்தான் குற்றச்சொல் புறப்படுகிறதாம்.




**1. தன் வேலைக்கு உதவுகிற மனுஷ்யர்கள்:**—ஒருவனைப் பலர் சுற்றிக் கொண்டிருக்கலாம். அதில் சிலர் பந்துக்களா யிருப்பார்கள். அவர்களின் வேலை சமையற் கட்டில் கூட்டம் போடுவதும், நன்றாக ஆக்கி உண்டு விட்டு உறங்குவதுமா யிருக்கும். சிலர் நண்பர்களா யிருக்கலாம். அவர்கள் உல்லாஸமான பேச்சுத் துணைவர்களாய்ப் பொழுது போக்குவதற்கு உதவுவார்கள். இன்னும் சிலர் கௌரவப் பட்ட மனுஷ்யர்களாயிருந்து ஒரு மரியாதை வந்தனாதிகளுடன் விடை பெறுபவர்களா யிருப்பார்கள். கடைசியாகத் தான் செய்யும் வேலைக்குத் துணையாய்ப் பக்கத்திலிருந்து உதவி செய்து உழைக்கக் கூடியவர்கள் யாரென்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு சிட்டுக்குருவிகூட அகப்படாது. எல்லா உழைப்பையும் தான் ஒருவனே ஒண்டியாகப் படவேண்டியதாயும், அவ்விதம் உழைத்துப் பெறுகிற பணத்தைச் செலவிட மட்டும் இந்தக் கூட்டங்கள் வழி செய்கிறவர்களாகவுமே முடிவார்கள். இவ்விதம் தனக்குச் செலவை உண்டாக்குகிறவர்களும், தன் அரிய காலத்தைத் தமாஷ் பேச்சு வழியில் விரயப்படுத்தி விட்டுப் போகிறவர்களும் நாளைக்குத் தனக்கு உதவுவார்களோ வென்று யோசித்தால் அந்த சங்கதி அருமையாகவே இருக்கும். இதுவே ஒவ்வொரு குடித்தனத்திலும் தினமும் நடக்கிறதும் வீட்டுத் தலைவன் ஏமாறுகிறதுமான சங்கதி.

**2. முன்னதைக் கொண்டு பின்னது:**—குறித்த சிலரைப்பற்றி நல்லதும் கெட்டதுமாய்த் தீர்மானிப்பதற்கு அவர்கள் முன்பு நடந்து கொண்ட விதங்களைக் கொண்டு முடிவு செய்கிறார்கள். முன்பு கெட்ட மனுஷ்யர்களாயிருந்து இப்பொழுது நமக்கு வேண்டியவர்களாகக் காட்டுகிறவர்களும் உண்டு. அத்தகையோரைப்பற்றிய முந்திய ஸம்பவங்கள் நமது நினைவுக்கு வரும்போது அவர்களுடன் ஒன்றுபட்டுப் பொருந்திப் போக நமது மனது சம்மதிப்பதில்லை. இப்போதைய அதிக உறவு-நேசங்களின் பயனாய் நாளைக்கு என்ன மனஸ்தாபம் மூண்டு கொள்ளுமோ வென்று கவலைப்பட்டு சற்று ஒதுங்க வேண்டி வருகிறது. முன்பு அப்படிச் சில மனஸ்தாபங்கள் நேர்ந்து மிருப்பதால் அந்த நினைவு அடிக்கடி தோன்றி, தப்பிதமோ — வருத்தப்படுதலோ ஏதும் சம்பவியா திருக்கவேண்டுமே யென்று ஜாக்கிரதைப் படவேண்டி யிருக்கிறது. இவ்விதம் ஜாக்கிரதைப் படுகிற இடத்திலே உண்மையான அன்பு வற்றிப்போய் உள்ளம் ஒன்றுக் கொன்று பொருந்தி ஒட்டிக் கொள்ளத் தவறிப்போய் விடுகிறது. இதன் காரணம் முன்னதைக்கொண்டு இனி என்ன நிகழுமோ வென்று பின்னதைப்பற்றி எண்ணுதலின் விளைவே.

**3. மரியாதையுள்ள சாதாரணத் தன்மை:**—சாதாரணத்தன்மையுடனும்

---

ஒரு மனுஷ்யனுடைய வெளிவேஷ யோக்கியதைகளைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கையில், இன்னதுதான் அவன் செய்யப்போகிறானென்பதைப் பற்றி முன்னாடியே சொல்ல ஜோதிஷ சாஸ்திரப் பயிற்சி தேவையில்லை.

நம்முடன் பழகி நம்மை விட்டுப் போகாதிருப்பவர்களிடம் உண்மையான அன்பு வளருகிறது. அவர்களை மரியாதைப்பட்ட மனுஷ்யர்களாய் நினையாமல் பல வேலைகளைச் செய்யும்படி சொல்கிறோம். சில தவறுதல்களிலே அவர்களைக் கண்டிக்கிறோம். சில சந்தர்ப்பங்களில் சண்டை பிடிக்கிறோம். கோபப்படுகிறோம். ஆனால், உள்ளன்பு விட்டுப்போவதில்லை. அவர்களும் நம்மைவிட்டுப் பிரிவதில்லை. நேற்று நாம் திட்டியதை இன்றைக்கு அவர்கள் நினைப்பதுமில்லை. நம்மீது என்ன கோபித்து முறைத்தாலும் நமது வேலைகளைத் தங்களின் வேலைகளாக நினைத்துச் செய்துகொண்டு போகிறார்கள். இப்படிப் பட்டவர்களிடம் நாமும் மரியாதை காட்டுவதில்லை. அவர்களும் நம்மிடமிருந்து ஒரு மரியாதையை எதிர்பார்ப்பதில்லை. இவ்வித மரியாதையற்ற சாதாரணத் தன்மையில் ஒருவரை யொருவர் விரும்புகிற பாசமானது பெருகிச் செல்லுகிறது. இனி, மரியாதையுடன் நாம் நடத்த வேண்டிய சிலர் இருக்கிறார்கள். அத்தகையோரை நாம் தவறிப்போய் ஒரு கடின சொல் பேசிவிட்டால் உடனே கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுப்போய் விடுவார்கள். மனஸ்தாபம் முற்றிக்கொள்ளும். இவ்விதம் மரியாதைப்பட்ட இடத்தில் யதார்த்த அன்பு பிரகாசிக்க முடியாமல் "உபசார அன்பு" தான் மேலோங்கி உள்ளுக்குப் பசையற்றுப் போகிறது. இத்தகையோரை மரியாதையாகவே நடப்பித்து அனுப்பிவிடும்படி நேர்ந்துவிடுகிறது. அத்தகையோரும் நம்மிடம் தங்கி நிலைப்பதும் அபூர்வமாகிறது. நாமும் அவர்களுக்கு வேலை எதுவும் இடுவதில்லை. அவர்களாவது வலிய வந்து செய்ய வருகிறார்களோவெனில் அதுவுமில்லை. கடைசியில் அவர்கள் வந்து போனது ஒரு வீண் சுமையாகவும், ஒரு வெறுஞ் செலவாகவுமே ஆகி, ஏதோ பரஸ்பரம் உறவு-நேசம் பாராட்டிக் கொண்ட கௌரவத்துடன் முடிவடைகிறது. மரியாதைப்பட்டவகைக்கும், அந்தப்போலிமரியாதையற்ற சாதாரணப்பட்ட தன்மைக்கும் உள்ள பேதம் இது.

**T.S. குழந்தைவேலு முதலியார்.**

அழகும், வசீகரமும், கம்பீரத்தோற்றமும் பிறர் மனத்தைத் தடுமாறப்பண்ணுகிறது. வெகு எளிதில் நம்பிவிடச்செய்கிறது. மிகவும் உத்தமர்களென்று எண்ண வைத்து மோசம் செய்கிறது. ஒரு பிரமிப்பைக்காட்டிஏமாற்றிவிடுகிறது. நம்பிவிட்டு சந்தியில் நிற்கும்படி புரிகிறது. நாணயஸ்தர்களென்று காண்பித்து நஷ்டப்பட வைக்கிறது. நட்புக்கும் காதலுக்கும் இடம் தந்து வீதியில் நிற்கச்செய்கிறது. உஷார்!

---

தமிழில் வெளிவந்துள்ள பல மொழிபெயர்ப்பு நாவல்கள் அந்த ஆங்கில மூதல் நூலின் மறுபதிப்புப்போலவே இருக்கின்றது. தமிழ்நாட்டு இயல்பு அதில் விளங்கக் காணோம்! ஆயினும் மொழிபெயர்ப்பாசிரியர்கள் மற்றவர்களுடையதை இகழ்ந்து தங்களுடையதைப் புகழ்வதிற் குறைவில்லை.

#  பெரியாரின் மொழிகள் 

(195-ம் பக்கத் தொடர்ச்சி.)

428. Let come what will! at last the end is sure, And every heart that loves with truth is equal to endure. TENNYSON.

எது வருவதானாலும் வரட்டும், கடைசியில் முடிவு நிச்சயம். அன்பு நிறைந்த மனது உண்மையுடன் நீடித்திருக்கும். டென்னிஸன்.

429. The right faith of man is not intended to give him repose, but to enable him to do his work. RUSKIN.

மனிதனுடைய சரியான நம்பிக்கையானது அவனை இளைப்பாற விடுவதற்கல்ல; அவனை அவனுடைய வேலையைச் செய்யும்படி செய்வதற்காக.
ரஸ்கின்.

430. We have much to enjoy in the quiet and retirement of our own thoughts.
LONGFELLOW.

நாம் நம் எண்ணங்களுக்குள்ளேயே சாந்தமும் அமைதியும் அடைவதில் நாம் அனுபவிக்கும் சந்தோஷங்கள் பல இருக்கின்றன. லாங்பெல்லோ.

431. Out of suffering comes the serious mind; out of salvation, the grateful heart; out of endurance, fortitude; out of deliverance, faith. RUSKIN.

அவஸ்தையிலிருந்து உண்மையும், கடைத்தேற்றத்திலிருந்து நன்றி விசுவாஸமும், துக்கத்திலிருந்து சுகமும், விடுதலையிலிருந்து நம்பிக்கையும் பிறக்கிறது. ரஸ்கின்.

432. The seasons alter: hoary headed frosts. Fall in the fresh lap of the crimson rose.
SHAKESPEARE.

காலங்கள் மாறுகின்றன. விசனத்தை விளைக்கும் பனி சந்தோஷத்தைக் கொடுக்கும் ரோஜாவின் இதழ்களில் விழுகிறது. ஷேக்ஸ்பியர்.

433. The resolute will of a strong man...struggles nobly with his foe to achieve great deeds. LONGFELLOW.

ஒரு பலவானுடைய உறுதியான மனதானது பெரிய காரியங்களைச் செய்ய அவனுடைய விரோதியுடன் மேன்மையாய் மன்றாடுகிறது.
லாங்பெல்லோ.

434. Let your own discretion be your tutor; suit the action to the word, the word to the action. SHAKESPEARE.

உன் அறிவே உனக்கு ஆசானாக இருக்கட்டும். வார்த்தைக்குத் தகுந்தாற்போல் காரியத்தையும், காரியத்துக்குத் தகுந்தாற்போல் வார்த்தையையும் அமை. ஷேக்ஸ்பியர்.

---

ஸாகஸமும் ஸமத்காரமும் செய்கிற கபட மனத்தினர் தங்கள் குற்றத்தை மறைத்துக்கொண்டு மற்றவர்கள் ஸாகஸமும் ஸமத்காரமும் செய்வதாய்த் தூற்றுகிறார்கள். தங்கள் நெஞ்சையே தட்டிக் கேட்டுக்கொள்ளட்டும்.

435. Gather the rosebuds while ye may, Old Time is still a-flying, And this same flower that smiles to-day, To-morrow will de dying. HERRICK.

உங்களால் கூடிய பொழுதே ரோஜா மொட்டுகளைக் கொய்து கொள்ளுங்கள். நம்முடைய காலம் பறந்துகொண்டே இருக்கிறது. இன்று மலர்ந்து புன்சிரிப்புடன் கூடிய இதே மலர் நாளை வாடிவிடும். ஹேரிக்.

436. There is no path but one for noble natures.

MRS. HEMANS.

கௌரவ இயற்கையைக் கொண்ட மாந்தருக்கு ஒன்றைத்தவிர வேறு வழி கிடையாது. ஸ்ரீமதி ஹிமன்ஸ்.

437. The weak soul, within itself unblest, Leans for all pleasures on another breast. GOLDSMITH.

பலஹீனமான ஜீவன் (மனிதன்) தன்னிலே எதையும் பெறாமல் எல்லா இன்பங்களுக்கும் பிறரையே சார்ந்து நிற்கிறான். கோல்ட்ஸ்மித்.

438. There are three Immaterial things, not only useful, but essential to Live. No one knows how to live till he has got them. These are Admiration, Hope, and Love. RUSKIN.

மூன்று அகோசரமான விஷயங்கள் உள்ளன; அவை உபயோகமாயிருப்பதுடன் வாழ்க்கைக்கு இன்றியமையாததாயுமிருக்கின்றன. அவைகளைப்பெறும் வரையில் எம்மனிதனும் எங்ஙனம் வாழ்வதென அறிவதில்லை. அவைகள்தான் (கௌரவ) மதிப்பு, நம்பிக்கை, அன்பு என்பவை. ரஸ்கின்.

439. Many have genius, but wanting art, Are for ever dumb.

LONGFELLOW.

பலர் விசேஷ புத்தியைப் பெற்றிருக்கின்றனர்; ஆனால், கலைத்திறமையைப் பெறாதபடியினால் அவர்கள் என்றும் மௌனமாக இருக்கின்றனர். லாங்பெல்லோ.

P. E. பாஷியம் நாயுடு.

"மனோகர விலாஸ்" ஸ்ரீரங்கம்.

[இந்த வியாசத்துடன் P. E. பாஷியம் "அமிர்த குணபோதினி"யின் நேயர்களிடமிருந்தும், இவ்வுலகினின்றும், தனது தாய் மாமனை இப்பத்திரிகையின் ஆசிரியரிடமிருந்தும் விடை பெற்றுக்கொள்கின்றான். அவன் ஆத்மா சாந்தி பெறுக. ப-ர்.]

பண்டைக்காலந்தொட்டு தைரியத்தையும் பலத்தையும் உலகினர் மெச்சுவதேன்? மனிதர்கள் மிகவும் பயங்காளிகளாக இருப்பதாலன்றோ தைரிய பலங்களை அதிகமாகப் புகழ்கிறார்கள்?

குசேலர் அன்புடன் அளித்த பசையற்ற வெள்ளவல் கண்ணனுக்குத் திவ்ய அமுதமாயிற்று. பக்தியுடன் சபரி யளித்த கனி கிழங்குகள் ஸ்ரீராமபிரானுக்கு ஸந்தோஷத்தைக் கொடுத்து அவளுக்கும் மோக்ஷமார்க்கமாயிற்று.

# ரகர—றகர பேதங்கள்.

(219-ம் பக்கத் தொடர்ச்சி.)

122. **பொருத்தல்** — பொருத்துதல், **பொறுத்தல்**—சுமத்தல் (122) அவன் அந்த இரண்டு திரையையும் பொருத்தி என் தலையில் வைத்தால் நான் பொறுப்பேனா ?

123. **பொருப்பு**—மலை, **பொறுப்பு**—சுமத்தல். (123) வானளாவிய பொருப்பை யெடுத்துச் சிரமேல் வைப்பிற் பொறுப்பேனோ ?

124. **மரத்தல்**—பிரமித்தல், **மறத்தல்**—மறந்துவிடுதல், (124) ஒரு சத்திய வாசகனை மரக்கத்தக்கதாய் அலங்கோலப்படுத்தினால் உள்ளவையும் மறத்தல் அவன் குற்றமல்ல.

125. **மரம்**—விருட்சம், **மறம்**—நமன். (125) மரத்தைப் பிடுங்கிச் சாடலாமென்று வந்த மறத்தைப் பார்த்து மார்க்கண்டன் பயந்தான்.

126. **மரல்**—கடல், **மறல்**—நமன். (126) பாவமரல் கடந்து நிற்கும் பெரியோர் மறல் எருமைக் கிடாவிலேறி வருவதைக் கண்டு அஞ்சுவரோ ?

127. **மரித்தல்**—சாதல், **மறித்தல்**—தடுத்தல். (127) இராமன் கோபமாய்க் கடலில் விழுந்து மரிக்கப்போனதை கோவிந்தன் மறித்தான்.

128. **மரு**—வாசனை, **மறு**—மாசு. (128) மருவுள்ள புட்பங்களை மறுவறக் கழுவு.

129. **மருகல்**—ஓர் ஊர், **மறுகல்**—சுழலல். (129) மருகலில் நேற்று அடித்த காற்றினால் குச்சு குடிசைகளெல்லாம் மறுகல் ஒரு பரிதாபக் காட்சியா யிருந்தது.

130. **மருகு**—மகரவாழை, **மறுகு**—நெடுந்தெரு. (130) தேசாதிபதி இவ்விடம் வரப்போகிறபடியால் மறுகெல்லாம் மருகு முதலியவற்றால் அலங்கரித்திருக்கின்றன.

131. **மருவல்**—கிட்டல், **மறுவல்**—கஸ்தூரி மிருகம். (131) அதோ யிருக்கும் மறுவலைப் பிடிக்க மருவு.

132. **மரை**—சாமரை, ஓர் மான், **மறை**—மந்திரம், வேதம். (132) மரைதனில் வீற்றிருக்கும் நன்மரை நேத்திரமுள்ள இலட்சுமியை மறைகளால் தோத்திரி.

(தொடரும்.)

---

அக்கிரமஸ்தர்கள் திட்டத்திட்ட, திட்டு கேட்போரின் ஆயுள் பெருகுகிறது. ஐசுவரியமும் ஓங்குகிறது. இதனாலேயே அவர்களின் திட்டு கடவுளுக்கு சம்மதமில்லை யென்பதை அறிய அவர்களுக்குப் புத்தி வருமா ?

ஒரு பெண்ணுடன் களங்கமற்றிருக்கையில் தன்னைப்பற்றி ஊரார் ஏதேனும் பேதமாய் எண்ணுவரோவென்று மனதில் படுவதில்லை. அப்பெண்ணுடன் தவறிவிடும்போது மற்றவர்கள் ஏதாவது சந்தேகிக்கிறார்களாவென்று கவனித்து ஸம்சயப்பட வைக்கிறது.

# மூளைக்கு வேலை.

## I

### (1) விடுகதை வினா?

எட்டெழுத்திலோர் பெயர்.

1. 1-2-3-7-8-ம் சேரில் அறுபத்துமூவரிலொருவராவர்.
2. 1-4-5-6-7-8-ம் கூட்டிடில் அமரர் பதியாவர்.
3. 1-5-6-7-8-ம் சேர்த்திடில் சுக சாரீரம் பெற்றவராவர்.
4. 1-6-8-ம் சேர்ந்திடில் வீட்டிற் கடைப்பாகும்.
5. 1-7-8-ம் சேர அமரராவர்.
6. 1-8-ம் பார்க்கில் தணலைத் தண்ணீரிற் போட்ட சப்தமாகும்.
7. 6-7-8-ம் பார்த்திடில் திருமண மகளாகும்.
8. எட்டெழுத்தையும் சேர்த்துப் படித்தால் இலங்கு தமிழ் நாட்டிலோர் உயர்தெய்வமாகும்.

M. S. கிருஷ்ண ஐயர்.

### (2) விடுகதை வினா?

இரண்டெழுத்தாலாகிய ஓர் சொல் முதலெழுத்து இறைவன் திருமந்திரத்தைக் காட்டும். கடையெழுத்து தபோதனரின் முதலெழுத்தைக் காட்டும். இரண்டெழுத்தும் சேரில் பரமனின் திருநாமமும், நீர்வாழ் ஜந்துக்களில் ஒன்றின் நாமமுமாகும்.

க. ராமசாமி.

## II

### எழுத்து மாற்றுச் சொற்கள்.

எழுத்து மாற்றுச் சொல்லாவது ஒரு சொல்லிலுள்ள எழுத்துக்களை மாற்றி வேறு விதமாகக் கோப்பதனால் உண்டாகும் மற்றொரு சொல்லாம். இதனடியிற்கண்ட சொற்களிலுள்ள உயிர்களையும் மெய்களையும் பிரித்துத் தக்கவாறு கோர்த்தால் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பிரசித்தமான ஸ்தலங்களின் பெயராகும். ஏற்ற இடத்தில் தந்நகரத்தை ஈற்று னகரமாகவும் ஈற்று நகரத்தைத் தன்னகரமாகவும், மகரத்தை இனமெல்லெழுத்தாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

அச்சொற்களாவன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அன்பழி | 5. | தம் உரை | 9. | கூரான் |
| 2. | ஊரார் | 6. | சாகி | 10. | ஆதிமன் |
| 3. | காகம் | 7. | மேவாதர் | 11. | சீர்மங்க |
| 4. | கரமே | 8. | சம்பத்ரமி | 12. | என்சைன் |

கணியூர் P. S. M. E. முஹம்மது யாக்கூபு சாஹிப்.

## III

ஆடிமாத ஸஞ்சிகையில் 220-ம் பக்கமுள்ள விடுகதை வினாவிற்கு விடை:—1. ரத்தினம். நாகரத்தினத்திற்கு மகனல்லாவிட்டால் மகள் ஆகவேண்டும். 2. காவேரி. 3. பங்குனி. 4. பாதிரி.






இன்று கூடிய நமது கடையில், "ஒரு பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பவர்கள் அவ்வளவுடன் நின்று விடலாகாதென்றும், அப்பத்திரிகையின் ஆசிரியர் என்னென்ன நூல்கள் எழுதியிருக்கிறார் என்று விசாரித்து அந்த நூல்களையும் தருவித்துப் படித்து இன்புற வேண்டுமென்றும், இந்த வகையில் ஆசிரியரை ஆதரித்து உத்ஸாகப்படுத்த வேண்டுமென்றும்" அல்லாபிச்சை கூறினார்.

***

"நூல்களில் இரண்டு விதம் உண்டு. ஆசிரியர்கள் அதிக பொருட் செலவில் தங்கள் நூலை அச்சிட்டு வெளியிடுகிறார்கள். சில வருஷங்களில் அந்த நூலின் பிரதிகள் யாவும் செலவாகிவிடுகின்றன. அவைகளை விற்று வந்த பணத்தை ஆசிரியர்கள் உப்பு-புளி-மிளகாய் செலவிற்கு உபயோகப்படுத்திவிடுகிறார்கள். பிறகு அடுத்த பதிப்பாக அந்த நூலை அச்சிட அவர்களிடம் பணம் இருப்பதில்லை. நூலும் அடுத்த பதிப்பு வெளிவருவதில்லை. பிறகு எவ்வளவு கிரயம் கொடுப்பினும் அந்த நூல்களும் விலைக்குக் கிடைப்பதில்லை. இவ்விதமான நூல்களை அவைகள் வெளிவந்தபொழுதே வாங்கிவிடவேண்டும். சற்று தாமதம் செய்தால் பிறகு அப்புஸ்தகங்கள் கிடைக்காமலே போய்விடக்கூடும். இது ஒரு விதம். இனி மற்றொருவித ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நூலில் நூறு பிரதிகள் இருக்கும்பொழுதே இரண்டாம் பதிப்பு அச்சிட முற்பட்டு விடுகிறார்கள். இவ்வித நூல்கள் எந்த நாளிலும் விலைக்குக் கிடைத்தபடியே இருக்கும். ஆக நூற் பிரசுரங்களில் இரண்டு விதம் உள்ளன"—என்று தாண்டவக்கோன் உரைத்தார்.

***

"ஒருவன் கெட்டுப்போவதற்கும் செய்யத்தகாத துர்க்கிருத்தியங்களைச் செய்துவிடுவதற்கும் ஆதி காரணம் கடுகளவாய்த் தோன்றிய ஒரு தீய நினைவுதான். இந்த நினைவை ஆரம்பத்திலேயே துடைப்பத்தாற் சிங்காரித்து நெஞ்சைவிட்டுத் துரத்தியிருந்தால் வெகுபேர் யோக்கியர்களாகவும், சத்தியநெறி தவறாதவர்களாகவும் வாழ்ந்து சென்றிருக்கலாம். ஐயோ! அதுதானே இல்லை. அந்தத் தீய நினைவு நாவுக்கு மிக்க ருசிக்கிறது; நெஞ்சுக்கு சாராய உத்ஸாகத்தைப் போல் ஒருவித ஊக்கம் கொடுக்கிறது. ஸதா அந்த நினைவிலேயே மனது ஊறி மேன்மேலும் ஆகாசக் கோட்டை கட்டுகிறது. அந்த நினைவை நிறைவேற்றிப் பார்த்து அதன் இன்பம் எப்படியிருக்கிறதென்று அறிந்துவிட மனதிற்குப் பலவித தூண்டுதல்கள் உண்டாகிவிடுகின்றன. இவ்விதம் தன் நினைவுக்கு அடிமையாகிவிட்ட ஒரு

வியாபாரிகளுக்குக் கொடுக்கிற கமிஷன் செலவை விளம்பரம் போடுவதற்குச் செலவிட்டால் கைமேல் பலனுண்டு என்கிறார் ஒருவர்.

மனுஷ்யன் தனிமையாக இருப்பது மிக்க அபாயகரமானது; பயங்கரமானது. தனிமையாய் இருக்கையில் தான் அந்த நினைவின்படி காரியத்தைச் செய்துவிட வெகு பரபரப்பாய் இருக்கின்றான். அவனது தீய காரியத்திற்கு ஏற்ற தருணம் கூடிவிடுங் காலையில் அவனும் அதற்குத் தயாராகி விடும்போது, அந்த சமயத்தில் சிறு குழந்தைகளோ அல்லது வேறு மனுஷ்யர்களோ அங்கு வந்துவிடவே, அவன் செய்யவிருந்த துஷ்கிருத்தியம் தடைபட்டுப் போகிறது. அப்படா! நல்ல வேளை, கொடும்பாதகத்திலிருந்தும் எப்படியோ தப்பிவிட்டோம் என்று அவனே சந்தோஷப்பட்டுக்கொள்கிறான். அதுமுதல் தனது தீயநினைவையும் வெறுத்து விட்டுவிடப்பார்க்கிறான். ஆனால், மற்றொரு சமயத்தில் ஒரு தனித்த வசதி அவனுக்குக் கிடைத்துவிடுகிறது; அத்தருணத்தில் எவரும் அங்கு வராமலே போய்விடுகிறார்கள். தடைபடுத்த ஒருவரும் இருப்பதில்லை. இவனும் அந்தச் சமயம் கிடைத்தற்கரிய ஒரு அதிர்ஷ்ட? தருணமென்று பூரித்து அந்த நேரத்திலே தனது தீய நினைவைக் காரியத்தில் காண்பித்து நடத்திக் கெட்டுப்போய் விடுகிறான். அதற்குப் பிறகு ஹா! பாழாய்ப் போனேனே! பாதகனானேனே! கடவுளின் ஸந்நிதியிலும், உத்தமர்களின் முகத்துக்கு எதிரிலும் நிற்பதற்கு உள்ளம் நாணி நடுக்குறுகின்றதே! அந்தோ! நாம் படித்த படிப்பென்ன; பேசிய ஞானங்களென்ன, ஊராருக்குக் கொட்டிய கல்விப் பிரஸங்கங்களென்ன; இவ்வளவும் நமது விஷயத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளத் தவறி பெரியபாதகச் செய்கையில் கைநனைத்துவிட்டோமேயென்று அங்கலாய்க்கிறான்; அழுது புலம்புகிறான்; கண்ணீர் பெருக்குகிறான். இவன் தன் தீய நினைவுக்கு இரையான மர்மம் அவன் ஒருவனுக்கு மட்டுமே தெரியுமாயினும், அது அவன் வாணாள் முழுதும் அவன் நெஞ்சை யறுத்துச் சித்திரவதை செய்துவிடுகிறது. இவ்விதம் வெளிக்கு வராமல் மறைக்கப்பட்டுப்போன வகையில் அவன் வெளிக்கு மிக்க சத்தியவந்தனாகவும் யோக்கியனாகவும் காண்பித்துக்கொள்ள வசதி வாய்ப்பதும் ஒருவித அதிர்ஷ்டத்தின் மேன்மை தான். ஆனால், சிலரது விஷயத்தில் அவர்கள் செய்துவிட்ட தீயகாரியம் பஹிரங்கத்துக்கு வந்துவிடுகிறது! ஹா! அப்பொழுது நற்பெயரும் கெடுகிறது; கொலை பழி பாவங்களும் சூழ்கிறது; புதிய விரோதிகளும் ஏற்பட்டுவிடுரார்கள். இன்னும் அரசாங்க தண்டனையும் வேறே கிடைத்துவிடுகிறது. இவ்வளவுக்கும் தடுப்பதற்கு மனுஷ்யர்களின்றி அவன் தனிமையா யிருந்ததே காரணம். அவன் கையிலே தீக்குச்சியிருந்தது; அவன் எதிரிலே பஞ்சுமூட்டை யிருந்தது. எவரேனும் தடுத்திருந்தால் அவன் அந்தப் பஞ்சுமூட்டையில் நெருப்பு வைக்காமல் தப்பிப் போயிருக்கலாம். முன்பு இரண்டொருதரம் தப்பிப் போயிருக்கிறான். ஆனால் இந்த தடவையோ தப்புவிப்பாரின்றி நெருப்பு வைத்துவிட்டான். இப்படியாய்விட்டவகையிலே, வெளிக்குவராத தன் நெஞ்சுமட்டும் அறிந்த தீயநினைவின் பாதகச் செய்கை ஒரு தினுசாகும். இனி, வெளிக்கு வந்து மானம் சிந்த வைக்கிற பாதகச் செய்கை மற்றொரு தினுசாகும். புஸ்தக வகையில் இரண்டு தினுசு என்று

---

விவாகத்துக்குப் போகாதவனுக்கு அங்கு நடந்த எந்தச் சண்டையிலும் சம்பந்தமில்லை, எவ்வித செலவுகளுமில்லை, நல்ல பெயரும் வேறே!

கூறியதுபோல இதிலும் இரண்டுவித மாகும்''—என்று தொந்திராயர் விவ ரித்தார்.

***

"என்றைக்கும் தவருதிருப்ப வனே பாக்கியவான். அவன் உறுதி யை நம்பலாம். ஆனல், ஒருமுறை தனது துஷ்ட நினைவுக்கு இரையா கிப் பிறகு யோக்கியனுக நடக்கப் பார்ப்பவனுடைய உறுதியோ திடமற் றது; பலமில்லாதது. மற்ருெரு தனித்த சந்தர்ப்பங் கூடிக்கொள்ளும் பொழுது மறுபடியும் கெட்டுப்போய் விடுகிருன். அடடா! என்ன மூடத் தனமான காரியத்தை மீண்டும் செய்துவிட்டேன் என்று தன்னையே நொந்துகொள்ளுகிருன். திருடனுக் குச் திருடச் சமயம் கிடைப்பது போலும், விபசாரக் கள்வனுக்கு அதற்கு ஏற்ற நேரமும் ஒருவித நெஞ் சுத்துணிகாமும் ஏற்பட்டுவிடுவது போலும் இவனுக்கும் நெடுகத் தவ றிப்போகப் பல தருணங்களும் வாய்த் துக்கொண்டே வந்து பரம சண்டா ளனுய் விடுகிருன்'' என்று ஏலேலோ சிங்கர் எழுந்து பேசினுர்.

***

"பெண்கள் நெருப்புக்குச் சமம்; ஆடவர்களோ "பெட்ரோல்'' எண் ணெய்க்குச் சமம். இரண்டும் தூரத் தூர இருக்கவேண்டும். சற்று நெருங் கினலோ திடீரென்று பற்றிக்கொண்டு ஒன்றகிப் பாழாய்விடும். ஆனதால் தான் ஒதுங்குதல், விலகிச் செல் லுதல், தனித்து இராதிருத்தல், சரீ ரத்தை நன்கு மூடிக்கொள்ளுதல், தமது தேக காந்தியால் மற்றவரின் மனத்தைக் களங்கப்படுத்தாதிருத்தல் முதலிய ஆசாரணைகள் பெண்களுக்கு ஏற்பட்டுள்ளன. ஆடவர்கட்கும் சில கண்டிதமான விதிகள் விதிக்கப்பட் டுள்ளன. இவற்றின் எல்லை மீறுகை யில் அப்பொழுது நேரவேண்டிய தீங்கு ஸம்பவித்துக்கொள்கிறது'' என்று அப்பளம் பிள்ளை பகர்ந்தார்.

***

"தங்களால் செய்யக்கூடிய சொ ற்ப உதவிகளுக்குக் கூட, அதைச் செய்வித்துக் கொடுப்பதில் தங்க ளின் உயரிய அந்தஸ்துக்கு என்ன வோ பெரிய ஓட்டை ஏற்பட்டுப் போகுமென்று சிலர் மெதுவாய் ஒது ங்கிக்கொள்ளுகிருர்க''ளென்று இரு மல் முதலியார் இயம்பினுர். "அப் படியும் சிலர் உண்டுதான்; தன் வகுப் பைச் சேர்ந்த ஒருவர் பெரிய பதவி யில் இருக்கையில், தன் வார்த்தைக் கும் அங்கு அதிக செல்வாக்கு இருக் கையில், ஒரு ஏழை தனக்கு ஒரு வேலையோ, உதவியோ எதுவோ ஒன் றுக்கு சிபாரிசு செய்யும்படி வேண்டு கிருன். ஓ! எனது அந்தஸ்துக்கு அப் படிப்போய் வேண்டுவது கௌரவக் குறைவு என்று மறுத்துவிடுகிருர். பிறகு அவன் ஒரு சில்லரைக்கடை வைத்துக்கொண்டு பிழைக்கப்போய் விடுகிருன். இத்தனைக்குக் கௌர வம் கொண்டாடிய இந்த மனுஷ் யனே மறு வருஷத்தில் கண் மூடிக் கொள்ள, சொத்துகளெல்லாம் மஹே ந்திர ஜாலசித்துகளாய்ச் சில வருஷங் களில் சிதறியோடிவிடுகிறது. இதற் குள் திக்கற்றுச் சில்லரைக் கடை வைத்தவன் விருத்தியடைந்து பெரிய மளிகைக் கடைக்கு எஜமானு கிவிட, அவன் கடையிலே காலமாய் விட்ட கௌரவ மனிதரது மைந்தன் வேலையாளாய் அமருகிருன்! பாராட் டிக்கொண்ட கௌரவமெல்லாம் எங்கே போயிற்று'' என்று புண்பட்ட மூர்த்தி புகன்ருர். "இரண்டு நெருங் கிய நண்பர்கள்; இந்த இருவருக்கும் தெரிந்த கனவான் ஒருவர்; அவரிடத் தில் தனக்கு ஆகவேண்டிய ஒரு காரி

யத்திற்காகத் தன் பக்கமாய் வந்து சில வார்த்தைகள் பேசும்படி எளியவர் தனது நண்பரை வேண்டுகிறார். இவரைவிட அந்த நண்பருக்கு அந்தக் கனவானை அதிகம் தெரியும். அந்த நண்பர் வந்து பேசினால் எவ்விதமும் காரியம் சற்று அனுகூலப்படும். ஆயினும், அந்த நண்பர் தாம் இருக்கும் அந்தஸ்தை அந்த சமயத்தில் விரல் விட்டு எண்ணத் தொடங்கிவிடுகிறார். இந்த வேளையில் அந்த நண்பரை ஏழை நண்பர் அழைக்க, அதற்கு அந்த அந்தஸ்து நண்பர் —"நீங்களே போய்ப் பேசுங்கள், அந்தக் கனவான் நம்மிருவருக்கும் புதியவரல்லவே"— என்று சொல்லி ஒதுங்கிக்கொள்ளுகிறார். பிறகு இந்த எளிய நண்பரே போய்ப் பேசிக் காரியத்தை ஏதோ ஒருவிதமாய் முடித்துக்கொள்ளுகிறார். இதில் அந்த நண்பர் கூட வந்து ஒரு வார்த்தை அக்கனவானிடம் சொல்லிவிட்டால் அந்த வெந்நீரிலே வீடு வெந்தா போய்விடும்? என்னவோ தங்களின் கௌரவத்தைப் பிரமாதமாய் எண்ணிக்கொண்டு, தங்களால் செய்யக்கூடிய சொற்ப தேக சகாயம், வாக்கு சகாயங்களுக்குக்கூட இப்படி தூரத்திலே போய் விரல்விட்டு எண்ணியபடி நின்றுகொண்டுவிடுகிறார்கள். என்னவோ பெரிய அந்தஸ்து படைத்தசிலரது புத்திப்போக்குகள் இப்படி யெல்லாம் கோணுமாணல்களாகவும், தமது செல்வாக்கைக் கொண்டு பிறருக்கு ஒரு சிறு உபகாரத்தைச் செய்யக்கூடப் பின்வாங்குகிறவர்களாகவும் இருக்கிறார்கள்'' என்று பழுத்தபழம்பேசினார்.

***

"ஆத்திரப்பட்டு விதியால் அறிவு மயங்கி செய்யத்தகாத ஒரு அக்கிரம காரியத்தைச் சிலர் செய்து விடுகிறார்கள். ஆனாலோ, பிறகு அதன் பயனாக பெரிய அறிவு வரப் பெற்றுத் தங்களின் ஜீவியத்தில் மறுபடி என்றைக்கும் அவ்வித தப்புச் செய்கையைச் செய்யாதபடி தங்களை ஜாக்கிரதைப்படுத்திக்கொண்டு ஒழுங்காகி விடுகிறார்கள். தங்களைத் தப்பு வழியில் இழுத்தவர்களிடமிருந்து விலகியும் விடுகிறார்கள். இது உத்தமர்களின் போக்கு. பூர்வத்தில் விசுவாமித்திரர் மேனகையால் அந்த நிமிஷம் காமபரவசராய்க் கெட்டழிந்தாலும், அடுத்த நிமிஷத்திலே மேனகை யார், அவளுக்குப் பிறந்த மகள் யார் என்ற நினைவேயற்றுப் பழயபடி தாடி ரிஷியாக மாறிவிட்டார்'' என்று கோகிலக்கோனார் தமது வார்த்தைகளைக் கொட்டினார்.

***

"சிலர் தங்களுக்கு ஒரு காரியம் ஆகவேண்டிய சமயத்தில் மற்றவருடன் "அதிக உறவு" பிடித்துவிட்டு, அப்பால் "அதிக உறவை" எண்ணி அவர்கள் கிட்டச் சேரும்போது தங்களின் அருகே நெருங்கவிடாமல் தூரத்தி ஒதுங்கி அன்னிய முகமாய்ப் போகிறார்கள். இன்னும் சிலர் ஒருவனுக்கு எந்த சமயத்தில் பக்கத்துத் துணையாய் இருந்து அவன் கண்ணீரைத் துடைத்துத் தேற்றித் தைரியம் பேசவேண்டுமோ, அந்த நேரத்துக்கு வெகு தூரத்திலே வேறொரு ஊருக்குப் போய்க் குந்திவிட்டு உபசாரக் கடிதங்கள் எழுதி மன்னிக்கும்படி கேட்டுவிட்டுத் தப்பித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அவர்கள் பெரிய புத்தி படைக்காமற்போய் விடுவதும், அதற்கேற்றபடி அவர்களின் நிலை இருப்பதும் காலபேதம் தான்'' என்று உலக சுபாவத்தைப் பற்றி உக்கா ஸாஹேப் உரைத்தார். இத்துடன் நமது கடையும் முடிவு பெற்றது.

'பஹதூர்' போக்வண்டு செட்டியார்.



# நமது கதாப் பிரஸங்கி.

## மதியற்ற மணத்தின் முடிவு.

(199-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாதவன்:—சாம்பான்! என்ன சங்கதி? இன்னும் பண்ணை ஐயர் மகள் தன் கணவன் வீட்டிற்குப் போகவில்லையா? சும்மா சொல்லு.

கருப்பன்:—இல்லெ, சாமி இல்லெ: எங்களை யெல்லாம் தவிக்கவிட்டுட்டு ஒரேயடியாகப் பூட்டாங்க சாமி?'' எனக்கூறித் தேம்பித் தேம்பி யழுதான்.

**மா**தவன் என்ன செய்வன்? இரண்டு கையையும் பிசைந்து கொண்டு "அப்பா! சாம்பான்! சங்கதியைச் சொல்லேன்; குமுதத்திற்கு என்ன'' என்று நடுங்கிய வண்ணம் கேட்டான்.

கருப்பன்:—சாமீ! அந்த அம்மா அஞ்சும் பொருந்திய லக்ஷிமி கிணத்திலே விழுந்து மடிஞ்சிட்டாங்க சாமி! என்று கூறி மீண்டும் அழுதான்.

**மா**தவன் தரையிற் சாய்ந்து விட்டான். அழுத சாம்பான் தன் அழுகையை நிறுத்திவிட்டு "சாமி, சாமி" யென மாதவனை யெழுப்பினான். நெடுநேரம் மாதவன் ஒன்றும் பேசவில்லை. சாம்பானுக்கு நடுக்கம் உண்டாகி விட்டது. மீண்டும் "சாமி, சாமி'' யென்றான். மாதவன் சிறிது கண்ணைத் திறந்து பார்த்து எழுந்து உட்கார்ந்தான். நிலவு பால் போலக் காய்ந்தும் உலகமே அவனுக்கு இருள் மயமாகத் தோன்றிற்று. இது கனவோ, நனவோ எனச் சிந்தித்தான். அந்தோ! உண்மை பொய்யாதல் யாங்ஙனம்? முன்னால் சாம்பான் நிற்கின்றான்; அவனுக்குப் பின் சிறு குடிசை தோன்றுகிறது. நாற்புறமும் நெல்வயல்; அவைகளில் இருந்து தவளைகள் கத்தியவண்ணம் இருக்கின்றன. இவற்றை யெல்லா நேரிற் கண்டு கொண்டிருந்தும் கனவென அவன் எங்ஙனம் நினைப்பான்? தடுமாற்றத்தோடு "அந்த அம்மா எந்தக் கிணற்றிலே விழுந்தது?'' என்று கேட்டான் மாதவன்.

கரு:—நம்ப ஊருக் கிட்டெ யிருக்கிற சாமி நந்தவனத்துக் கிணத்திலீங்க.

மாத:—சரி! நீ படுத்துக்கொள்; நான் வீட்டிற்குப் போகிறேன்.

கரு:—இல்லிங்க; நீங்க ஒண்டியா எப்படி போவிங்க? நானும் கொஞ்ச தூரம் வர்ரேன்.

மாத:—வேண்டாம், வேண்டாம். எனக்கென்ன பயமா? எனக் கூறிப் போய் விட்டான்.

* * *

மாதவன் குமுதத்தைப் பிரிந்தது முதல் உலக வாழ்க்கையில் வெறுப்புற்றவனாய்ப் பலவிடங்களிலும் அலைந்து, பின்னர் "ஆமதாபாத்''தை யடைந்து மகாத்மா காந்தியடிகளின் "சபர்மதி யாசிரம''த்தில் ஓர் மாணவனாகச் சேர்ந்தான். அன்று முதல் இன்று வரை உத்தம மாணவனாய் ஒழுக்க

சீலனாய்க் கல்வி பயின்று வந்தான். காந்தியடிகள் "கதர்நிதி"க்காகத் தென்னாடு போந்தபொழுது, அடிக ளோடு நமது மாதவனும் வந்தான். தஞ்சைக்கு அடிகளோடு அவன் வந்ததும், அவன் ஆருயிர்ச் செல்வி குமுதத்தைக் காண வேண்டுமென்னும் ஆவல் அவனுக்கு உதித்தது. ஆகவே, ஓர் நாள் புறப் பட்டுத் தனது ஊரார் அறியாவண் ணம் அவன் அடைந்தான். பின்னர் நிகழ்ந்தது நேயர்கள் அறிவர்.

* * *

கற்பகவிநாயகர் பூந்தோட்டத்தில் குமுதவல்லி உயிர் துறந்த அதே பொய்கைக்கரையில் மாதவன் நின்று,

**"கற்பகத்தின் பூங்கொம்பே!**
**காமரு பூம்பசுங் கொடியே!**
**பொற்பு மிகுந்து ஒளிர் செல்வீ!**
**புண்ணியமே! வன்னெஞ்சார்**
**அற்பனை, நீ யெவ்வகையில்**
**மதித்து மதித்து அழிந்தனையோ?**
**முற்பவத்தென் தீவினையே**
**மூண்டதுவோ இங்ஙனமே?**

ஆருயிர் மருந்தே! பாவியேன் உன்னை ஒருக்கணமும் மறந்ததில்லை. நெஞ் சம் உனக்கே இடமாக வைத்தேன். நினையாது ஒருபோதும் இருந்தறியே ன். ஏழையினைக்கைவிட்டு எங்குமறை ந்து உள்ளாய் நீ? இயம்பாது இருப்பி னும் உன் இருப்பிடத்தைக் காண்ப தற்கு, இயலாது எளியனால் என்று நீ யெண்ணாதே" யெனக் கூறி நீரில் மறைந்திருக்கும் குமுதத்தின் ஆவி யைக் காண்பதற்குத் தன் கால்களில் ஓர் பெருங்கல்லைக் கட்டிக்கொண்டு விழுந்து விட்டான்.

*** *** ***

யாம் இந்த நிகழ்ச்சியை வரையத் தொடங்கியதிலிருந்து முழுதும் அழுது கொண்டே வரையக்கூடிய சம்பவமாகி விட்டபடியால், இன்னும் இத்துயர்க் கடலைப்பெரிதாக்க விருப் பமில்லை. இனி நிகழ்ந்துள்ள சம்ப வத்தை நேயர்கள் தமது மனதால் ஊகித்துக் கொள்ள வேண்டியது தான். ஆனால் ஒன்று மட்டும் கூற வேண்டியுள்ளது. இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை ஒரு பத்திரிகையும் வெளி யிடாது விட்டுவிட்டு,

"பெண் தேவை"

நல்ல அழகும் உடற் கட்டும் உள்ள பெருஞ் செல்வர், சகல கலா விநோதர் சுந்தரேச சாஸ் திரிகளுக்கு ஸ்மார்த்த வகுப்பு பாரத்துவாச கோத்திரம், நிறை ந்த அழகு, குறைந்த வயது, கல்வியில் பிரியமுமுள்ள ஒரு பெண்தேவை. படத்துடன் பின் வரும் விலாசத்திற்கு எழுதுக.

K. M. S,
முருங்கையூர் போஸ்ட்
தஞ்சாவூர் ஜில்லா

என்பதைமட்டும் நாள்தோறும் பிர சுரித்த வண்ணம் இருக்கின்றன.

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

[இக்கதையால் ஏதேனும் நற்ப யன் உண்டாக வேண்டுமென்று விரும்புகிறோம். இதனை வாசித்தபின் னரேனும் பெற்றோர்களின் மனம் திருந்துமா? அன்னோரின் பணமொ ன்றையே பார்க்கிற தன்மை யொழி யுமா? விவாகத்தால் சுகமோ கஷ் டமோ படுவது யார்?—பெண்ணா?— பெற்றோர்களா? பத்து மாதம் சுமந்து பெற்ற அருமையை எண்ணாததென் னவோ? அவதி அவதியாகச் செய்வா னேன்? ஆற அமர யோசித்து மனப் பொருத்தங்கண்டு மெதுவாக நடத்த வொண்ணாதா? சுந்தரேச சாஸ்தி ரிகளின் சொத்துக்கு ஆசைப்பட்டுத் தங்கள் குமாரத்தியை யிழந்ததன்றி வேறு கண்ட பயன் யாதோ?—ப-ர்]




# பிரபஞ்ச நவீனங்கள்



1. காஸ்டேவ் பிரௌன் என்பவர் பதினாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள தன் மனைவிமீது விவாகரத்து வழக்கு கொணர்ந்தார். அவ்வழக்குக்கு அவர் வர இயலாததால் வழக்கின் விசாரணைகள் யாவும் கம்பியில்லாத் தந்தியில் நடந்தனவாம்.

2. கிரீஸ் என்னும் நகரம் வாசனைத் தைலம் செய்வதற்குப் பிரஸித்தமானது. சராசரி ரோஜாப்பூ 2650000-ராத்தலும், ஆரஸ்ஜீ புஷ்பம் 660000-ராத்தலும் வருஷத்தில் செலவாகிறது. ஒரு ஏகரா மல்லிகையிலிருந்து வருஷம் 250-பவுன் தைலம் கிடைக்கிறது.

3. சவுக்குமரம் ஆஸ்திரேலியா கண்டத்திலிருந்து நம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

4. அமெரிக்காவில் தேனி வளர்த்தலால் 3-லக்ஷம் ஜனங்கள் ஜீவிக்கின்றனர். இதற்கென்று 110-சங்கங்களும், 8-பத்திரிகைளும், 15-கீராவிசாளரங்களும் அங்கு உண்டு. 23-கோடி ரூபாய் விலையுள்ள தேனும் மெழுகும் உண்டாகின்றன.

5. "மரம் நடும் பண்டிகை" யென்று ஒரு பண்டிகையை அமெரிக்காவில் கொண்டாடுகிறார்கள். ஸ்வீடன் நாட்டில் பிரதி வருஷமும் இப்பண்டிகையின்போது பள்ளிக்கூடத்துச் சிறுவர்களும் சிறுமிகளும் ஆறு லக்ஷம் மரங்களை நட்டு வருகிறார்கள்.

6. சீனர்களின் புராதன கர்த்தாக்கள் மனிதர் செய்யும் வேலையை (1) வித்வத்துவம், (2) உழவுத்தொழில், (3) தச்சு கருமான் முதலிய வேலை, (4) வியாபாரம் என்று நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். நமது கட்டட வேலைக்கு விசுவகர்மா இருப்பதுபோல், அவர்கள் விவசாயத்துக்கு **ஷம்மீங்கு** என்பவரைத் தெய்வமாக மதிக்கிறார்கள்.

7. மேனாடுகளில்விவசாயவித்தையும் கூட்டுறவுமே க்ஷேமத்தைத் தருவதற்கு மூலகாரணமாய்க் கொள்ளப்படுகின்றன.

8. சீனர்கள் கைவேலையில் மிகவும் சமர்த்தர்கள். பேரிப்பழங்களை உப்பு ஜலத்தில் பதம் செய்து பழமில்லாத வெயில் காலத்தில் உபயோகிக்கிறார்கள். பட்டாசுகளும், கற்கண்டும், பட்டும், சித்திரவேலைகளும், கோப்பைகளும், சீனாவிலிருந்து வருகின்றன. நேர்த்தியான கைவேலையை "சீனா வேலை" என்று சிலாகிப்பது வழக்கம்.

9. பல்லாரி ஓசப்பேட்டை தாலுகாவில் துங்கபத்திரா நதி பாய்கிறது. ராமாயணம் கிஷ்கிந்தா படலத்தில் வர்ணித்துள்ள க்ஷேத்திரமான பிஜனகர்ஸம ஸ்தானம் இந்நதியோரத்தில் பாழடைந்திருக்கிறது. ஆற்றின் வெள்ளம் தணியாததால் சுமார் 6-மாதம் வரையில் இராமபிரான் இங்கு தங்கியிருந்தார்.

---

வெளியில் சென்ற வீட்டுத்தலைவனுக்கு வீட்டில் நடந்த அக்கிரமங்களும் பித்தலாட்டங்களும் தெரிந்துவிடாதபடி அவனுக்கு அவற்றைச் சொல்லக்கூடியவர்களை விரோதித்து சண்டையிட்டு அவன் வருமுன்பாகவே துரத்தி விடுகிறார்கள், அல்லது வேறு உலகுக்கு அனுப்பியும் தீர்த்து விடுகிறார்கள்,

# சிறுமணித்திரள்

(218-ம் பக்கத் தொடர்ச்சி)

**590.** நாளை நாளை யென்பவன் கொடையும், நலமறியாக் காளையுடன் கலக்கலும், பூவிற்குவிந்த விதழில் விழுந்த ஈயும் இம்மூன்றும் கடலிற் கவிழ்ந்த கலம்.

**591.** காலையிற் பல நூலாராயாத தலைமகனும், ஆலெறிபோன்ற அயலானும், சாலை மனைக்கட்டிலிருக்கிற மனையாளும்—இம்மூன்றும் அஷ்டமத்திற் சனி.

**592.** சிலர் தங்களின் தூர்த்தசையைத் தாங்களே பாக்கு வைத்து அழைத்துக்கொள்கிறார்கள்.

**593.** "இந்தியாவானது தனது பலத்தையே நம்பியிருந்தால்தான் சுயேச்சையை இந்தியா பெறமுடியும்.—ஜெர்மனியில் ஸ்ரீமதி ஸரோஜினிதேவி.

**594.** "மெல்லிய நவீன ஆடைகளுக்கு ஆசைப்பட்டு முறட்டுத் துணிகளை வெறுப்பதன்மூலம் அவர்கள் தேசத்தை அடிமைப்படுத்துகின்றனர்."—ஸேத் ஜமன்லால் பஜாஜ்.

**595.** ஒருவரின் சுதந்தரத்தைப் பொறுத்த விஷயத்தில் நடுநிலையில் நின்று தீர்ப்பு சொல்லவேண்டியவர் துவேஷ உணர்ச்சியுடன் குரோத புத்தியுடன் தமது சொந்த எண்ணத்தையே பெரிதாகக்கொண்டு காரியம் செய்தால், அதனால் பாதகமடையக் கூடியவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவேண்டியது அவசியம்.

**596.** தூண்டுதல் என்பது மனுஷ்யருடைய உள்ளத்தில் ஏதேனும் ஒன்றைக் கண்ட மாத்திரத்தில் அதைப் பெறவேண்டுமென்று உதிக்கும் ஒருவகையான உணர்ச்சி. இதற்கு இடங்கொடாமல் அடக்குவோரே சமர்த்தராவர்.

**597.** எல்லார்க்கும் அவரவர் ஊழின்படியே மனம் வாக்குச் செயல்களும், வாழ்வு தாழ்வுகளும், கல்வி செல்வங்களும், இன்ப துன்பங்களும் வந்து பொருந்தும். ஊழாவது—பிறப்பு இறப்புப் பேறுகளுக்கெல்லாம் முதற் காரணமாகக் கருவில் அமைந்துள்ள விதி.

**598.** ஒருவன் தனது இல்வாழ்க்கையை நடத்துவதற்குப் பெரியோரை முதல் துணையாகவும், தர்மத்தை இரண்டாம் துணையாகவும், தனது கல்வி மெய் முயற்சிகளை மூன்றாம் துணையாகவும் மனைவி முதலானோரை நாலாம் துணையாகவும் கொண்டு நடத்தல் வேண்டும்,

**599.** தான் பிடி பிடியாகப் பிச்சை யெடுப்பவனே யாயினும், அவற்றில் ஒரு பிடியளவேனும் எப்பொழுதும் பிறர்க்குத்கொடுத்து உண்ணல் வேண்டும்.

**600.** தனது நண்பனே யாயினும், அவன் பெரிய ஸ்தானத்தில் இருந்துகொண்டு, தனது வர்த்தகத்தை அலக்ஷியமாய்ப் பேசி அதற்கு உதவிசெய்ய மறுக்கும்போது, அது முதற்கொண்டு தானே தன் உழைப்பால் மேன்மைப்படப் பார்க்கவேண்டுமேயன்றி, மறுபடி அவனிடம் கெஞ்சுவதற்குச் செல்லக்கூடாது.

(தொடரும்.)

# நாநா விஷயக் குறிப்புகள்

1. மயில் துத்தம் குளங் குட்டைகளிலுள்ள ஜலத்தில் சீதபேதி, வாந்திபேதி, காய்ச்சல் இவைகளை உண்டாக்கும்படியான சிற்றுயிர்களைக் கொல்லுகிறது. ஜலத்தில் செம்பின் களிம்பு சொல்பமாயின் தீங்கில்லை. செம்புமிதமிஞ்சினால் மீன்கள் சாகின்றன.

2. பழம் அழுகுவதைத் தடுப்பதற்காக 100-பாகம் குளிர்ந்த ஜலத்தில் 3-பாகம் 'பார்மலின்' என்னும் திராவகத்தைக் கலந்து அதில் பத்து நிமிஷம் துவைத்து எடுத்து, குளிர்ந்த ஜலத்தில் ஐந்து நிமிஷம் துவைத்து எடுத்து, ஜலம் வடிந்து ஆறுவதற்கு இருப்புக்கம்பி தைத்த சல்லடைகளில் வைத்துப் பரீக்ஷித்தனர். இவ்விதம் பக்குவம் செய்யப் பெற்ற வாழைப்பழம் 10-நாளும், திராக்ஷை 4.நாளும் பேரிக்காய் 5-நாளும் கொடாமல் இருந்தன. பரீக்ஷிக்கப்பட்ட இப்பழங்களைக் கடைத் தெருவில் வாங்கும்போது நன்றாகப் பழுத்தே இருந்தன.

3. பொழுது விடிந்த பின்பு தந்த சுத்தி செய்வதைவிட, படுப்பதற்கு முன்னும் தந்த சுத்தி செய்தால் பற்கள் நெடுநாள் கெடாமல் இருக்குமாம். சாப்பிட்ட உணவிலுள்ள மாவு முதலியன பற்களின் இடையில் சேர்ந்து இரவெல்லாம் அவை புழுங்கி பற்களைக் கெடுக்கின்றன. பகல் வேளைகளில் வாயில் ஊறும் நீர் அவ்வாறு நிலைக்கும் கெட்ட உணவு பதார்த்தங்களை வயிற்றுக்குள் செலுத்துகிறது. இரவிலோ இது இல்லை. ஆகையால் படுக்கைக்கு முந்தியும் பிந்தியும் பல் தேய்ப்பது சிரேஷ்டமாம்.

4. எரியக்கூடிய நெருப்புப் பெட்டி, கிரோஷின் எண்ணெய் முதலியவைகளை அவிப்பதற்கு வெல்லப்பாகு முதல் தரமானது. கோணிப்பை அல்லது கான்வாஸ் துணிகளைப் பாகில் தேய்த்து எரிகட்டை மேல் போட்டால் நெருப்பு உடனே அவிகிறது. பாகு இருக்கும் வரை அக்கட்டையில் நெருப்பு பிடிப்பதில்லை. ஆகவே, வீடுகள் பற்றிக் கொள்ளுகையில் வெல்லப்பாகை ஊற்றினால் அணைந்துவிடும். (அந்த சமயம் கிடைக்குமா?)

5. எருக்குப்பை ஒரு நிதிக்கு ஒப்பிடப்படுகிறது. எருவென்பது செடிகளின் ஆகாரம். காற்றிலிருந்தும் மண்ணிலிருந்தும் ஆகாரம் செடிக்குக் கிடைக்கிறது. காற்றிலுள்ள கரியணுவானது வாயு ரூபமாக அதற்குக் கிடைக்கிறது.

6. கக்கூஸ் எருவில் ஈரம் போய் விட்டால் கால்பங்கு ஆகிறது. அப்போது அதிக விலை கொடுத்து வாங்கும் "குவானோ" எருவுக்குச் சமானமாகும்.

7. செடியானது ஜலத்தை உட்கொள்ளும்போது அதை மணியடித்துத் தெரிவிக்கும்படியான யந்திரத்தையும், தாவரங்கள் படும் மரணவஸ்தையைக் காட்டும் யந்திரத்தையும், மின்சாரம் படுவதால் மரங்கள் அதிர்ச்சி கொள்வதையும் சுருங்குவதையும் காட்டும் யந்திரத்தையும் ஸர் ஜகதீஸ சந்திர போஸ் கண்டு பிடித்திருக்கிறார். மரத்தின் உள்ளே யிருக்கும் காற்றைவெளியே விடுகிற சிறு துவாரங்கள் மிக்க உணர்ச்சி யுள்ளவைகளா

---

உன் எதிரில் வெகு மரியாதையாக நடப்பவர் உன் முதுகுக்குப் பிறகும் அப்படியே இருப்பார் என்பது என்ன நிச்சயமா' பாசாங்கா யிருக்கக்கூடாதா?

யிருக்கின்றனவாம்; அவை இஷ்டப் படி மாறி மரத்தைப் பாதுகாத்து வருகின்றனவாம். மரத்தின் ஒவ்வொரு அணுவும் உணர்ச்சியுள்ளனவாம். அவை மிருகங்களைப்போல் உயிருள்ளனவாம்.

8. சென்னை மாகாணத்தில் 80-முனிசிபாலிடிகள் இருக்கின்றன.

9. வங்காளத்தில் மீனும் பாலும் தான் தேக பலத்தை வளர்க்கும் முக்கிய ஆகாரங்கள்.

ஒரே இடத்தில் வேலை செய்பவர்கட்கு மற்றவரின் உயர்ந்த ஸ்தானத்தைத் தாங்கள் பற்றிக்கொள்ள நாட்டம். இன்னொருவருக்குள்ள லாபத்தைக் குறைத்துவிடப்புத்தி. உள்ளுக்குள்வத்தி வைத்துவிட்டு வெளிக்கு வெகு உறவு காண்பித்தல். தானே மூட்டிவிட்ட பிரிவினைக் கலகத்தில் தனக்கு எந்த சம்மந்தமுமில்லாதது போல் காட்டல். பிறர் வேலையில் அடிக்கடி பழித்தல்-இவற்றால் வாரிக்கொள்ளும் லாபமென்ன ?

10. "உங்கள் காசுதான் செல்லும் காசோ? எங்கள் காசு செல்லாக் காசோ? நாங்கள் ஒரு லெட்டர் எழுதினால் அதற்குப் பதில் எழுத விதியில்லாமலா போய் விட்டது" என்று ஒரு மூடன் ஒரு வியாபாரிக்குக் கடிதம் எழுதினான். "உனது சொந்தத் தேவைக்காகப் பதிலைப்பெற விரும்புகையில், நீ தபால் செலவுக்கு அனுப்பாத வரையில், எங்களின்கைக்காசைச் செலவிடவேண்டிய கட்டாயமில்லை" —என்று அந்த வியாபாரி பதில் எழுதினார்.

11. வயிறு சரியில்லாவிடில் பின் கண்டபடி செய்யவேண்டும். சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு ஆகிய ஆறு சரக்குகளையும் வகைக்கு ஒரு பலம் வாங்கி, சுக்கு நீங்கலாக மற்றவைகளை அப்படியே பொடி செய்தும், சுக்கை மட்டும் தோல் சீவிவிட்டு வறுத்து தூள் செய்தும் அத்துடன் கலந்து கொள்ளவும். நித்தியம் சுடுசாதம் புசிக்கையில் இத்தூளில் ஒரு தேயிலைக் கரண்டி தூள் சாதத்தில் போட்டு நெய் விட்டுப் பிசைந்து சூட்டுடன் சாப்பிடவேண்டும். இவ்வாறு தினமும் செய்தால் வயிற்றுக்கோளாறுகள் யாவும் செம்மையாய் விடும்.

---

பெண்கள் மிகுந்த வீட்டில் ஆண் உருவம் உள்நுழைவதற்கு சந்துபொந்து கிடைப்பதில்லை. எந்த வளையில் நோக்கினும் பெண்களின் சத்தமே அதிகம் கேட்கிறது. அங்கு ஆண்மக்கள் அடிமை மிருகங்களே.

ஏமாறிப்போனவன் தான் நினைத்தபடி கெட்டுப்போவதில்லை. அவனைக் கடவுள் கைதூக்கிவிடுகிறார். ஏமாற்ற நினைத்தோரே கடைசியில் ஏமாறித் தங்களின் எந்த எண்ணமும் நிறைவேறாது போய் அனாதைகளாகின்றனர்.

வீட்டில் புதிய விருந்தாளிகளின் கூட்டம் அதிகரிப்பதில் வீட்டிலுள்ள குழந்தைகளின் படிப்புக்கு சனீஸ்வரன் பிடிக்கிறது. என் செய்ய?



# ஹாஸ்ய சஞ்சீவினி



1. ஆறு மாதங்கட்கு முன் தான் போக்கடித்துவிட்ட பணப்பையை ஒருவன் கண்டெடுத்துத் தன்னிடம் கொடுக்க, தான் அதை எண்ணிப் பார்த்துவிட்டு மௌனமாய் இருந்தான். "என் ஐயா, பணம் குறைகிறதா"—என்று அதைக் கண்டெடுத்தவன் கேட்டான். "பணம் சரியாய்த் தான் இருக்கிறது; ஆறுமாத காலம் உன்னிடம் வைத்திருந்தாயே அதற்கு வட்டி எங்கே?"—என்று பணத்திற் குரியவன் கேட்டான்.

2. ஒரு வீடு கட்டிக் கொண்டிருக்கையில் மேலிருந்து ஒரு கல் கீழே செல்பவன்மீது விழுந்தது. அவன் கோபத்துடன் அக்கல்லை மேலே எறியும்போது, மேலிருந்தவன்—"அந்தக் கல்லை என்னிடம் போடவேண்டாம். அதைக் கீழேபோட்டுவிடுங்கள்; இங்கு அதிகமாகக் கற்கள் இருக்கின்றன" என்று கடுகடுத்துக் கூறினான்.

3. மாஜிஸ்திரேட் ஒரு திருடனை நோக்கி, இப்பொழுது தானே விடுதலை யடைந்தாய், மறுபடியும் ஏன் களவாடினாய், உனக்கு ஜெயிலிலேயே இருக்கப் பிரியமா என்று கேட்டார். அதற்குத் திருடன்—"ஆம் பிரபுவே, அதற்கு மிஞ்சின சுகமேயில்லை; வேளைக்குச் சரியாக உணவு கிடைப்பதுமன்றி; குடியிருக்க ஒழுங்கான இடமுமிருக்கிறது" என்றான்.

4, ஒரு தச்சன் வேலைசெய்ய ஒரு வீட்டிற்கு வந்தபோது அவ்வீட்டு எஜமானி இரும்புப் பெட்டி சரியாகப்பூட்டியிருக்கிறதா பார்என்று தன்வேலைக்காரியிடம் சொன்னாள். அதைக்கேட்ட தச்சன் தன்னிடமிருந்த பணத்தையும் கையிலிருந்த மோதிரத்தையும் தன் குமாரனிடம் தந்து "இதை நம் வீட்டில் வைத்துவிட்டுவா, இவ்வீட்டில் ரகசியத் திருடர்கள் இருக்கிறார்கள் போலும்" என்றான்.

5. ஒருவன் தன் குழந்தைகளைப் பொட்டகிராப் பிடிக்க எவ்வளவு ஆகுமென்று கேட்க, மூன்று குழந்தைகளைப்பிடிக்க ஐந்து ரூபாய் ஆகுமென்றான். அதற்கு அவன்—"எனக்கு இரண்டு குழந்தைகள் தானிருக்கிறது, மூன்றாவது குழந்தை பிறந்தபின் மூவரையும் அழைத்துக்கொண்டு தவறாமல் உன்னிடமே வருகிறேன்" என்று சொல்லிச் சென்றான்.

6. நஞ்சப்பன் ஒருநாள் குட்டியப்பனை நோக்கி! "அப்பா குட்டியப்பா! உன் குட்டிகள் எல்லாம் க்ஷேமமா?" என்று கேட்டான். "க்ஷேமந்தான் நஞ்சப்பா! உன் நஞ்சான் குஞ்சான்களெல்லாம் எப்படி யிருக்கிறார்கள்?" என்று குட்டியப்பன் பதிலுக்குப் பதிலாக வினவினான்.

7. ரயிலில் ஒருவன் சுருட்டு பிடிப்பதைக் கண்டு அப்புகை நாற்றம் தாளாத டாக்டர் ஒருவர்—"சுருட்டு பிடிப்பதனால் தேகம் மெலிவடைந்து பலவியாதிகளுக் கிடனாகிற தென்பது எனது அநுபவம், ஆனதால் குடிப்பை

---

எவன் வீட்டின் அதிகாரியோ அவன் என்ன அக்கிரமம் செய்யினும் தவறாகக் கொள்ளாது அடக்கப்பட்டு விடுகிறது. வெளிக்கு வருவதே யில்லை. அதை வாய் விட்டுச் சொல்வோருக்கு மட்டும் பாதரக்ஷை பூசை விழுகிறது!

நிறுத்து" என்றார். அதற்கு சுருட்டு பிடிப்போன்—"பிறருடைய விஷயங்களில் வீணாகத் தலையிடுவதனால் தான் பலவித தொல்லைகளும் சச்சரவுகளும் உண்டாகிறதென்பது எனது அநுபவம்; ஆதலின் என்னைத் தடுப்பதைத் தயவுடன் நிறுத்தும்" என்றான்.

8. "நீ பரீட்சையில் தேறியதும் டாக்டர் வேலைக்குத்தான் படிக்கப் போகிறாயோ?" என்று ஒரு மாணவனை ஒருவர் விசாரித்தார். "ஆம், ஏனெனில் நோயாளி பிழைத்தாலும் செத்தாலும் டாக்டருடைய வரும்படி நிற்பதில்லை" என்று அம்மாணவன் பதில் கூறினான்.

9. ஒரு உபாத்தியாயர் ஒரு பையன் துஷ்டத்தனம் செய்யக் கண்டு அவன் தந்தையை அழைத்து வரும்படி ஒரு பையனை அனுப்பினார். அதற்குள் துஷ்டத்தனம் செய்த பையன் "என் தகப்பனார் ஒரு டாக்டர்; அவரை நீங்கள் அழைத்தால் அவர் ஒரு தரம் வருவதற்கு 10-ரூபா தரவேண்டிவரும்" என்றான்.

10. ஒரு வாயாடி வக்கீலானவர் ஒரு சிப்பாயைக் கொலை செய்தவனுக்கு எதிரியாக வாதிக்க வந்து அடியில் வருமாறு குற்றத்தை அதிகப்படுத்திக் கூறினார்.—"குற்றவாளியாகிய நீ ஓர் உயிரை உடலிலிருந்து அக்கிரமமாகப் பிரித்ததுமன்றி, கனம் பொருந்திய கவர்ன்மெண்டாருக்கு ஆபத்து வந்த காலத்தில் உதவி செய்பவர்களில் ஒருவனை இழந்துவிடவும் செய்தாய். அதுவுமன்றி மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டாரால் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மேன்மையான உடைகளையும் கத்தியால் குத்திக் கிழித்து நசுக்கி அவமதித்து அவற்றின் மேலெல்லாம் இரத்தமும் சிந்தவைத்தாய்" என்றார்.

11. "ஐந்து ரூபாயை ஒருவனுக்குக் கடன் கொடுத்த பின் அவன் திருப்பிக் கொடுக்காவிட்டால் என்ன செய்வாய்?" என்று தந்திரசாலியான ஒரு லாயர் ஒருவனைக் கேட்டார். "பணம் சேர்ந்து விட்டதாக ஓர் ரசீது எழுதி அவனுக்கு அனுப்பி விடுவேனே யொழிய, அதற்காக உங்களுக்குப் பத்து ரூபாய் கொடுத்து உங்களின் வாசலிற் காத்துக் கிடந்து வீண் கஷ்டங்களில் தலையிட்டுத் திரியமாட்டேன்" என்று பதில் கூறினான்.

12. ராமனிடம் கேசவன் புஸ்தகத்தை இரவல் கேட்க, அதை யெடுத்துக்கொண்டு போக முடியாது; இங்கேயே வேண்டுமானால் படி என்றான். அதற்கு ஒப்பாமல் கேசவன் சென்று விட்டான். சில நாட்களுக்குப் பிறகு ராமன் கேசவனுடைய வீட்டிற்குச் சென்று சம்மட்டி வேண்டுமென்று கேட்டான். எதற்கென்று கேசவன் வினவ, என்னுடைய தோட்டத்தைக் கொத்துவதற்காக என்று ராமன் சொன்னான். அதற்குக் கேசவன்—"சம்மட்டியைக் கொடுக்கத் தடையில்லை; நீ வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போகவிடேன்; இவ்விடத்திலேயே கொத்திக்கொள். எனக்குப் புஸ்தகத்திற்குச் சொன்னது போல் சம்மட்டி விஷயத்திலும் நீ நட" என்றான்.

13. மாமிசம் வாங்கச்சென்ற ஒரு பெண் அதைத் திருப்பித் திருப்பி பார்த்துவிட்டு, இது நோய்ப் பிடித்த பிராணியின் மாமிசம் என்றாள். அதற்குக் கடைக்காரன் "அம்மா! இறந்துவிட்டவர்களைப் பற்றி இழிவாகப் பேசலாகாதென்பது உனக்குத் தெரியாதா?" என்றான்.

---

அந்தரங்கத்தில் ஒழுக்கம் பிசகியும், கற்பு கெட்டும் போனவர்களைப்பற்றி வெளிமுகத்தில் எந்த ஜாடையும் குறிப்பும் கண்டுகொள்ள முடிகிறதில்லை!




**காமாட்சி கலியாணம்:—**

வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்கமுனிவர் அவர்கள் பதிப்பு.

இந்நூல் 212-விருத்தங்களால் அமைந்தது. காஞ்சிபுராண மான்மியத்தைச் சங்கிரகமாகக் கூறுவது. "காஞ்சிபுராண சாரம்" என்று இதற்கு மற்றொரு பெயருமுண்டு. இதனை இயற்றிய ஆசிரியரது பெயர் தெரியவில்லை. பாடல்கள் மிக்க சுலபமானவை. சில பாக்களின் கருத்து நமது சிற்றறிவுக்கு எட்டவில்லை. இது அருள்வாக்கே யன்றி பிரயத்தனப்பட்டுச் செய்த நூலன்று. சில இடங்களில் பாடல்கள் ஐந்தடிகளாக வருகின்றன. தமிழார்வமிக்கோர் இதனைப் பக்தி சிரத்தையுடன் ஓதுவர். ஸ்ரீமான் கா. நாமச்சிவாய முதலியாரவர்கள் இந்நூலுக்கு முன்னுரை வரைந்துள்ளார். பாஷாபிமான பரோபகார பாக்கியவந்தரான ஸ்ரீமான் ராவ் சாஹேப் C. R. முருகேச முதலியாரவர்களின் தரும வெளியீடு இது. அவர்களின் திரவிய சகாயம் உத்தமமான கைங்கரியத்திற் பயன் பட்டுள்ளது. இந்நூல் தமிழ்ச் செல்வர்கட்கு ஓர் நல்விருந்தாகும்.

**இல்லற மகா ரகசியம்:—**

இது வில்லியம் தர்ஸ்டன் எழுதியது. ஸ்ரீமான் S. கணேசன் அவர்களால் ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்த்தது. மகாத்மா காந்தி எழுதிய மதிப்புரையுடன் கூடியது. விலை மிக்க நயம். அணா 4-தான்.

இல்லற வாழ்வில் ஸதிபதிகள் நடந்து கொள்ள வேண்டிய நியதிகளைக் குறித்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்கா நாட்டினருக்கு எழுதப்பட்டதாயினும், நம்மவர்க்கும் பயன்படக்கூடிய விவாக வாழ்க்கையின் மர்மங்கள் பல இதன்கண் உள்ளன. ஸதிபதிகள் வெவ்வேறாகத் தனித்த படுக்கை கொள்ள வேண்டியதின் அவசியத்தையும், கர்ப்பத்தடைக்கான கருவிகளை உபயோகித்தலின் அறிவீனத்தையும், அதன் அநியாயங்களையும், பெண்ணின் ஜனனேந்திரியம் ஆண்மகனின் வசம் அவன் விரும்பியவாறெல்லாம் ஒப்புவிக்கப் படுதலின் அடாத கிருத்தியங்களையும், கர்ப்பகாலத்தில் சிற்றின்பந் துய்த்தல் மிகக் கொடிய நஞ்சாமென்பதையும், மதி பிறழ்ந்து பலமுறை நெருங்கும் கணவனுக்குத் தம் விருப்பமில்லாக் காலத்து இசையாது தடுக்கும் உரிமை ஒரு பெண்ணுக்கு அவசியமென்பதையும் இதன் ஆசிரியர் நன்கு வற்புறுத்தி அறிவுச்சுடர் கொளுத்துகின்றார். இவ்வகையில் இந்நூல் உயர்நலஞ் சார்ந்ததாகும். ஒவ்வொருவரும் வாசித்தறிந்து வைக்கவேண்டிய உத்தமமான அநுபவத்திற்கொத்த கருத்துகள் இந்நூல் முற்றும் பரவியுள்ளன. இதன் ஆசிரியரது ஏனைய ஒவ்வாத அபிப்பிராயங்களை நாம் கவனிக்கத் தேவை

---

பெரியோர்களான வீட்டுத் தலைவர்கள் எவ்வளவு பொய் பேசினாலும் அதைப் பொய் என்பதில்லை. ஆனால், சிறுவர்கள் உண்மையையே கூறினும் அது பொய்யென்று கண்டிக்கப்படுகிறது. கண்டிப்பதுபோல் நடப்பதில்லை

யில்லை. நூலின் சாரத்தை மட்டும் கிரகித்து நற்பயன் பெறக்கடவோம்.

**ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தக சாலையின் பதிப்புகள்:—**

இப்புஸ்தகசாலையார் சிறு சிறு நூல்களை அழகாக அச்சிட்டுத் தமிழ் மக்கட்கு உதவுவதில் சிறந்த ஊழியம் புரிகின்றனர். அவர்களின் பிரசுரங்களாக 9-சிறுநூல்கள் நமக்குக்கிடைத்திருக்கின்றன. (1) முதுமொழிக் காஞ்சி மூலமும் தெளி பொருள் விளக்க உரையும்:—இது வெகு தெளிவான உரை. உயர்ந்த பதிப்பு, விலை அணா 6. (2) வேசிமக்கள் யார்? அணா 1. (3) கோயில் எதற்கு அணா 2. (4) திருஞான சம்பந்தர் கொலைப் பாதகரா? அணா 2. (5) கோயிலை இடிப்பதா? கொண்டுதிருத்துவதா? அணா 1. (6)இராமாயணப் போராட்டம் அணா 1. இந்த 5-நூல்களும் மறுப்புரைகளாகும். (7) சுப்பிரமணியர் விஞ்சை அணா 1. (8) பீஜாக்ஷரமாலிகை அணா 1. (9) மதுரை ஸ்ரீமீனாக்ஷியம்மை அகவல் அணா 1. இம்மூன்று நூல்களும் சுத்தமான பதிப்பாக வெகு அழகாய் அச்சிடப் பெற்றுள்ளன.

[இப்புஸ்தகங்கள் "அமிர்தகுண போதினி" ஆபீஸில் கிடைக்கும்.]

## முகம் காணச்செய்வது பெரிய தர்மம்.

கணவனுக்கு ரோகம்; மனைவியோ நெடுந்தூரத்திலே. அருமை நாயகிக்குப் பிராணபத்து; அன்புள்ள நாயகனோ ஆயிரமைலுக்கப்பால். இவ்விதமே ஒருவர்மீதொருவர் உயிருக்குயிராயிருப்பவர் பலபல வேலைகளில் எங்கெங்கோ தாமதிப்பு—ஸஞ்சாரம். பிணிவாய்ப்பட்டோருக்குத் தனக்கு உயிரானவர்களைக் காண ஆவலுக்குமேல் ஆவல். பேசிக்கொள்ள எவ்வளவோ ஆசை. அருகிலிருப்போர் உடனே பொய்த் தந்தியாவது தந்து தூர இருப்பவரைத் தருவித்துவிடவேண்டும். கடிதத்திற்கு வராவிடில் தந்தி. தந்திக்கும் வராவிடில் உடனே எவரையாவது அனுப்பிக் கண்டித்து அழைத்து வந்துவிடவேண்டும். அவ்வளவு பிரமாதமல்லவென்ற நினைப்பால்தான் தூர இருப்போர் வரத் தாமதம் செய்கிறார்கள். அதை ஒரு விரோதமாகக் கருதி அவர்கள் வராமலே சவம் இடுகாட்டிற்குப் போகட்டுமென்று பிடிவாதத் துவேஷம் கொண்டுவிடக்கூடாது. அது மஹா பாவம்! எத்தனை பொய்யேனும் கூறித் தருவித்து ஒருவரையொருவர் முகம் காணவும் பேசிக்கொள்ளவும் செய்விப்பது பெரிய தர்மம். அது கடவுளுக்குப் பிரீதி. ஒரு பெரிய ஆத்ம சாந்தி.

ஒருநாள் கலியாணமாக நடத்தினாலும் வந்தவர்கள் மூன்று நாள் தங்குகிறார்களாம். பருப்பு சாம்பார் தான் அதிக சுலபமான குழம்பாயிருக்கிறதாம்!

# பறவைகளின் இன்பவாழ்க்கை.

## —இந்த இன்பம் மாந்தர்கட்கு உண்டா?—

"உன்னை இலகுவில் விடுவேனா? ஐகோர்ட்டு வரைக்கும் ஒரு கை பார்த்துவிடுகிறேன்" என்பதுதான் கிராமத்தார் இருவரது சண்டையிலும் உச்சரிக்கப் பெறும் மூல மந்திரம். நல்ல வேளை; "பிரீவி கௌன்சில்" மட்டும் இவர்களுக்கு எட்டாமற் போய்விட்டது போலும்! ஆ! காலமே! அதுவும் விரைவில் இனி இவர்களுக்கு எட்டும்படிச் செய்துவிடுவையோ யாதோ? இவர்களின் சச்சரவுகள் இவ்வளவோடு நிற்பதில்லை. வானத்தின் வஞ்சனை; அதனால் விளைவின் குறைவு; போதிய கூலியாட்கள் இன்மை; இருப்பவர் செய்யும் வேலையும் மனதிற்குப் பிடியாமை; வீட்டில் மனைவியோடு சேர்ந்து மற்றவரைப் பகைத்தல்; மற்றவரோடு சேர்ந்து மனைவியைப் பகைத்தல்; இந்த நிலைமையில் ஆடம்பர வாழ்க்கையும் வேறே!

ஒரு பறவையைப் பாருங்கள்! கண்ணிற்கெட்டிய வரை யெங்கும் பரந்து விளங்கும் நீலவானத்தில், தன் அழகிய சிறகை விரித்துத் தனது மனம் போனவாறு பறந்து பறந்து சென்று, காட்டிலோ வயலிலோ நெல், சோளம், கம்பு எவையாயினும் வேண்டியவரை பொறுக்கித் தின்று, பொன்மயமான மாலை நேரத்தில் தமக்கு உணவு அளித்த மக்கள்மீது வாழ்த்துக் கூறுவதுபோல கல்லும் உருக இன்னிசை பாடி; மரக்கொம்போ, மலைச்சிகரமோ, கோபுர முடுக்கோ எவற்றிலாயினும் யாதொரு அச்சமும் இன்றி அயர்ந்து நித்திரை செய்து, பொழுது புலர இரண்டு நாழிகைக்கு முன்னரே யெழுந்து, தனக்கும், தம் இனத்திற்கும், தம்போன்ற பிற இனங்கட்கும் ஆதாரவான பயிர்த் தொழில் செய்யும் பகுத்தறிவுபெற்ற மக்கள் இன்னும் துயில்கின்றனரே என்னும் ஏக்கத்தால், அவர்கட்கு ஊக்கமும், உழைப்பும், நல்லறிவும் தந்து காத்தல் வேண்டுமென இறைவனை நோக்கித் துதித்தல்போல கா, கா முதலிய ஒலி விகற்பங்கள் செய்து, மீண்டும் இரைதேடி விளையாடப் போகின்றன. ஆ! என்னே அவற்றின் இன்ப வாழ்க்கை! அவைகட்கு வரப்புச் சண்டையும் இல்லை, வாய்க்கால் சண்டையும் இல்லை; மனைவிக்குத் தங்க நகை செய்து போடுவதாக வாக்களித்து மாதம் மூன்றாகியும், கையில் ஒரு காசும் மிஞ்சுவதற்கு வழியில்லையே; கடன் கிடைப்பதும் அரிதாக இருக்கிறதே என்ற கவலையும் இல்லை. நாகபுரம் நாராயணசாமி பிள்ளை நான்கு குதிரை பூட்டிய வண்டியில் சவாரி போகிறார்; நான் மட்டும் நாள் முழுதும் உழைத்தும் நடந்துபோக விதித்தனையே ஈசா! என மனம் புழுங்கிக் கடவுளைச் சபிக்கும் குணமும் அவற்றிற்கில்லை. தனது

---

வந்த பணமெல்லாம் கடன் தீர்ப்பதற்கே சரியாகிவிடுகிறதென்று கணவன் மனைவியிடம் சொன்னால், அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறாள். அவள் கைக்குக் காப்பு இல்லாததே அவளது பெரிய குறை! மற்றது எவ்வாறாயினும் அதில் அவளுக்கு அத்தனை சிரத்தை யில்லையாம்!

பாட்டன் முதலிய முன்னோர்கள் பெருஞ் செல்வர்களாய் வாழ்ந்தது போய்த் தான் இப்பொழுது ஏழையானதைக் குறித்தோ, அல்லது பின்னால் நேரப் போவதைக் கலியுக தெய்வங்களாகிய சோதிடர்களால் முன்னமேயே அறிந்து, அதற்காக இரவு பகலும் வருந்துவதோ அவற்றிற்கில்லை. பசி தோன்றும்பொழுது இரை தேடிச் செல்வதும், துன்பம் நிகழும் சமயம் மட்டும் சிறிது வருந்துவதும், பின்னர் உடனே அவற்றை மறந்து உற்சாகத்தோடு விளையாடுவதுமாக அவைகள் வாழ்க்கை நடத்துகின்றன.

இங்ஙனம் பகுத்தறிவில்லாப் பறவையும் மிருகமுமன்றோ எவ்வளவோ மேன்மையாக இன்ப வாழ்வு புரிகின்றன. அவற்றிற்கு என்ன கவலை? அந்த அரிய நல்வாழ்வு மனிதர்களிடத்தில் இல்லையே!

பே. இராமாநுஜ ரெட்டியார்.

சிரிப்புக்குப் பக்கத்தில் அழுகையா? வெற்றிக்குப் பக்கத்தில் தோல்வியா? லாபத்துக்குப் பக்கத்தில் நஷ்டமா? பணம் இழந்ததற்குப் பக்கத்தில் பக்ஷணமா? காரிய பூர்த்திக்குப் பக்கத்தில் மற்றொன்றை இழத்தலா? ஒன்று கைக்கு வருகையில் மற்றொன்று காணாமற்போவதா? மேல் நிலை விருத்தியில் அதைப் பார்த்து ஆசி கூறவேண்டியவர்கள் கண் மூடிவிடுவதா? நாளும் நாளும் ஒவ்வொரு கவலையா? என்னே உலகின் நிலை! என்னே நம் ஜீவியம்!

## வருவது சீக்கிரத்தில் இருக்கட்டும்.

இவ்விதம் வியாதிப் படுக்கையில் உள்ளவர்கள் எழுதினால் எவ்வளவு வேலைகள் இருப்பினும் அதை மூலையிற் போட்டுவிட்டு உடனே புறப்பட்டுவிடு. தாங்கள் அதிகநாள் ஜீவிப்பதற்கில்லை யென்றே "வருவது சீக்கிரத்திலிருக்கட்டும்" என்று அவர்கள் எழுதுகிறார்கள். அதைக் கண்டதும் நாளை என்பதுகூட இல்லாமல் இன்றே பிரயாணப்படு. கடிதத்தை நம்பாதே. நேரில் போய்ப் பார்த்துவிடு. செலவுகளை எண்ணாதே. வந்த காரியத்தை முடித்துவிட்டுப் புறப்பட யோசிக்காதே. அவர்களுக்கும் சாவா என்று ஏமாறாதே. தேகம் ஒரு நிலையா? வியாதி என்றதும் உடனே ரயில் ஏற அவசரப்படு. படுத்த படுக்கை;—ஆகாரமில்லை; பால்தான்—என்று கடிதம் வந்தால் அந்த நிமிஷமே ஓடு. பிறகு அவர்கள் பிழைத்தால் அது உன் பாக்கியம். உன்வாழ்நாளில் இக்குறிப்பை என்றும் நினைத்துக்கொள். ஏமாறாதே.

# சென்றுபோன நாட்கள்

பண்டித - ம. கோபால கிருஷ்ண ஐயர்.



தாம் பிறந்த நாட்டிற்கு அதிகம் உழைக்க வேண்டுமென்று நினைத்து எத்தனையோ சலியா முயற்சிகள் புரிந்தும் பொதுஜன ஆதரணையில்லாது உள்ளம் குன்றிப்போயும் ஊக்கம் தளராது உழைத்துவந்த பெரியோர்களில் **ஸ்ரீமான் ம. கோபால கிருஷ்ணஐயர்** அவர்களும் ஒருவராவர். இவர் தமது பொது உழைப்பின் ஆரம்பகாலத்தில் மதுரையில் வாசமாக இருந்தார். "மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்" என ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதில் எண்ணற்ற உபன்யாஸங்கள்நிகழ்த்தி மாணவர்களினிடையே ஊக்கத்தை வளர்த்து வருவதானார். இவர் மதுரைக் கலாசாலையில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். அக்காலத்தில் பிரஸித்தியுடன் நடைபெற்ற "**விவேகபாநு**" பத்திரிகையில் விசேஷித்த வியாசங்கள் எழுதி வந்தார். தமிழகத்தில் எத்தனை பத்திரிகைகள் உண்டோ அவ்வளவுக்கும் விஷயதானம் செய்துவந்தார். "**வித்தியாபாநு**" என்ற மாதப் பத்திரிகையில் கூட்டு ஆசிரியராகவும் விளங்கினார். அதன் பின்னர் விவேகோதயம்" என்ற மாதஸஞ்சிகையைத் தொடங்கி நடத்தி வந்தார். ஆங்கிலப் பாக்களுக்குச் சரியான தமிழ்ப்பாவினங்களாக மொழிபெயர்க்கும் ஆற்றலில் இவருக்கு இணையாக எவரையும் சொல்லவொண்ணாது. அவர் இயற்றிய "**அரும் பொருட்டிரட்டு**" என்ற பெரிய நூலில் அவர் மொழிபெயர்த்த பாடல்களும் அவர் வரைந்த முக்கிய வியாசங்களும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. 600-பக்கங்களுள்ள அந்த நூலைத்தழுவி அதன் பல பாகங்களாக வெளியிடத் தம்மிடம் எவ்வளவோ விஷயங்கள் கட்டுக்கட்டாக எழுதிக் கிடக்கின்றன வென்றும் தெரிவித்துள்ளார். ஆயினும் என்ன? அந்த அரியநூல் போதுமான வரையில் விற்கப்படவில்லை அதன் அருமைதெரிந்தோர் மட்டும் அதனைப் பெற்றுப் பொன்போல் போற்றினர்.

ஒரு ஆசிரியர் எத்துணைத் திறமையுள்ளவரா யிருப்பினும் பொதுஜனங்கள் ஆதரிக்கத் தவறிவிடின் அவர் யாது செய்ய இயலும்? எந்த ஆசிரியர் நன்கு உழைத்து நல்ல நூல்கள் செய்யவல்லவரோ அவரைத்தான் ஜனங்கள் ஆதரிக்கத் தவறிப்போய் விடுகிறார்கள். ஒரு பிரஸித்த ஆசிரியர் தாம் எத்துணை ஆராய்ச்சி செய்து வருந்தி அருமையாக நூல்கள் இயற்றிய போதிலும் அவை போதுமான அளவுவியாபிக்காமலும், அதற்குச் செலவிட்ட பணமே கைக்கு வராமலும் இருப்பதைச் சிந்தித்து ஒரு யுக்தி செய்தனராம். தமது பெயர் பிரபலமாவதற்கான வேறு முயற்சிகள்

---

இருக்கிற கடனைத் தீர்ப்பதற்காகக் கையில் வந்த பணத்தையெல்லாம் மிக்க மன நோவுடனே செலவிட்டுக்கொண்டிருக்கும்போது புது விருந்தினர்கள் வண்டியை விட்டிறங்கி மூட்டைகளுடன் வீட்டிற்குள் நுழைகிறார்கள்!

புரிந்து அரசாங்க சபையில் ஒரு அங்கத்தினராகி, வர்த்தகத்திலும் ஒரு உயர்ந்த சீமானுகி, அதன் பின்பு இத்தகைய பேரும் பிரதாபங்களுமுள்ள இன்னுர் எழுதிய நூல் எனத் தமது நூல்களை வெளியில் அனுப்ப அவற்றை யாவரும் உத்ஸாகத்துடன் வாங்கத் தொடங்கினராம். முன் நூல்களையே சிறிது திருத்திப் பெயரை மாற்றிப் புதுநூல்கள் போலும் புகவிடுத்தனராம். அதனை வாசித்தோர் யாவரும் வியந்து பாராட்டினராம். இவ்வளவு பாடுகளும் யுக்திகளும் புரிந்து தமது நூல்களைப் பொது ஜனங்கள் மதிக்கும்படி செய்ததாக மேனுட்டு ஆசிரியரொருவர் கூறுகின்றுர். இவ்வளவு யுக்திகளுக்குத் தமிழ் நாட்டில் எங்கு வசதிகள் இருக்கின்றன? ஆசிரியர்களோ ஏழ்மை வாழ்விலுள்ளவர்கள்; அவற்றை விளம்பரம் செய்யக்கூட அவர்கள் சக்தியற்றவர்கள். ஜனங்களும் அவர்களை ஆதரிப்பது அபூர்வமாகிறது. தங்களுக்குத் தாங்களே முயலும் முயற்சியில் "சொந்தத்தில் விருத்தி" என்பதே அரிதாகவும் ஆகின்றது. இது தமிழ்நாட்டு ஆசிரியர்களின் இன்றைய பரிதாப நிலை!

இந்தப் பரிதாப ஆசிரியர்களில் ஸ்ரீமான் கோபால கிருஷ்ண ஐயரவர்களும் ஒருவராவர். அவர் வரைந்த சில நூல்கள் பாடசாலைப் புஸ்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டு அதனுல் இரண்டொரு காசுகள் அவருக்குக் கிடைத்திருக்கலாம். அவ்வளவேயன்றி அவர் பணமூட்டை கட்டியது ஒன்றுமில்லை. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒப்பற்ற பாண்டித்தியமுடைய மேதாவியின் வாழ்க்கை இவ்வாறுக இருந்ததெனில் அது எத்துணைத் துக்ககரமானது? ஸ்ரீஐயர் மதுரையிலிருந்தும் திரிச்சிராப்பள்ளிக்கு வந்து நாஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக ஆனுர். அவர் நடத்திய "விவேகோதயம்" பத்திரிகை நின்றுபோய் விட, அதன் பின் 'நச்சினர்க்கினியன்" என்ற அரியதொரு மாதப்பத்திரிகையைக் கடைசி வரையிலும் நடத்தினுர். பாயும் படுக்கையுமாக அவர் கிடந்தபோதும் பத்திரிகைக்கு விஷயங்கள் வரைந்துவந்தார். அவரது தமிழ்நடை சுலபமுள்ளதேயாயினும் அவரது பண்டித்தியம் அதில் நன்கு விளங்கும். கடினபதங்களை இடமறிந்து உபயோகித்து அவற்றை வாசிக்கும் வகையில் தாமே பொருள் விளங்கிக்கொள்ளும் விதமாக வரைவது அவரது வழக்கம். எஸ். ஜி. இராமாநுஜன் தனது 17-வது வயதில் "பிரஜாநுகூலன்" பத்திரிகையை 1904-ம் வருஷத்தில் தொடங்கியபோது அதன் நிருபநேயர்களுள் ஒருவ்ராக இருந்த ஐயரவர்கள் ராமாநுஜத்தின் இல்லத்திற்கு வந்து "பிரஜாநுகூலன் பத்திராதிபர் யார்" என்றுவினவ, 17-வயதுச் சிறுவன் தானே பத்திராதிபரென,— 'நீங்களா பத்திராதிபர்?"—ராமாநுஜலு நாயுடு நீங்கள் தானு?" என்று வியப்புடனும் விசாரித்தார். ஸ்ரீமான் ஐயரவர்கள் 1927-ம் ௵ ஏப்பிரல் மாதத்தில் ஐம்பதுகூடச் சரியாக ஆகாத வயதில் காலமானுர். அவர் பத்திரிகையும் அவருடன் நின்றது. ஐயரவர்கள் எவருக்கும் எளியவர். தமது பாண்டித்யத்தையே தாம் அறியாதவர். ஆடம்பரமற்றவர். எங்கும் அன்பைக் காண்பவர். அவரது தமிழ்க்கவிகள் சுலபமும் அர்த்த புஷ்டியு முடையவையாகும்.

---

படித்த பெண்கள் எவ்வீட்டுக்கு விருந்தினராய்ச் சென்றுலும் அவர்களுக்கு அங்கு வாசிக்க ஏதாவது ஒன்று கிடைத்து மதிப்பும் உயருகிறது. படியாப் பாவையர்க்கோ அங்கு முருங்கைக்காய் அறுக்கத் தான் தெரிகிறது!

| | | |
|---|---|---|
| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | விகடப்ரதாபன்<br>REGISTERED TRADE MARK | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |

# மயக்கடா அப்பா மயக்கு!



என்ன மயக்கு? எங்கே மயக்கு? எதை மயக்குகிறது? இதென்ன விகடன் மயக்கு வித்தைகள் கற்றுக் கொடுக்கப் புறப்பட்டானோ வென்பீர்களோ? ஊரிலே உலகத்திலே முந்தியே முடிபோட்டு முழம்போட்டு முறுக்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறவைகளையெடுத்துத் தேங்காய் உடைப்பதுபோல உடைத்து அதனுள்ளிருக்கிற ஒழுகலையும் அழுகலையும் காட்ட வந்ததே தவிர, விகடன் புதிதாய் எதையும் கற்பித்துக்கொண்டு கனைப்பதற்குப் புறப்படவில்லை. விகடன் சொல்லவந்த மயக்கு என்பதற்கு மயக்கம் என்று ஒரு பொருள். 'மயக்கிவிடு' என்று ஏவுதலுமாகும். மயக்குதல் என்றால் புத்தியைக் கலக்குதல், அறிவைக் கெடுத்தல், அன்பில் அழுந்துதல் என்று இப்படியெல்லாம் பல அர்த்தங்கள் உண்டு. இவற்றில் நல்லதையும் கெட்டதையும் நலங்குலைந்ததையும் வெளியில் கொஞ்சம் இழுத்து விடுகிறேன்; கேட்கிறீர்களா?

***

முதலிலே கல்யாண மயக்கு ஒரு பெரிய மயக்கு. இதை விரும்பாதவர்களுமில்லை. இதனால் தொல்லைப் படாதவர்களுமில்லை. நித்த நித்தம் சண்டைகளும் இதனாலே தான். சம்பாதிக்கிற பணமெல்லாம் செலவாய்விடுகிறதும் இதிலே தான். ஒரு நாளோ—மூன்று நாளோ எல்லோரும் கூடியிருந்துவிட்டு ஒரு முடி விழுந்ததும் அவரவர்பாட்டில் ஒதுங்கிக்கொள்ள, முடிபோட்டவனும் முடிக்கு உட்பட்டவளும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு துணையாயிருந்து குடித்தனப் பாரச் சுமையைத் தூக்கவேண்டியிருக்கிறது. இதில் கண்கள் பிதுங்கினாலும் அதில் என்னவோ ஒரு சுகம் இருப்பதாக மயக்குகிற மயக்கு இவ்விருவரையும் கடைசிநாள் வரையிலும் இடித்துக்கொண்டோ கடித்துக்கொண்டோ மனது சம்மதித்துப்போக வைத்து விடுகிறது! இதிலே இன்னொரு மயக்கும் இருக்கிறது. விவாகத்திற்கு முன் ஒரு பெண் விலைபடுவதற்கு

---

சில நாவல்களில் கற்பனைப் பகுதியோ பூஜ்யம்! வழவழவென்று சுற்றிச் சுற்றிப் போகிறது. அந்த 700-பக்க நாவலை 50-பக்கத்தில் அடக்கிவிடலாம்.

ஏற்றபடி அங்க லக்ஷணங்கள் யாவும் நல்ல பக்குவமாய்ப் பொருந்தி நிற்பது தான். அந்தப் பக்குவ நிலையிலேயே அவளை ஒருவன் கழுத்தில் கட்டி விலையாக்கிவிடுகிறார்கள். அதற்குப் பின் இரண்டொரு வருஷத்தில் அவளது பக்குவ அழகெல்லாம் மாறிக் கிழவியாத்தாளாகிவிடுகிருள். இந்தக் கிழட்டுத்தனம் கல்யாணத்துக்கு முன்பே இருந்தால் அவளுக்கு விவாகம் நடக்குமா? கொள்ளும்போதுமட்டும் தட்டான் பளபளவென்று தங்கநகைகளை மெருகு வைத்துக் கொடுப்பதுபோல் இவளது அங்க பக்குவங்களும் உன்னத வசீகரமாய் சிறப்புற்று விளங்குகின்றன. இது இயற்கையான வியாபார மயக்கல்லவா? இனி இந்த வியாபாரம் நடந்துவிட்டதற்குப் பிறகு கணவனோடு வாழுகிற நாளில் இந்த வயசுப்பாட்டிகள் அந்தக் கொண்டவனை மயக்குகிறதற்குப் போடுகிற சிருங்காரங்களும் சிங்காரவகைகளும் எல்லாவற்றையும் விட ஒரு பெரிய மயக்கு! இந்தக் கிழவிகளை அவன் நல்ல வயசுக்குட்டிகளாக நினைத்துப் பிரமாதமாக மயங்கிப்போகிறானே அது இன்னும் பெரியதொரு விசித்திர மயக்கடா அப்பா!

***

இனி, துடுக்குள்ள துஷ்டப் பெண்களின் மயக்கு ஒன்றிருக்கிறது. அது கொண்டவனுக்கு அடங்காத கசுமாலக் குப்பையா யிருந்தாலும் வெகு வணக்கமாகச் சிலசமயங்களில் நடந்துகொள்ளுகிறது. அதன் காரணம் தனக்கு ஆகவேண்டியிருக்கிற ஒரு காரியத்துக்காக இப்படி வெகு நல்லவளாக நடந்து மயக்குகிறது தான்! இன்னொரு மயக்கென்னவெனில், சில பெண்கள் அவர்களின் தாய்வீட்டார் வந்திருக்கையில் கொண்டவன் என்ன குலைத்துத் தள்ளினாலும் பதில்பேசாத பதிவிரதையாக அதற்கெல்லாம் அடங்கி நின்று அமரிக்கை காட்டுகிறது. இது எதற்கெனில் அந்த சமயம் ஆகவேண்டிய வந்தவர்களுக்கு ஆக்கிக்கொட்டும் பெரிய செலவுகளுக்குப் புருஷன் முகம் கோணாமலும், வந்தவர்களை அவமானப்படுத்திவிடாமலும் இருப்பதற்குத்தான். அவர்கள் போனபிறகு பழயபடி வாயாடிச் சித்தராங்கிகளாகக் கணவனை எதிர்த்துக்கொள்ளுவார்கள். அப்பொழுது அவன் மயக்கம் தெளிந்து, அடி பாவி! உன் மயக்கிலே உன்னவர்களுக்கு அவ்வளவு பணம் செலவிட்டு விருந்துகள் செய்வித்தேனே, உனக்கு விஸ்வாசமில்லையே என்று தலையிலடித்துக்கொள்வான். அதற்கு இவளோ ஏன் செய்ய வேண்டும்?—யார் செய்யச் சொன்னது?—வந்தவர்களைப் போ என்று சொல்லிவிடுகிறதுதானே? வீட்டின் பவிசி வெளிப்போகாமல் அவ்வளவுக் காவது மூடிவைத்து அவர்களை யனுப்பினேனே, அதற்கா இந்த முறைப்பு என்று எதிர்த்துக்கொள்வாள். பிறகு கொண்டவனுக்குக் கோபமேறி நடக்கிற கும்மா குத்து உதைகளுக்கு விகடன் சொல்லக் கேட்பானேன்! இது வெகு தமாஷ் சங்கதியாகக் கண்குளிரக் காணலாமாயினும் இது ஒரு வயிற்றெரிச்சல் சங்கதி! உழைத்து வீணுகிற பாடு!

***

கல்யாணத்து மகிழ்ச்சிகள் இப்படியிருந்தாலும், இதற்கு முன்பு ஆதியிலே பெண்கொள்ள—பெண் வாங்க வந்த வகையிலே நடக்கிற விருந்து

மிகப் பிரசித்தமான பெரியோர்களுக்கு பகவான் வெறுக்கத்தக்க ஒவ்வொரு குறையை உள்ளே நுழைத்து விட்டுப் பரிதபிக்கச் செய்துவிடுகிறார்.

கள் ஒரு பெரிய மயக்கடி சித்து வித்தையப்பா! ஹா! என்ன உபசாரம்! என்ன மரியாதை! அந்தக் கல்யாணப்பெண் நடந்துகொண்ட அடக்கமென்ன, இந்தண்டை இந்த மாப்பிள்ளைக் கோவணக்காரன் போட்ட யோக்கியமான வேஷங்கள் எத்தனை! இவ்வளவு மயக்குத்தனங்களும் கடைசியிலே விவாகமுடிச்சு விழுந்ததும் பழய மண்கிண்ணியே மண்கிண்ணி என்றாய்விடுகிறது என்ன ஒரு அதிசயம்! ஒரு வீட்டில் நாலைந்து பெண்கள் இருந்து மூத்தவளின் முக அழகு மனதுக்குப் பிடிக்காமல் மற்றப் பெண்களைக் கேட்கும்போது, மூத்த பெண்ணுக்கு விவாகமாகாமல் மற்ற பெண்ணுக்குச் செய்ய முடியாதென்பது ஒரு பக்குவமான மயக்கு. இதன் காரணமாக மூத்த பெண்ணின் விவாகத்திற்கே முந்திக்கொண்ட கவலைதோன்றி அவளுக்கு எப்படியும் ஒரு மாங்கல்ய முடிச்சு விழப் பண்ணிவிடுகிறது. இது பழய காலத்துத் தாத்தாக்கள் ஏற்படுத்திய கட்டுப்பாட்டின் மயக்கு!

***

மற்றொரு மயக்கான கட்டுப்பாடாக விவாக நாளில் நலுங்கு வைத்தலைச் சொல்லவேண்டும். பல பெண்கள் மணமகனைத்தொட்டு அவனுக்குப் பெண் ஊடலை உண்டாக்கி அவனைக் குசால்படுத்தி உலக மயக்கிலே நன்றாக அழுந்திவிடும்படி அமுக்குகிற சங்கதி இது! எவ்வளவு குடும்ப சச்சரவிலும் குடும்பத்தை விட்டுப் போகாதபடி இழுக்கவைக்கிற மயக்கு ஒரு பெரிய மயக்கு! வீட்டில் கோபித்துக்கொண்டு வெளியில் உணவு வைத்துக்கொண்டாலும் அது ஒரு தனிப்பட்ட பெருஞ் செலவாய், வயிறு நிறையாத விதமாகவே உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் மறுபடியும் வீட்டோடு சேர்ந்துகொண்டுவிடுகிறான். நேற்றுபோட்ட சண்டையும், தன் மனைவியை அடிப்பதற்குப் பதிலாகத் தன் தலையில் தானேயடித்துக்கொண்ட சங்கதியும், அந்தக் கோபத்தில் குழந்தைகளுக்குக் குத்துகள் விட்ட தடபுடலும் இன்று மாறி மறந்து சாந்தமாகி வீட்டோடு ஒட்டிப் போய்விடுகிறான். இது ஒரு ஆச்சரியமான மயக்கல்லவா! இது குடும்ப பாசத்தின் ஒரு தனி மயக்கல்லவா? இவ்விதமே சொந்த ஊரின் மீதுள்ள பாசத்தின் மயக்கிலேதான் எந்த நகரம்—சீமையில் உயர்மனை உப்பரிக்கையில் வாழ்ந்தாலும், தனது சின்ன ஊரையும் குடிசையையுமே மேன்மையாக நினைத்துவிடச் செய்வதன்றி, அதை ஆசையோடு காண ஓடி வரும்படியும் தூண்டிவிடுகிறது! உலகபாசத்தின் மயக்கும், பொன்னாசையிலுள்ள மயக்கும் இப்படியே மேன்மேலும் வளர்வதன்றித் தேய்வதென்பது எந்நாளுமில்லை!

***

ஒரு வைப்பு ஸ்திரீ காட்டுகிற மயக்கு வித்தையை ஒரு மாங்கல்ய ஸ்திரீ காட்டுவதில்லை. தான் அவனுக்கு இகத்திலும் பரத்திலும் சொந்தமென்கிற தன்மையில் தன் அன்பை அவ்வளவாய் வெளியிட்டுக்கொள்ளப் பிரயாசைப்படுவதில்லை. அன்றியும் அதிக உரிமை காரணமாக அதிக வருத்தங்களும் தோன்றிக்கொண்டு அதிக கசப்பும் அடிக்கடி சூழ்வதில் பசப்புக்கு வழி மூடிவிடுகிறது. வைப்பு ஸ்திரீயின் விஷயமோ இகத்

---

மேக விஷநோய்களுக்கு அஞ்சி அந்த ரோகங்களுள்ள விலைமாதரை நாடாமல், பிணியற்ற பரிசுத்தமான குலமாதரிடமே இஷ்டபூர்த்தி கொண்டுவிட சில தந்திரசாலிகளான சண்டாளக் காமிகள் மெள்ள முயல்கிறார்களாம்!

துக்கு மட்டுமே யானதாலும், எங்கு தன்னை விலக்கி விடுவானோ வென்ற ஐயத்தாலும், ஒரு மனைவியை விட மேற்பட்டவளாய்க் காண்பித்துக்கொண்டு நல்ல நல்ல சொக்கு பொடிகளைத் தூவி மயக்குகிறாள்! இதிலே ஆடவன் ஏமாறிவிடுகிறான். மனைவியை ஒதுக்குகிறான்; இவளைத் தலையில் தூக்கி வைத்துக்கொள்கிறான்! இது ஒரு விசித்திர மயக்கு!

***

கர்ப்பிணிகளிடம் ஒரு மயக்கு இருக்கிறது. அந்த மயக்கில் அவர்களிடம் எவரும் உருக்கமும் இரக்கமும் வைத்து ஆதரவான வார்த்தை சொல்லி, அவளுக்கு எந்தக் காலத்திலும் அருகிலிருந்து உதவப்பண்ணி விடுகிறது. குழந்தைகள் காட்டுகிற மயக்கு ஊர் அறிந்த சங்கதி. குழந்தைகளிடம் உலகமே மயங்கிவிடுகிறது. அவர்கள் கேட்டதெல்லாம் கொடுத்து உணவு ஊட்டி அவர்களைப் போஷிக்கும்படி இந்த மயக்கு தூண்டுகிறது. தன்னைத் தான் காக்கத் திறனற்ற நிலையில் இந்த மயக்கைக் கடவுள் அவர்களுக்கு உதவி யிருக்கிறார்போலும்! பிச்சைக்காரனின் மயக்கிலும் அவனிடம் பிறர் உருகி இரங்கிப் பிச்சை போடும்படியான ஒரு உள்தத்துவம் மறைந்து நிற்கிறது!

***

கடைக்காரன் தன் சாமான்களைக் கடைமுன்பாகப் பரப்பிவைத்துக் காட்டுவதிலும் ஒரு மயக்கு இருக்கிறது. அது மற்றவர்களை வசீகரித்து அந்தக் கடையில் வியாபாரம் கொள்ளச் செய்கிறது! உயர்ந்த ஸ்தானங்களில் வீற்றிருப்போரின் மயக்கால் மற்றவர்கள் அவர்கட்கு உட்படுபவர்களாகி அவர்களின் அதிகாரமும் கொடி கட்டிப் பறக்கிறது! ஊரில் பல கக்ஷிகள் தோன்றுவதிலே அதற்குக் காரணமானவர்கள் அந்தக் கக்ஷிகளின் மயக்கில் தங்கள் வயிற்றையும் பணப்பையையும் நன்றாக நிரப்பிக் கொள்ளக் கூடுமானதாகி, வெளியில் மட்டும் பரோபகாரத்துவம் பேச வைக்கிறது! விரத நாள் மயக்கிலே வீடு வாசல் முழுதும் மெழுகிக் கோலம் இடப்பட்டு சுத்தம் செய்யப்படுவது மட்டுமன்றி, அவ்விரதத்தை யனுசரிப்போரின் உள்ளங்களும் பரிசுத்தப்பட்டு நல் வழிக்குத் திரும்புகிறது!

***

குடும்பத் தலைவனின் மயக்கில் அந்த வீடு ஒருவித ஒழுங்கும் சீரும் கௌரவமுமாய் நால்வர் மதிக்க நன்மணம் கமழ்கிறது. அத்தலைவன் கண் மூடிவிட்டாலோ அத்துடன் யாவும் பாழ்பட்டு அவன் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளெல்லாம் தாறுமாறாகிறது! ஒரு கடையிலோ ஒரு உத்தியோகத்திலோ அதன் எஜமானனோ தலைமை அதிகாரியோ வந்து குந்திவிடும்போது அவனது மயக்கில் எல்லா வேலையாட்களும் சிப்பந்திகளும் சரிவரக் காரியங்களைக் கவனித்து அச்சத்துடன் நடக்கிறார்கள். அத்தலைவன் அங்கு இராதபோதோ யாவும் கடாமுடா ஆகின்றது! ஒரு விசேஷத்திற்குப் பந்தல் அலங்கரிப்பதின் மயக்கில் அதைப் பார்த்தவுடனே யாவருள்ளமும் பேதமற்றுப் பொருந்தி அந்த விசேஷத்தை நடத்துவிக்க ஒன்றுபட்டுப் போய் விடுகிறது! அந்தப் பந்தல் மயக்கு அவ்

---

"எனக்குத் தெரிந்தமட்டில் இக்கதையை எழுதியவர் செய்தது வீண் வேலை; அதை வாசிப்பதும் வீண் வேலையேயாம்" —என்று ஒரு நாவலுக்கு ஒருவர் அபிப்பிராயம் எழுதுகிறார்.

விசேஷத்தை ஒரு மகத்துவச் செயலாகவும் பாவிக்க வைத்துவிடுகிறது!

***

**தாம்** பிறரிடம் கஷ்டங்களைத் தெரிவித்துக்கொள்வதில் அவர்கள் எதிலும் பட்டுக்கொள்ளாதவர்களாயிருந்தால், அவர்கள் உதவி செய்வார்களென்ற மயக்கு விட்டுப்போகிறது; விலகியும் தூரப் போகவைத்து விடுகிறது. பிறர் குணம் கண்டறிய அவர்களின் கருத்துக்கிசைந்தமாதிரி நடந்து மயக்குவதில் அவர்களின் யதார்த்த தன்மை பளா பளாவென்று விளங்கிவிடுகிறது! கோயில்களிலே உற்சவ அலங்காரங்களின் மயக்கு நெஞ்சிலே ஒரு புதிய பக்தியையும் பக்குவத்தையும் உண்டுபண்ணுகின்றது! சுற்றத்தார் சூழ்ந்துகொண்டு மயக்குவதில் தங்களின் காரியத்தையும் வயிற்றையும் சரிசெய்துகொள்கிறார்கள்! வெகு உறவில் பசப்பித் தன் குடும்ப முழுவதையும் மற்றொரு வீட்டில் விட்டுத் தன் பாரத்தை அங்கு இறக்கிவைத்துவிட்டுக் கை கடிக்காமல் இலவசத்தில் தின்று, அன்புக்காகஅவ்வீட்டுக்காரனை அப்படி சூழ்ந்துகொண்டு நிற்பதாக மயக்குகிற மயக்கு மஹா பாசாங்கான பக்குவ மயக்காகும்! இப்படி மயக்குகிறவர்கள்தான் ஒரு ஆபத்தான காலத்தில் உதவாமல் கை நழுவுவோராக இருப்பார்கள். அல்லது அந்த சமயம் ஏதேனும் ஒரு சச்சரவிட்டுக் கொண்டு துள்ளிப் பிரிந்துவிடுபவர்களாக இருப்பார்கள்!

***

**சுபாசுபங்கட்கு** அழைக்காதிருந்தும் வலியவந்து பல நாள் குந்திக் கொண்டு வயிறு நிரப்பித் தாங்களும் பந்துக்கள், அறிமுகஸ்தர்களென்று காட்டுவதும் ஒரு மயக்கு! ஒவ்வொரு தடவைக்கும் வரும்போதெல்லாம் ஒன்றைச் சுற்றிக்கொண்டு போகப் பக்குவமாகத் தடவுவது மற்றொரு மயக்கு! "அப்படா! புறப்படுகிறீர்களா" என்று உள்ளுக்குள் திருப்தி பட்டுக்கொண்டு வெளிக்கு வெகு பிரிவாற்றுமையுடனே அனுப்ப மனமில்லாமல் அனுப்புவதுபோல் நடிக்கிறதும் ஒரு மயக்கு! தனக்கு எந்தச் செலவும் தொல்லையும் நேராமல் பார்த்துக்கொண்டு, உனக்கு அய்யா போல் இருக்கிறேன், அண்ணன் போல் இருக்கிறேன், அக்கா தங்கை போல் இருக்கிறேன்—போனவர்களுக்கு வருந்தாதே—நான் அதற்குப் பதிலாக இருந்து அவர்களைப்போல் நடக்கிறேன் என்று பசப்புகிறதும் ஒரு மயக்கு! இந்த மயக்கிலே வெகு பேர் ஏமாறிவிட்டுப் பிறகு இந்தப் பித்தளைக் கட்டிகளைப் பொன் கட்டிகளென்று வீணுக்கு மயங்கினோமே யென்று தெளிவதுமுண்டு!

***

**சாப்**பிட்டுவிட்டுப் போகிறதற்கு ஏதாவது ஒரு பாசாங்குப்பேச்சு பேசிவிட்டுப் போகிறதும் ஒரு மயக்கு! இந்தப் பேச்சு ஒரு காசுக்கும் பயன் படாது. தலைப்பாகை—செராய் முதலிய தடபுடல் உடுப்புகளை யணிதல் தாங்கள் வேலையில் அத்தனைக் கெட்டிக்காரர்கள்போலக் காட்டிப் பசப்புகிற ஒரு மயக்கு! அச்சுக்கூடத் தின்மயக்கோ மஹா பெரிய மயக்கு! வெறும் காகிதத்துக்கும், தன் பெயர் விலாஸம் அச்சிட்ட காகிதத்துக்கும் வெகு பேதம் காட்டி உலகினரை மயக்குவிப்பது ஒரு அச்சிட்ட காகிதம் செய்கிற மயக்கு! அந்த அச்சு

---

ஒருவனுடைய மானத்தைக் குலைப்பதற்காக அவனுக்குத் தெரிந்தவர்களிடம் போய்ச் சொல்லிப் பழிப்பதற்கு ரயில் செலவு செய்துகொண்டுங் கூடப் புறப்பட்டுப் போகிறார்கள். கடைசியில் வாரிக்கொள்வது என்னவோ ?

இல்லாத வெறுங்காகிதமோ மயக்குவ தில்லை! விளக்கு வெளிச்சத்தின் மயக்கு மஞ்சளையும் வெண்மையா கக் காண்பித்துப் பொய் பசப்புகள் செய்யுமானதால் வியாபாரிகளும், நாடகக்காரர்களும் விளக்கு மயக்கில் வெகு பணம் வாருகிறார்கள்! ஆடவர் கள் கற்பழிக்கும் மயக்கு அது ஒரு பெரிய புராணம் தான்! அன்பாய் உட்கார்ந்துகொண்டே ஒருவரின் அந்தரங்கத்தை யெல்லாம் ஆராய்ந் தறிகிறதும் ஒரு தந்திரமான மயக்கு தான்! இத்தகையோரை வீட்டிலும் கடையிலும் சேர்ப்பது என்றைக்கும் ஆபத்தில் மாட்டிக்கொள்ளவே வைத் துவிடும். இவ்வித வஞ்சக ஆராய்ச்சி கள் பிறர் வீட்டில் செய்வது தன் காரியக்குட்டிகளின் கபட வேலை!

***

எல்லாவற்றிலும் பெரியது அர சன் போடுகிற மயக்கு! அவர் எங் கேயோ ஒரு பக்கம் கிடக்க, அவரது ஆணை அவரது ராஜ்ய முழுவதும் சென்று நடக்கிறது. இந்த ஒரு மயக்குச் சங்கதியால்தான் அரசனைக் கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தி கடவுளின் ஆணை செல்வது போல் அரசனின் ஆணையும் செல்கிற தென்று காட்டுகிறார்கள். உத்தியோ கஸ்தனின் அதிகாரம் செல்வது அவ னது ராஜஉடையின் மயக்கால்தான்! விபசாரக் கள்வனின் வணக்கமும், அவன் அடிக்கடி வீடு வந்து போகிற உறவும் அவன் தன் கருத்தை நிறை வேற்றிக்கொள்ள வீசுகிற ஒரு மயக் காகும்! மிகவும் நமக்காக உழைப்ப தாய் சிலர் மயக்குவதும் அவர்களின் குறிப்பிட்ட ஏதோ ஒரு சங்கதிக்கா கவே இருக்கும்! பிணியாளியைப் பார்த்து வைத்தியன் பரிதாபப்படுவ தும் தனக்கு ஏற்பட்ட ஒரு புதிய வ ருமான லாபத்தை மற்றவர்கள் கண்டு கொள்ளாதிருக்கும்படி போடுகிற ஒரு மயக்கு வித்தைதான்!

***

இப்படியாக உலக மயக்கு களை விகடன் நெடுக ஆராய்ந் ததில், புத்தியைக் கலக்குவதி லும், அறிவைக் கெடுப்பதிலும், சுயநலவகையிலும், கடைசி யாக அன்பில் அழுந்துதலிலு மாக இந்த மயக்குகள் இருந்து கொண்டு, நன்மைக்கும்—தீமைக்கும், ஏதுகரமாக உலகத்தை ஆட்டி வருகிற தென்றுசொல்லும்படியாகிறது! இந்த மயக்குகளுக்கு முடிவுநாள் உலகத்தை நாம்விடும் நாள்தான் போலிருக்கிறது. அப்படியா னால் இந்த மயக்குகள் ஒரு சிரஞ் சீவிகள்தான்! அதன் வேலையும் பெரிய மயக்குதான்! ராம்! ராம்! சுபம்! ஶ்ரீ சுவாஹா!!

முதல்
தடவையில்
அநேகமாய் சிக்
கிக் கொள்வதில்லை.

விபசாரமோ, மோசமோ, லஞ்ச மோ, திருட்டுக் கணக்கோ, பண அபகரிப்போ, கற்பழித்தலோ, ஏமாறச் செய்வதோ, விஷமிடுவ தோ, படுகுழிபறிப்பதோ—முதல் தடவை செய்கையில் நிறைவேறி வெளிக்கு வருவதில்லை. அதில் உண்டான தைரியத்தால் பிறகு அதையே அடுத்தடுத்துச் செய்யும் போதுதான் தப்பித்துக்கொள்ளு ம் துணிவு அதிகமாகி அந்த அஜா க்கிரதையில் அகப்பட்டுக்கொள்கி றார்கள்! பின், அடி, கொலை, சிறை!



எவர்கள் ஸதா மற்றவர்கள்மீது கோளும் புகாரும் சொல்லிச் சொந்த மனுஷ்யர்கள்போல் நடிக்கிறார்களோ அவர்களைத்தான் எஜமானனும் வீட்டுத்தலைவனும் மெச்சிக்கொள்வார்களென்று விகட நாரதர் விளம்புகிறார்!

***

கடைக்காரன் தன்னிடம் சாமான்கள் வாங்கவில்லை யென்றல்ல, தன்னிடம் அவர்கள் ஏமாறவில்லையே யென்று தான் அதிக கோபம் கொள்ளுகிறான்!

***

ஒரு பக்கம் லாபசங்கதி நடந்து கொண்டிருக்கையில், மற்றொரு பக்கம் நெடுநாளாகவுள்ள பழய வரும்படியும் போய்விடுகிற சங்கதி தொடருகிறதே அது ஏனென்று ஒருவர் விகடனைக் கேட்க, அது பரமசிவன் படியளக்கிற விசித்திரம் என்று விடை விடுத்தானாம்!

***

ஒருவன் பெரிய மனிதனாவதற்கு அவனுக்கு உயிருக்குயிராயுள்ள பெரியோர்களெல்லாம் கண்மூடிவிட்டால்தான், அவர்களின் ஸ்தானத்தில் இவன் ஏறிக்கொண்டு பெரிய மனிதனாகலாமென்று காலதேவதை விகடனிடம் சொல்ல, இந்தப் பெரிய பதவியைவிட எல்லோரையும் கண்ணுக்கெதிரில் வைத்துக்கொண்டு சின்ன மனிதனாகவே வாழ்வது மேலென்று பதில் கூறினானாம்!

***

மற்றவர்கள் எவ்வளவு ஒட்டினாலும் தன் நெஞ்சு ஒட்டிக்கொள்ளாத இடத்தில் உதட்டுறவுதான் ஊசலாடும் என்று விகட சித்தாண்டி விவரிக்கிறார்!

***

விதவா விவாகத்திற்கு வந்து வாழ்த்திச் செல்லுகிற பெரிய மனிதர்கள் நாளைக்கு அதன் பயனாய்க் குழந்தைகள் பிறந்து கலியாணத்துக்குக் காத்து நின்றால், அதற்கு வழி செய்து கட்டிக் கொடுக்க முன் வருவார்களா அல்லது ஜாடையாய் ஒதுங்கிக்கொள்வார்களாவென்று அவ்விதம் மணம் புரிய எண்ணுகிற ஒருவர் முன்னதாக வினவுகிறார்!

***

வலியச் சென்று சரக்குகளை விற்கப்போனால் அதற்குக் கால்வாசி விலைதான் என்று கடைத் தெருவு கூறுகிறதாம்!

***

ஒரு காரியம் தூர இருக்கையில் எல்லோரும் ஒன்றுகூடித் தூண்டி விடுவார்களாம். அப்பால் அந்தக் காரிய மூட்டையைத் தூக்கிச் சுமந்த பிறகு அந்தப் பளுவைக் கீழே இறக்கிவைப்பதற்குக் கூட எவரும் அகப்படமாட்டார்களாம். எத்தனைக் கடிதம்போட்டு அழைத்தாலும் தலை மறைவாகிவிடுவார்களாம். இவர்களைத்தான் மிகவும் வேண்டிய மனுஷ்யர்களென்று உலகம் நம்புகிறதாம்!

***

---

கோர்ட்டுத் தீர்ப்பு எத்தனைக் கம்பீரமான வாக்கியங்களால் கூறப்பட்ட போதிலும், கக்ஷிக்காரரின் கண் தங்களுக்குச் சாதகமா பாதகமா என்பதையே கவனிக்கும்.

இவன் ஒரு காரிய நினைவுடனே அவனிடம் குலாவி அவனுக்கு வெகு உதவிகள் செய்வதாகச் சொல்ல, அவனும் ஒரு காரிய நோக்குடன் இவனுக்கு விருந்துகள் செய்து உப சாரப் பேச்சுகளாட, கடைசியில் இந்த இரு குள்ள நரிகளும் ஒருவரை யொருவர் வஞ்சிக்க முடியாமல் தங்களின் தந்திரத்தில் தாங்களே ஏமாறிப் போய் கைகடிக்க நேருமாம்.

அகப்பேய் சித்தர் பாடல்.

1

செல்வம்படைத்தவர்க்கேஅகப்பேய்
சீரும் பேரும் கிடைக்தும்
கல்வி படிக்காதே அகப்பேய்
காசைக் கோடுக்காதே.

2

வித்தாரமாக இன்னம் அகப்பேய்
மேன் மேலுஞ் சேர்ப்பதல்லால்
செத்தாலுங் கைக்காசை அகப்பேய்
சிதற விட்டிடாதே.

3

தேடிப் பொருளையெல்லாம்அகப்பே[ய்]
தெரியாமல் சேர்த்து வைத்து
காடிக் கூழைக் குடித்து அகப்பேய்
காலங் கடத்திக் கோள்ளே.

4

மோசஞ் செய்தாலும் அகப்பேய்
முடிச்ச விழ்த்தாலும்
காசுவரும் வழியே அகப்பேய்
கண்டு நடந்து கோள்ளே.

(தொடரும்.)

## சந்தாநேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

ஐந்தாம் வருஷ சித்திரைமாத ஆரம்பத்திலிருந்து இதேமாதிரி பளபளப்புள்ள கிளேஸ் காகிதத்தில் நமது சஞ்சிகைகளை அச்சிட உத்தேசித்திருக்கிறோம். அவ்விதம் அச்சிட காகித செலவு அதிகரிப்பதால் நமது சந்தாநேயர்களால் இயன்றவரையில் சில புதிய சந்தாதார்களை சேர்த்துக் கோடுத்து உதவி செய்யும்படியாய் கோருகிறோம்.

ஒருவரின் குமாரனை சுவீகாரம் எடுத்துக் கொண்டிருப்பவர்கள் அந்த ஒருவரிடம் என்ன சண்டையிட்டு விலகினாலும், கடைசியில் சொத்துக்கள் அந்த ஒருவரின் குமாரனுக்கே. அதாவது அவருக்கே தானே ?

# பழமொழிக் குறிப்புகள்

## 2. அற்ப குணம்.

(193-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 140. அணு மகா மேருவாமா ?

அது எது? அணு எந்த நாளைக்கும் அணுதான். அது மஹா மேரு எப்படியாகும்? அற்பத்தனத்திற்குப் பெரிய புத்தி ஏது? அதிலும் ஒரு சிலருக்கு அற்பத்தன்மை இயற்கையிலேயே ஊறிப்போயிருக்கும். இவர்கள் தப்பித்தவறி சில சமயங்களில் பெரிய புத்தியுடன் நடந்து காட்டுவார்கள். ஆயினும் இது வெகு நேரத்துக்கு நில்லாது. மறுபடியும் அவர்களின் ஜென்ம புத்தியான அற்பகுணத்தை விளக்கிவிடுவார்கள். அவர்கள் சற்று நேரத்துக்கு முன்பு பெருந்தன்மை யுள்ளவர்களாகக் காண்பித்துக் கொண்டதெல்லாம் வெளி வேஷமாய்விடும். இவர்களின் அற்பத்தன்மை அடுத்த நிமிஷத்தில் தானே தெரிந்துபோய் விடுவதால் இவர்கள் தங்களை உயரிய குணத்தோராகக்கொண்டு உலகினரை வெகுநேரம் வரைக்கும் மயக்கமுடியாது. இவர்களைப் பிரமாதமாக நினைத்து மயங்கினோர் வெகு துரிதத்திற்றானே இவர்களின் அற்பத்தன்மையைக் கண்டு மனது கசந்துபோகும்படி யாகிவிடும். இந்த அற்ப புத்திக்காரர்களுக்குப் பிறரது அவசரம், ஆபத்து முதலிய எதுவும் மனதில் தைக்காது. தங்களின் சொந்தக் காரியமே கண்ணாகக் கொள்வர். தங்களை அவர்கள் நம்பிவிட்டார்களென்பதை ஒருசிறிதும் எண்ணார். ஜென்மத்திலேயே அற்பகுணம் படிந்து போயிருக்கிற பெண்கள் எவ்வளவு பெரிய இடத்தில் வாழப்போனாலும், அங்கும் பெரியபுத்தி வாரமல் தங்களின் அற்பத்தனத்தையே காண்பித்துக் கொள்வார்கள். கணவன் எத்தனை அன்புள்ளவனாயினும், கௌரவஸ்தனான மனிதனாயினும், அவனுக்குத் தகுந்தபடி நடந்துகொண்டு அவன் மனத்தைக் குளிரச்செய்ய இந்த அற்பத்துக்குப் பெரியபுத்தி உண்டாகமாட்டாது. அங்கும் கேவலமான விதமாக நடந்துகொண்டு அவன் மனத்தைப் புண்ணாக்கத்தான் தெரிந்திருக்கும். இந்த அற்பத்தினிடம் எவ்வளவு விஸ்வாசமாய் நடந்துகொண்டு ஆதரித்தாலும், அந்த அருமை பெருமைகளை யுணர்வதற்கில்லாதபடி அந்த அற்பத்தன்மை தடுத்துவிடுகிறது. என்றைக்கும் சின்ன புத்தி சின்னபுத்தியாகவே இருக்கும். அற்பமாகிய அணு எந்தக் காலத்துக்குமே மஹாமேரு பர்வதமாகப் போகிறதில்லை.

---

ரயிலில் ஒரு அன்னிய ஆடவனுக்கருகே போய் உட்கார்ந்துகொண்டு தன்னருகில் இன்னொருத்தியையும் உட்காரவைத்துவிட்டு "ரயிலில் நாணியது எல்லாம் போதும்; என்னத்திற்கு இந்த வேஷம்?" என்றாள் ஓர் இளவயதுள்ள * * * * * குலத்தைச்சேர்ந்த மங்கை.

## 141. ஆயிரம் நக்ஷத்திரம் கூடினலும் ஒரு சந்திரனகுமா?

எப்படி ஆகும்? அது ஒரு நாளும் இல்லை. பிரகாசத்தில் சந்திரனுக்கு முன் நக்ஷத்திரங்களின் ஒளி எவ்வளவோ அற்பமானவைகள் என்பது யாருக்குத் தெரியாது? ஆனலும், சந்திரனில்லாத இரவில் இந்த நக்ஷத்திரங்கள் ஒரு சிறு ஒளிவிட்டுக்கொண்டு ஆகாயத்தை அலங்கரிப்பதுண்டு. என்ன அலங்கரிப்பினும் எங்கும் இருள் கவ்வி நிற்குமல்லாமல் வெளிச்சம் சிறிதுமிராது. அதுபோல் போய்விட்ட முதன் மனைவிக்குப் பதிலாகப்பிறகு எத்தனை அற்பங்கள் மனைவிகளாக வந்து வாய்த்தாலும் அந்த முதல் மனைவியின் மேன்மையான ஸ்தானத்தைப் பிந்தியவர்கள் பெறுர். அவ்விதமே காலமாய் விட்டவர்களின் ஸ்தானத்துக்கு எத்தனைபேர் வந்து சரிசெய்தாலும், இந்த நக்ஷத்திரங்களெல்லாம் அந்த மறைந்து போய்விட்ட ஒரு சந்திரனுக்கு இணையாகமாட்டார்கள். இதிலிருக்கிற அற்பத்தன்மையையும் உலகம் உடனே தெரிந்துகொண்டுவிடும். அற்பத்துக்கு இருக்கிற மதிப்பேதான் இங்கும் ஏற்படும். அதற்கு உயர்வு இல்லை.

## 142. பன்றிக்குட்டி யானையாமா? பன்றிக்குட்டிக்கு ஒருசந்தி ஏது?

பன்றிக்குட்டி யானையைப் போலவே நிறத்தில் கறுப்பாயிருப்பினும், யானைக்குள்ள உயர்ந்த குணங்கள் பன்றிக்குட்டிக்கு வருமா? பன்றி மலம் முதலிய அசுத்தங்களை யுண்பதைவிட்டு சுசிகரமாய் விரதம் இருக்கப் பார்த்தாலும் இயற்கையிலேயே சாகபக்ஷணியாய் சுசிகரமாயுள்ள யானையின் அந்தஸ்தைப்பெற முடியுமா? பன்றிக்குட்டியின் அற்பகுணம் எந்த நாளைக்கும் அதைவிட்டுப் போகாது. இவ்விதமே சிற்சில ஜாதிகளுக்குள் சிற்சில அற்ப குணங்கள் இயற்கையிலேயே அமைந்துள்ளன. அவற்றினின்றும் விடுவித்துக்கொண்டு எழுவதற்கு என்னதான் முயற்சிப்பினும், இயற்கையான அற்பகுணமே அடிக்கடி வந்து தலைகாட்டும். பெரிய எண்ணங்களும் சிந்தைகளும் கொண்ட பெரியவர்களுக்கு எந்த நாளும் பெரிய கம்பீரமான தன்மையே இருந்துவரும். அற்பகுணங்களே ஸ்வபாவமாய் அமைந்து விட்டவர்கள் எவ்வளவு பெரிய இடங்களிற் கலந்து பழகினலும் வாழ்ந்தாலும் அவர்களின் ஜென்மகுணம் மாறுவது கடினம்.

## 143. எருமை கோமயம் யக்ஞத்துக் குதவுமா?

பசுவுடன் ஒப்பிட்டுப் பார்த்து எருமை அற்பகுணமுடையதென்று தீர்மானித்தவர்கள் ஹிந்துக்களாகிய நாம் மட்டும்மல்ல, அநேகராவர். அப்படி அற்பமான எருமையின் கோமயம் யக்ஞத்துக்கு எப்படி உதவும்? ஸ்தூலமாய்ப் பார்த்தால் பசுவின் கோமயத்தை ஒத்துத்தான் எருமையதும் இருக்கும். ஆனல் அது அற்பம். யக்ஞத்துக்கு உதவாது யென்றதினல் அற்பம் என்றைக்கும் அற்பம் என்றபடி. இவ்விதமே ஒரு தந்தையின் உயர்ந்த குணசீலங்களைக்கண்டு அவரது மக்களும் அப்படியே இருப்பார்களென்று எண்ணிவிடக்கூடாது. எருமையின் கோமயம்போல் அந்த மக்கள் அற்பர்களாய் இருக்கலாம்.

(தொடரும்.)

---

சரித்திர வாயிலாக—பல பகுத்தறிவில்லாத ஜந்துக்கள் பச்சாத்தாபம், இரக்கம் முதலிய உயர்குணங்களைக் காட்டியதாக அறிகிறோம். அவைகளினும் கேடுகெட்டோராக சட்டைத் தலைப்பாகை தரித்த சிலர் உள்ளார்.

# சென்ற மாதம்

“பாலாறாய் நெய்யாறாய்ப் போட்டவன் தலைசீத்துப் பார்த்துப் பிடிக்கிறது” போலக் கடவுள் சென்ற மாதத்தில் செய்துவிட்டார். தனவைசிய ஸமூகத்துள் பிரதானஸ்தரான ஸ்ரீமான் ஸர். மு. சி. த. முத்தைய செட்டியார் காலமானது ஒரு பரோபகாரியை இழந்ததற்கு ஒப்பாகும். இனி மற்றொன்றான சென்னை ஸ்மால் காஸ் கோர்ட் பிரதம ஜட்ஜ் ஸ்ரீமான் ஓ. தணிகாசலம் செட்டியாரவர்களின் மரணம் ஜஸ்டிஸ் கட்சிக்கே அதன் அரும் பெரும் தலைவருள் ஒருவரை இழக்கச் செய்துவிட்டது. உலகம் காலியாகிக் கொண்டிருக்கிறது. பழைய மனிதர்கள் மறைந்தவாறுள்ளார். அவர்களின் ஸ்தானத்தைப் பூர்த்தி செய்யத் தகுந்தவரைக் காணோம்.

**இரு பெரியாரின் அந்தியம்.**

***

“பாலான நெஞ்சமெல்லாம் பகையாக்கினான்” என்பதாக குடும்பத்துள் நேர்ந்துவிடும் சச்சரவுகள் அநந்தம். இதிலே சொந்த ஸ்திரீ சோரநடத்தை யுள்ளவளாய் மற்றவர் தன்னிடம் நெருங்க இடம் தந்து தன் கணவனுக்கும் மற்றவர்க்கும் பகையை உண்டாக்கி விடுவது போன்ற குடும்பச் சனியன் வேறில்லை. பாலான நெஞ்சமும் அங்கு பகையாகிவிடுகிறது. நீலிதநல்லூரில் அருணாஜலத் தேவன் தன் மனைவியுடன் தன் சகோதரன் சோரநட்பு கொண்டிருந்தானென்று 21-2-29-ல் அவனைக் குத்திக்கொன்றதாய்த் தீவாந்திர சிக்ஷை யடைந்தான். ஒரு பெண் தன் நெறி பிறழ்ந்த ஒரு தன்மை குடும்பத்திற்கே நாசம் விளைத்துவிட்டது. சகோதரர்களுக்குள் ஸ்திரீ ஸம்சயங்கள் மிகும்படியான ஸம்பவங்கள் நேர்வது துக்ககரம்.

**ஒரு பெண்ணால் இரு குடும்பம் பாழ்.**

***

“புருவத்தில் பட்டால் கரிக்குமா கண்ணிற்பட்டால் கரிக்குமா?” என்று டாக்கா சர்வகலாசாலையின் உபசான்ஸலர் ஏதோ ஒன்றில் ஆக்ஷேபித்த மாணவன் விஷயத்தில் யோசித்துப் பார்த்தார். கண்ணில்பட்டால்தான் கரிக்குமென்று அவருக்குத் தெரிந்தது. அவ்விதமே கண்ணில் படும்படியான விதமாய் அந்த மாணவனை ஜனாப் ஏ. கே. ரஹிமானை சட்ட பரீக்ஷைக்கு வராதவாறு தடுத்துவிட்டார். அதன் பின் மாணவன் அவர்மீது வழக்கு தொடர, முனிசீப் அந்த மாணவனைச் சேர்த்துக்கொள்ளாமல் பரீக்ஷை நடத்தக்கூடாதென்று உத்திரவிட்டார். இதன்மேல் உபசான்ஸலர் அப்பீல் செய்துகொள்ள, அதை அடிஷனல் ஜட்ஜ் தள்ளிவிட்டு,—“ஒரு மாணவனை ஸர்வகலாசாலையிலிருந்து சாஸ்வதமாக விலக்கிவிட உபஸான்ஸலருக்கு அதிகாரம் இல்லை; அவ்வாறான சிக்ஷை விதிப்பது அந்த மாணவனுக்கு அவனது கல்வி சம்பந்தப் பட்டமட்டில் மரண தண்டனை விதிப்பது போலாகும்”—என்று தமது தீர்ப்பில் குறிப்பிட்டார். கூடை கூடையாக எவ்வளவோ கல்வி பெற்றிருந்தும் துவேஷ புத்தி ஒழியக் காணோம்! என்னே மாந்தர் நிலை!

**ஒரு கலாசாலைத் தலைவரின் துவேஷம்.**




# கல்வியின் உயர்வு.

கல்வியே! மக்கடங் கண்ணே! புலவர்தஞ்
செல்வியே! மனத்தின் செவ்விய வுணவே!

நின்னொடு பயிறன் மன்னிய மாந்தர்
தமக்கும் பிறர்க்குந் தனிப்பே ரின்பங்

கரும்பயி றற்குக் கைக்கூலி போலத்
தரும்பொரு ளே! உயர் தகைமுத்தி வித்தே!

பரந்த பாரினும் விரிந்த வானினும்
எண்டிசை யின்கணும் பண்டிசை போகிய

பாவலர் நூலினும் பரிவுடன் மேவி
ஆவலின் விளையாட் டயர்தரு மங்காய்!

கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கேதுவுநன் னாடே யெதுவுநல் லூரே

ஆகவு மென்கோ லநேகர்
ஊக மின்றிநா ளுலப்பவிட் டனரே.

பரிதிமாற் கலைஞர்.

II

# நந்தமிழ் மாது

நந்தமிழ் மாது முந்துறும் பெற்றி
யிழந்தா ளாத லினிநா மனைவரும்
விழைந்து செயும்பெரு வினையொன் றுளது
தருநன் முயற்சி திருவினை யாக்கும்

---

தாங்கள் வரைந்த நூலைப்பற்றி எவ்வளவு சிலாகித்துக் கூறினும், அதைப் படித்தவருடைய அபிப்பிராயமே கவனிக்கத்தக்கதா யிருக்கும்.

அண்டரா லாகா தாயினு முயற்சி
கொண்டமெய் வருத்தக் கூலியே னுந்தரும்
ஒருதமிழ் மாதின் கருவி லுதித்த
நாமனை வோரு நம்மா லியன்ற

தாமதைப் புரித லன்றோ மேன்மை?
பெற்றநா மனைவரு முற்றிங் கிருக்க
நந்தமிழ் மாது நொந்து தளர்ந்தோ
ராதர வின்றிச் சாதற் பருவத்

திருப்பது கண்டும் விருப்பமா யொன்றும்
விரைந்து புரியா திருந்திட லழகோ?
தருமறை யீசன் சமைந்து நமக்கு
மிருகண் படைத்த திதற்கே யன்றோ?

இக்கா ணுமிருந் தெடுத்தா தரியமே
லெக்கா லாதரித் திடுவம்? இயம்புவீர்!
வடமொழி யீண்டுப் படும்பா டறிவம்
செற்றூர் தமிழை யுற்று ரேழுப்புவர்?

தருண மிதுவெனக் கருணைகூர்ந் தேனு
நந்தமிழ் மாதைச் சிந்தையா னினைந்து
போற்றத் தருகிற் றேற்றுயிர் பிரிந்து
வருந்திய பின்னர் மருத்துவற் கொணர்ந்த

கதையாய் முடியும்; இதில்வரும் பழியோ
நம்பா லணுகும்; அன்பா யிருந்த
தாயினைச் சிறிது மேயெண் ணாது
தளர்தலைக் கண்டும் வளர்தரு மைந்த

ரடுத்தொரு கவலை யெடுக்கா தோய்ந்தன
ரென்றே யுலகோ ரிசைக்கி னலமோ?
இன்றே முதலா யியற்றுவ நம்மால்
லாவதை நமக்குத் தேவனுந் துணைசெய்வர்

வேதனை யடுத்து மிகுந்தா யோங்கலைக்
காதலாய் நோக்காக் கண்ணு லென்பயன்?
தனங்கொடுத் தூட்டிய தாயின் புகழைத்
தினமுங் கேளாச் செவியா லென்பயன்?

கருதருஞ் சங்கங் கண்டதாய் பாலி
னொருமுயல் வில்லா வுடலா லென்பயன்?
உற்றநங் கலையாற் பெற்றதோ வென்னு
மெனுந்தமிழ்த் தாய்ப்பெய ரினிமை யன்றோ?

## III

### தமக்கையின் பிரிவு.

**1**

எனைநீ தனித்து விடவே நினைத்த
தேனையோ? வழுத்தி; பெரியோய்!
அனமே நினைக்கேள் ளளவும்பி ழைத்த
தறியே னிரக்க மிலையோ?
உனைநான் வெறுத்தே னெனநீ நினைக்கி
னுயிரே விடுப்ப னறிவாய்;
இனியா ரெனக்கு நலமே இயற்ற?
இதுவோ தமக்கை இயல்பே!

**2**

தொடர்புடைஇவ் வுலகுநனி துறந்துநறுந்
துளவனடித் தூய நீழ
லிடைவதியச் சென்றனைநீ என்றாலும்
நின்பிரிவால் ஏங்கி ஏங்கிக்
கடல்மடைவிண் டதுபோற்கண் ணீர்உகுக்கும்
எம்மைஎலாம் கண்டும், எங்கள்
படமுடியாத் துயரொழிய ஒருமொழியா
யினும் எமக்குப் பகரோ ணதோ?

## IV

### அன்பரின் பிரிவு.

விலையில்லா வெண்முத்தே விளங்குமெழிற் சுந்தரனே
கலையெல்லாம் பொருந்துகிற்குங் கட்டழகார் பெருமானே
சிலையெல்லா முருகநறுந் தீம்பாட லிசைப்பானே
கோலையெல்லா நிகழ்த்துகின்ற கொடுங்கூறிற் குடைந்தாயோ?

---

# பிரஜாநுகூலன்

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு பத்திராசிரியர்.

இது நாவல்கள் நிறைந்த அநுபவக் களஞ்சியமான சிறந்த மாதப் பத்திரிகை **1904**-ம் வருஷ முதல் **25**-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. வெகு ருசிகரமான அநுபவங்களுடன் அதி சிலாக்கியமாயிருக்கும். பக்கங்கள் **32**.—"அமிர்தகுண போதினி" நேயர்கள் அதன் ஆசிரியர் நடத்தும் பழமையான இப் பத்திரிகையையும் ஆதரிப்பது அவசியம். வருஷ சந்தா ரூபாய் **1**.

**மானேஜர், "பிரஜாநுகூலன்" ஆபீஸ், ஸ்ரீரங்கம்.**

---

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.